# கல்கி

KALKI 6.4.97 ரூ. 3.00

வயது!
— மூப்பனார்
ஸ்பெஷல் பேட்டி!



## அருணாச்சலம் *at* ஹைதராபாத்!

EXCLUSIVE

# மனநிம்மதியான முதலீடு - பரிபூரண பாதுகாப்பு (TM)

உங்கள் டெபாசிட்டுகள் T. நகரில் உள்ள பிரதான அசையா சொத்தால் (டோர் நம்பர் 27சி, பிளாக் 5488/1, ராமேஸ்வரம் ரோடு) பாதுகாக்கப்படுகின்றன.

| படித்த அனுபவம் மிக்க நிபுணர்களின் சீரிய நிர்வாகம் | கௌரவமான வருமானம் | மரியாதையான சேவை |
|---|---|---|

வங்கியல்லாத கம்பெனிகள் (ரிசர்வ் பேங்க்) வழிமுறைகள் 1977, பகுதி - 1 விதி - 3 உபவிதி - Xiஇன் கீழ் விதிவிலக்கு அளிக்கப்பட்டது.

**REGISTERED EDUCATIONAL TRUST NO. 1488.**

**In Education from 1979**

நமது மாணவர்களின் எண்ணிக்கை மதிப்பீடு: வருடத்திற்கு 1 லட்சம் பேர்.
150 பேராசிரியர்கள் சேவை செய்கிறார்கள்.

நடத்தப்படும் படிப்பு பயிற்சிகள் IAS, IPS, IIT, BE, MBBS, BL, MBA, AIPMD, SSC, AMIE, Chartered Manager Courses, TNPSC, Spoken English/Hindi, BSRB, RBI, SBI, LIC, GIC, Computer courses, GMAT, TOEFL, etc

## வாடிக்கையாளர் வசதி திட்டம்: (TM)

30 தினம் 18% PA, 45 தினம் 19% P.A.
60 தினம் 20% PA, 90 தினம் 21% P.A.

எப்போது வேண்டுமானாலும் பணம் எடுத்துக் கொள்ளலாம். புதுப்பிப்பதற்காக வர வேண்டிய அவசியமில்லை.

## மாதப் பென்ஷன் திட்டம் (TM)

| டெபாசிட் | காலம் | மாதவட்டி ரூ. |
|---|---|---|
| 5000 | 1 வருடம் | 125 |
| 10000 | 1 வருடம் | 250 |
| 10000 | 3 வருடம் | 300 |
| 10000 | 5 வருடம் | 320 |

வருமானவரி இல்லை * வருமானவரி இல்லை * வருமானவரி இல்லை

**சேமிப்பு கணக்கு: 15%P.A. தினசரி புராடக்ட், மாதாமாதம் வரவு.**

**சட்ட ஆலோசகர்**
ஸ்ரீ V.S. சந்திரசேகரன், B.A;B.L.
அட்வகேட், உச்சநீதி மன்றம்,
26, ரங்கநாதன் தெரு, சென்னை - 17.

**ஆடிட்டர்**
M/S. வேல் முருகன் அண்ட் கோ
சார்ட்டர்ட் அக்கவுண்ட்டன்ட்ஸ்
30/A 2 பர்கிட் ரோடு, சென்னை - 17.

**ஆல் வேல்டு அக்கவுண்டிங் அட்மினிஸ்ட்ரேடிவ் அண்ட் டெக்னலாஜிகல் அகாடமி(AAAAA)**
**All-World Accounting Administrative and Technological Academy.**

தலைமை காரியாலயம்: "வித்யாலயா", 27சி, ராமேஸ்வரம் ரோடு, மாம்பலம் ரயிலடி சமீபம், Next to DAV School, T. நகர், சென்னை - 17.
கிளை: 7, முதல் மாடி, ஸ்டேஷன் ரோடு, தாம்பரம் சானடோரியம், சென்னை - 47.
கிளை: 5, 2வது மெயின் ரோடு, திரு காலனி, குரோம்பேட்டை, சென்னை - 44.
கிளை: 13, காலேஜ் ரோடு, நங்கநல்லூர், சென்னை - 114.

**Sunday Working Day**

MUMBAI : 1, Deepal Apartments, Jain Hind Colony, Gupte Road, Dombivli West - 421 202.

உங்கள் வீட்டிற்கும் வந்து சேவை செய்கிறோம். போன் : 4348560, 4347025.
AAAAA — பாதுகாப்பின் சின்னம்.

Prof. V. விவேகானந்த்
B.Com, (Distn), DOA, MBA (Distn), CAIIB
(All India First), EKSAMD (Germany)
(Distn), B.L.
**Managing Trustee.**

சொத்து பாதுகாப்பு, மாத வட்டிக்கும், அசலுக்கும் முன்கூட்டியே செக்.

Dr. பரமேஸ்வரி, MBBS,
**Managing Trustee.**

(TM) :Trade Mark

# “மாறுவேடம் போட்டேன்; மாட்டினாள் கொலைகார!”

அருகிலிருக்கும் படத்தைப் பாருங்கள். முன்னாள் சினிமா ஸ்டார் அல்லது இந்நாள் (இந்தி) டீவி ஸ்டார் என்று எண்ணத் தோன்றுகிறதா?

இரண்டுமில்லை. இவர் இந்தியாவின் முதல் பெண் துப்பறியும் நிபுணி. பெயர் ரஜனிபண்டிட். நெரிசல் மிகுந்த மும்பை தாதர் பகுதி அடுக்குமாடிக் குடியிருப்புகளில் ஒன்றில் வசிக்கிறார். அருகிலேயே இவரது அலுவலகம்.

கொஞ்சம் வித்தியாசமான துப்பறியும் பெண்மணி இவர். பணிக்கு இடையூறு கூடாது என்பதனால் திருமணமே செய்து கொள்ளாதவர் என்ற ஒரு உதாரணம் போதும். முன்னாள் போலீஸ் அதிகாரியின் மகளான இவருக்குத் தொழிலில் தன் தம்பியுடன் சேர்த்து, பத்து உதவியாளர்கள். பால்தாக்கரே, அஷோக் ஸராஃப் இன்ன பிற வி.ஐ.பி.க்களுடன் ஃபோட்டோவில் சிரிக்கும் படங்கள் இவரது அலுவலக அறையில் நிறைந்திருக்கின்றன. நேரிலும் சிரித்தபடி கல்கிக்குப் பிரத்யேக பேட்டிஅளித்தார் ரஜனி.



“உங்கள் துப்பறியும் திறமையை எப்படி அடையாளம் கண்டுகொண்டீர்கள்?”

“நான் ஒன்பதாவது படிக்கும்போது, உறவினர் திருமணத்தில், பெண் வீட்டார், ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் பாத்திரங்களுக்குப் பதில் ஸ்டீல் பாத்திரங்களையும், தங்க நகைகளுக்குப் பதில், வெள்ளியில் தங்கமுலாம் பூசப்பட்ட நகைகளையும் வைத்திருந்த ‘கண் நாவி’யை அம்பலப்படுத்தினேன். ருபாரல் காலேஜில் படிக்கும்போது, அடிக்கடி ‘கட்’ அடித்த பெண் ஒருத்தி, ‘கால் கேர்ள்’ ஆக வேலை செய்த அவலத்தைக் கண்டுபிடித்தேன். நண்பர் ஒருவர் தன் தங்கைக்கு நிச்சயித்த ‘வரன்’, ஏற்கெனவே கல்யாணமான கேஸ் என்பதையும் விசாரித்தறிந்தேன். அந்த நண்பர் ஒரு மராத்தி பத்திரிகையாளர் என்பதால், இந்த விஷயத்தைப் பிரபலப்படுத்தி, என் துப்பறியும் தொழிலுக்கு வித்திட்டார்.”

“பெண்களால் ரகசியத்தைக் காப்பாற்ற முடியாது என்பார்களே...? உங்களால் எப்படி இந்தத் துறையில் நிலைத்திருக்க முடிகிறது?”

“பெண் என்பதே ஒரு வசதி! வருகிறவர்கள் என்னிடம் தயக்கமின்றி, மனம் விட்டுப் பேசுகிறார்கள். என்னிடம் எத்தனை ரகசியங்கள் பொதிந்து கிடக்கின்றன தெரியுமா? சில அரசியல்வாதிகள், சினிமாக்காரர்கள் எல்லோரும் எனக்கு எக்கச்சக்க பணம் தருவதாகச் சொல்லி, விரோதிகளைப் பற்றிய விவரங்களைக் கேட்டு நச்சரித்திருக்கிறார்கள்; வாயைத் திறக்க மாட்டேனே!”

"எந்த வகையான கேஸ்களை நீங்கள் எடுத்துக் கொள்கிறீர்கள்?"

"பில்டர் – டெனன்டு கசமுசாக்கள், நிலத்தகராறுகள், வேலைக்குப் போகும் பெற்றோர் – தனியே இருக்கும் இளசுகள் பற்றிய நடவடிக்கைகள், கணவன் – மனைவி சந்தேகங்கள், மாரேஜ் ப்யூரோவும் நான் நடத்துவதால் 'வரன்' பற்றிய விசாரிப்புகள்– இப்படிப் பல தரப்பட்டவை வருகின்றன. 'கிரிமினல்' கேஸ்கள் பெரும்பாலும் வருவதில்லை!"

"அரசியல் தொடர்பாக துப்பு துலக்கியதுண்டா?"

"சொந்த வாழ்க்கையில் ஏற்படும் சில சிக்கல்களை அவிழ்க்க அரசியல்வாதிகள் என்னை நாடியிருக்கிறார்கள். தேர்தல் சமயங்களில் தங்கள் கட்சியின் செல்வாக்கை, கிடைத்த அல்லது கிடைக்கக்கூடிய ஓட்டுக்களின் நிலவரம் பற்றியும் என் மூலம் தெரிந்து கொள்வார்கள். நடந்து முடிந்த BMC தேர்தலில் என் கணிப்பு சரியாயிருந்தது."

"பொதுநல நோக்குடன், நீங்களாகவே ஏதாவது வழக்கை எடுத்துக் கொண்டு துப்பு துலக்கியதுண்டா?"

"பிறர் விவகாரங்களில் அனாவசியமாக மூக்கை நுழைப்பது தவறு! ஆனால் முக்கிய 'க்ளூ' கிடைத்தால் சம்பந்தப்பட்டவர்களுக்கு தெரிவிக்கத் தயங்குவதில்லை."

"ஆச்சர்யத்தில் ஆழ்த்திய வழக்கு ஏதும் உண்டா?"

"ஒரு பெண் தன் பத்து வயதுப் பையனை யாரோ கடத்திக் கொண்டு போய்விட்டதாகப் புகார் செய்திருந்தாள். தீவிரமாகத் துப்பு துலக்கியதில், மஹாபலேஷ்வரில், ஒரு சிநேகிதியின் வீட்டில், இந்தப் பெண்மணியே தன் குழந்தையை அடைத்து வைத்திருந்த விவரம் தெரிந்தது! காரணம், தினமும் ஒரு 'அங்கிள்' வந்து, தன் அம்மாவுடன் அளவளாவுவதை 'அப்பா'விடம் சொல்லப் போவதாகக் குழந்தை மிரட்டியதுதான்!"

"இந்தத் தொழிலில் மாறுவேடமெல்லாம் போட வேண்டி வருமா?"

"ஏனில்லை? ஒரு 'மர்டர்' கேஸ்; சம்பந்தப்பட்ட பெண்மணியின் வீட்டில் 'வேலைக்காரி'யாக வாரக் கணக்கில் பணிபுரிந்தேன். கடைசியில்தான் தெரிந்தது, கணவனை இழந்த அந்தப் பெண், கள்ளக் காதலனுடன் தொடர்பு வைத்திருப்பதை பிள்ளை எதிர்த்து, சொத்து தர முடியாது என தகராறு செய்ததால், அவளே தன் பையனைக் கொன்றுவிட்டு, போலீசில் புகார் கொடுத்திருக்கிறாள் என்று!"

"வேறு குறிப்பிடும்படியான கேஸ்கள் ஏதும்...?"

"சமீபத்தில் ஒரு பத்திரிகையில் என்னைப் பற்றிப் படித்துவிட்டு ஒரு பெண் தமாஷாக என்னிடம் வந்து, ஒரு குறிப்பிட்ட ஆணைப் பற்றிய தகவல்களை அறிந்து சொல்லச் சொன்னாள். நானும் அவன் திருமணமானவன், ஒரு ஆண் குழந்தைக்குத் தந்தை, மனைவி இன்ன இடத்தில் வேலை பார்க்கிறாள் போன்ற விவரங்களை சேகரித்துத் தந்தேன். அவளுக்குத் தூக்கிவாரிப் போட்டது! அப்புறம்தான் தெரிந்தது. அந்த ஆண் அவள் கணவன் என்று! தன் கணவனைப் பற்றிய விவரங்களை நான் சரியாகச் சொன்னால் எனக்குப் பாஸ் மார்க் போடவும் என்று அவள் என்னைத் துப்பறியச் சொல்லியிருக்கிறாள்! ஆனால் நான் துப்பு துலக்கிக் கண்டுபிடித்த மனைவி வேறு, மகன் வேறு; (இவளுக்கு ஒரு மகள்தான்!) இவளுக்கு சந்தேகமே வராமல் வேறு ஒரு பெண்ணுடன் குடும்பம் நடத்திக் கொண்டிருந்த அந்தக் 'கணவனி'ன் குட்டு வெளிப்பட்டது அலாதியானதுதான்!"

"அநுசரி, உங்கள் ஃபீஸ் எப்படி...?"

"ஒருநாளுக்கு 1200–1500 வரை ஆகலாம்! ஒன்றிரண்டு மணி நேரங்களில் முடிந்துவிடும் கேஸ்கள் உண்டு! சில ஆறு மாதம், ஒரு வருடமென இழுத்தடிக்கும்; சில பொடிநடையில் முற்றுப் பெறும்; சிலவற்றுக்கு காரில் பறக்க வேண்டிவரும்; இதை எல்லாம் அனுசரித்து ஃபீஸில் ஏற்றத்தாழ்விருக்கும்; குறிப்பிட்ட தொகையை முன்பணமாகப் பெற்றுவிடுவோம்!"

"உங்கள் புகைப்படம் பிரசுரமானால், உங்கள் 'ஐடென்டிடி' தெரிந்து விடாதா?"

"ஃபோட்டோவில் பார்த்தால் ஜெயப்ரதா மாதிரி இருப்பேன்; நேரில் அப்படியா இருக்கிறேன்? (சிரித்துக் கொண்டே) அதெல்லாம் அவ்வளவு சுலபமாக அடையாளம் தெரியும்வண்ணம் உலவ மாட்டேன்!"

"சந்தேகத்தின் அடிப்படையில் ஒருவர், தன் மனைவியைப் பற்றி துப்பறியச் சொல்கிறார் என வைத்துக் கொள்வோம்; திருமணத்திற்கு முன் அவளுக்கு ஒரு காதலன் இருந்தது தெரிய வருகிறது; ஆனால் இப்போது அந்தப் பெண் ஒழுங்காகக் குடும்பம் நடத்துகிறாள். நீங்கள் கண்டறிந்த உண்மையை அந்த மனிதரிடம் வெளியிடுவீர்களா? மாட்டீர்களா?"

"மாட்டேன்! அனாவசியமாக ஒரு குடும்பத்தைக் கலைப்பதில் யாருக்கு, என்ன லாபம்? அந்தப் பெண் இப்போதும் தகராறு செய்து கொண்டு, கணவனுக்கு இன்னல்கள் விளைவித்தால் மட்டுமே உண்மையை வெளியிடுவேன்!"

ரஜனியின் துப்பறியும் அனுபவங்கள் ஒரு டாக்குமென்டரிப் படமாகத் தயாராகி வருகிறது. தவிர தம் அனுபவங்களை ஒரு புத்தகமாகவும் எழுதியிருக்கிறார் இவர்!

– ஜேயார்



# 'புலனாய்வு'ப் புகைப்படத்தின் பின்னணி என்ன?

இதுவரை அடக்கி வாசித்துக் கொண்டிருந்த ஜெ., இன்று ஆர்ப்பரித்து செயல்படத் துவங்கியிருக்கிறார். காரணம் அந்த பிகபிகத்துப் போன 'புலனாய்வு'ப் புகைப்படம். 'தனு'வான தாட்சாயிணியும், 'சிவராஜ்'னான நஞ்சே கவுடரும் ஜெ.வுக்கு இருபக்கத்திலும் நின்று போஸ் கொடுக்க வைத்து புலனாய்வுப் பத்திரிகைகளின் முகத்தில் கரியை அள்ளிப் பூசி விட்டார் ஜெ. "பெரிய சதி நடந்திருக்கிறது. தமிழக அரசின் விசாரணை மீது எனக்கு நம்பிக்கை இல்லை. சி.பி.ஐ. விசாரணை நடத்த வேண்டும்" என்றும் கோரியிருக்கிறார் ஜெ. (இவரேதான் முன்பு ஆட்சியிலிருந்தபோது "சி.பி.ஐ என்ன வானத்திலிருந்து குதித்ததா?'' என்றும் கேட்டார்.)

அது சரி, பத்திரிகைகளுக்கு புகைப்படத்தைக் கொடுத்தது யார்? என்ன காரணத்துக்காகத் திடீரென்று இதை எடுத்து இப்போது கொடுத்தார்கள்? இத்தனை பெரிய விஷயத்தை தீர ஆராய்ந்து பார்க்காமல் பத்திரிகைகள் பிரசுரித்தது ஏன்? ஏகப்பட்ட கேள்விகள் எழுகின்றன.

புகைப்பட விவகாரத்தில் கலைஞர் அரசு மீது ஜெ. பழி போடுவதைக் கண்டு நகைக்கிறார்கள், கழகத்திலுள்ள முக்கியப் பிரமுகர்கள். "வெளியிட்ட பத்திரிகைகள் எல்லாம், நடுநிலைப் பத்திரிகைகள் என்று சொல்லிச் செயல்படுபவை. அவற்றை நாங்கள் எப்படி 'இன்ஃப்ளுயன்ஸ்' செய்ய முடியும்?" என்றார் ஒரு கழகப் பிரமுகர்.

"ஆளும் கட்சிக்கு ஆதரவாகவும், எதிர்க்கட்சிகளின் செல்வாக்கைக் குறைக்கும் விதத்திலும், சில சமயம் மாநில, மத்திய உளவுத்துறையினர் சில செய்திகளையும் படங்களையும் 'விதைப்பதுண்டு'. சில சமயங்களில் ஆளுங்கட்சியின் செல்வாக்கைக் குறைப்பதற்கு எதிர்க்கட்சிகளும் இப்படிச் செய்வதுண்டு. இப்படி விதைக்கப்பட்ட படமாகக்கூட இது இருக்கலாம். பாவம்! பத்திரிகைகள் பலியாகிவிட்டன. 'scoop' செய்தியை யார் முந்திக் கொடுப்பது என்கிற போட்டியில் யோசித்துச் செயல்படும் போக்கே பத்திரிகைகளில் அடிபட்டுப் போய்விட்டது!" என்று வருத்தப்பட்டார் மூத்த பத்திரிகையாளர் ஒருவர். (இன்னொரு புலனாய்வுப் பத்திரிகைக்குப் படம் கிடைத்தும் அது வெளியிடவில்லையாம்!)

இந்தச் சூழ்நிலையில், ஏற்கெனவே 1989-ம் ஆண்டு தி.மு.க. ஆட்சியில் நடந்த நிகழ்ச்சியைச் சிலர் சுட்டிக் காட்டுகின்றனர். (சசிகலா) நடராஜன் வீட்டில், ஜெ.வின் சட்டமன்ற ராஜினாமாக் கடிதம் போலீஸால் எடுக்கப்பட்டது. அந்த விவகாரத்தில் கலைஞர் அரசின் பெயர் கொஞ்சம் ரிப்பேரானது. "கிட்டத்தட்ட அது போன்ற சம்பவமாக இல்லாவிட்டாலும், ஏதாவது ஒரு சிக்கலில் கலைஞர் அரசை மாட்டிவிட்டு, அந்தச் சிக்கலின் மூலம் ஜெ.வின் செல்வாக்கை உயர்த்தவே இந்தச் சதி நடத்தப்பட்டிருப்பதாகவும் சொல்கிறார்கள்.

"குறிப்பாக, பத்திரிகைகள் ஜெ.வின் ஊழல்களை அம்பலப்படுத்துவதில் முன்னணியில் நிற்கின்றன. 'பத்திரிகைகள் சொல்வதெல்லாம் கப்ஸா' என்ற வாதத்திற்கு வலுவூட்டுவதற்காகவே இது போன்ற சம்பவத்தை யாராவது திட்டம் போட்டு அரங்கேற்றி இருக்கலாம். அது அந்த 'தில்லையம்பல நடராஜனுக்குத்தான் வெளிச்சம்!" என்கிறார் சிவபக்தர் ஒருவர்.

— தில்லப்பா

"எனக்கு வயது இருபத்தாறுதான் சார்! சொன்னா யாரும் நம்ப மாட்டேங்கறாங்க. ஆளைப் பார்த்ததுமே, 'என்ன ஒரு முப்பது வயசு இருக்குமா? கல்யாணம் ஆயிடுச்சா? எத்தனை குழந்தைங்க'ன்னு கேக்கறாங்க. பேசாம எஸ்.எஸ்.எல்.ஸி. சர்ட்டிபிகேட்டை எப்பவும் கையோட வெச்சிக்கலாமான்னு யோசிக்கிறேன்..."



– பாரியின் சோகம் இந்த முதல் பேரா! சித்ரமகால் கிருஷ்ணமூர்த்தி யின் மகன்கள் தயாரிக்கும் 'தினந்தோறும்' என்ற படத்தில் ஹீரோ முரளிக்கு நண்பர் வேடத்தில் அறிமுகமாகிறவர்!

பாரி பிறந்து, வளர்ந்து, படித்ததெல்லாம் மதுரையில்.

'சென்னைக்கு இடம்பெயர்ந்தது தணியாத சினிமா தாகத்தால்' என்று பொதுவாக அப்படி வருபவர்கள் சொல்வார்கள்.

இவர் விஷயம் வேறு. பாரியின் அப்பா, மதுரையில் பேராசிரியராக இருந்தவர். தொழிலை மாற்றிக் கொண்டு அவர் சென்னை வந்து விட்டதால் இவரும் உடன்வர வேண்டியதாகி விட்டதாம்.

"வேறு வழியில்லை. அப்பா போகிற இடங்களுக்கெல்லாம் நானும் போய் ஆகவேண்டும். அவருக்கு, பி.ஏ., கார் டிரைவர் எல்லாம் நான்தான்" என்கிறார்!

அதெல்லாம் சென்னை வந்த புதிதில். இப்போது பாரி முழு நேர நடிகர்.

"முதல் சினிமா என்ட்ரி இதுதான்னாலும் மௌனம்னு ஒரு மலையாள மூவி சீரியல்ல நடிச்சிருக்கேன்" என்பவர், தம் குடும்பத்தில் தனக்கு மட்டும் ஏன்



இந்த சினிமா ஆசை வந்தது என்பதற்கு சரியான காரணம் தெரியவில்லை என்கிறார்.

"அப்பா சில நாடகங்கள் எழுதி, நடிச்சிருக்கார். மதுரைல இருந்தப்ப, அவர் நாடகத்துல சௌஸ். ஜெயராமனெல்லாம் கூட பின்னணி பாடியிருக்கார். ஒருவேளை அதன் தொடர்ச்சியா எனக்கு இந்த ஆசை வந்துடுச்சோ என்னவோ!"

பாரியின் மூத்த சகோதரர்களில் ஒருவர் ஐ.ஏ.எஸ். ஆபீசர். இன்னொருத்தர் வங்கி அதிகாரி. அக்கா படித்தது எம்.ஃபில். (இவருக்கு சமீபத்தில்தான் திருமணம் நடந்தது!)

"குடும்பத்துல எல்லாரும் பெரிய படிப்பாளிங்கதான். எனக்கு மட்டும் ஏனோ படிப்புல ஆர்வம் இல்லை. கரஸ்பாண்டன்ஸ் கோர்ஸ்ல பி.ஏ. வரலாறு படிச்சேன். தவிர வீடியோகிராஃபில டிப்ளமா வாங்கியிருக்கேன். அவ்வளோதான். நடிச்சி, நல்ல பேர் வாங்கணும். அதான

> **"நிச்சயம் அரசியலுக்கு வருவேன். ஆனா எப்போன்னுதான் தெரியலை!"**
> **– ரஜினி பாரி**

லட்சியம்" என்கிறார் அமைதியாகச் சிரித்தபடி.

ஹீரோவுக்கு நண்பனாக அல்லாமல் – கொஞ்சம் காத்திருந்து ஹீரோவாக முயற்சி செய்திருக்கலாமே என்று கேட்டால், "ஐயய்யோ, எனக்கு ஹீரோவா நடிக்கத் துளிகூட விருப்பம் கிடையாது! வில்லனா நடிக்கத்தான் ஆசை. என் நண்பர் நாகராஜ்தான் இந்தப் படத்து டைரக்டர்; அவர்கிட்ட கேட்டு வில்லனா வேஷம் வாங்கியிருக்கலாம்... என் நேரம்... கதைப்படி வில்லன்னு இந்தப் படத்துல

# ஒரு வில்லன் கதை!



# மங்கையர் மலர்

ஏப்ரல் '97



- கோடை வந்தாச்சு குடிநீர் சுத்தம் தேவை!
- ஆண்கள் செய்யும் சர்க்கஸ்!
- உங்கள் குழந்தை எழுதத் திணறுகிறதா?
- சர்வலோக நாயகி; சர்வாங்க சுந்தரி!
- வண்ண வண்ணமாகக் கூந்தல்!

யாருமே கிடையாது! அதான் ஹீரோவுக்கு ஃப்ரெண்டா வரேன். அதுவும் நாலு நண்பர்கள்ல ஒருத்தன்."

"ஐயோ. மறுபடி நாலு நண்பர்களா.... எத்தனை படம் சார் இதே ஃபார்முலாவுல?" என்றபோது, "என்னங்க பண்றது? ஒருத்தன் காதலிச்சாலும் உதவி பண்ண நாலு நண்பர்கள் இருக்கறதுங்கறது இயல்புல நடக்கற விஷயம்தானே. காதலையே விடுங்க. பஸ் ஸ்டாண்டுல சும்மா நின்னு, சைட் அடிக்கக் கூட எவன் தனியா போறான்? நாலு பேரோட போறதுதான் சுகமா இருக்கும்!"

"உங்கள் வீட்டில் நீங்கள் சினிமாவில் நுழைய எப்படி சம்மதித்தார்கள்?"

"எனக்கு ஒரு கஷ்டமும் இல்லை. என் அப்பாவும் சரி; அம்மாவும் சரி. தடை பண்ணலை. ஏதாவது ஒரு துறை. சாதிச்சி, பெரிய ஆளா வர்றதுதானே முக்கியம்? ஆனா ஒண்ணு. நானே பெண்ணா பிறந்திருந்தேன்னா எங்கப்பா, இதுக்கு சம்மதிச்சிருப்பாராங்கறது கேள்விக்குறிதான்!" என்கிறார் உரக்கச் சிரித்தபடி.

**பா**ரியின் அப்பா, தி.மு.க.காரர். கலைஞருக்கு ரொம்ப வேண்டியவர். அவரைப் போலவே உங்களுக்கும் அரசியலில் ஈடுபாடு உண்டா என்று கேட்டால் "இல்லாமல் எப்படி? அப்பாவுக்கப்புறம் நான்தானே எங்க குடும்பத்துல - அவர் பேரைக் காப்பாத்த அரசியலுக்கு வந்தாகணும்? ரெண்டு அண்ணன்களும் வேற வழியில போயிட்டாங்க. நான் மட்டும்தான் பாக்கி. நிச்சயம் அரசியலுக்கு வருவேன். ஆனா எப்போன்னுதான் தெரியலை! இப்போதைக்கு கொடி தூக்கிட்டு, கழக மாநாடுகள் எல்லாத்துக்கும் போயிடறதோட சரி."

பாரி வேண்டுமானால் புது முகமாயிருக்கலாம். அவரது அப்பா, பழகின முகம்தான். பாரியின் முகத்தை இன்னொரு முறை உற்றுப் பாருங்கள்— கண்டுபிடிக்க முடியாத பட்சத்தில் 46-ம் பக்கம் பார்க்கவும்.

- ஔரங்கசீப்

வாசகர் யோசனை : அம்பை தேவா

வண்ணப்படங்கள் : ஸ்ரீஹரி

# 'அமுதசுரபி' - பொன்விழா ஆண்டு
# பத்திரிகையாளர் பயிலரங்கம்

'அமுதசுரபி' வெளியீட்டாளர்களான - ஸ்ரீராம் டிரஸ்ட் நிறுவனத்தினர் 'அமுதசுரபி' இலக்கிய இதழின் பொன்விழா ஆண்டையொட்டி, பத்திரிகையாளர் ஐவருக்குப் பயிற்சி அளிக்க பயிலரங்கு (Editorial Training) ஒன்றை நடத்த முடிவு செய்துள்ளனர்.

எழுத்துத் துறையில் 50 ஆண்டுகளுக்கும் மேல் பத்திரிகாசிரியர் அனுபவம் உள்ள 'அமுதசுரபி' ஆசிரியரான கலைமாமணி விக்கிரமன் அவர்களின் நேர் மேற்பார்வையில் பயிலரங்கு நடைபெறும். மேலும் படைப்பிலக்கியத் துறையில் பிரபலமானவர்கள், தமிழ்ப் புலவர்களின் சிறந்த வழிகாட்டுதல் பயில்பவருக்கு அமைத்துக் கொடுக்கப்படும்.

இப்பயிலரங்கில் பயில ஆண்-பெண் இருபாலரின் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| வயது வரம்பு | - | 18 முதல் 30 வயது வரை |
| கல்வித் தகுதி | - | பட்டப்படிப்பு (தமிழிலும், ஆங்கிலத்திலும் புலமை உடையவர்களாயிருத்தல் வேண்டும்) |
| ஊக்கத் தொகை (Stipend) | - | மாதம் ஒன்றுக்கு ரூ.1,000-00 |
| பயிற்சிக் காலம் | - | 10 மாதங்கள். |

இப்பயிலரங்குக்கு (5) ஐந்து பேர் மட்டுமே தேர்ந்தெடுக்கப்படுவர்.

விண்ணப்பம் சொந்தக் கையெழுத்தில் எழுதப்பட்டிருக்க வேண்டும். கீழ்க் காணும் விவரங்கள் விண்ணப்பத்துடன் குறிப்பிடல் மிக முக்கியம்.

பெயர், தந்தையின் பெயர், பிறந்த தேதி மற்றும் வயது, ஊர்,மாவட்டம் கல்வித் தகுதி குறிப்பிடப் படல் வேண்டும். சான்றுகளின் நகல் மட்டும் போதுமானது.

தங்களை நன்கறிந்த சான்றோர் அல்லது பிரபலமான இருவரின் பெயர்கள், அவர்களின் நற்சான்று இதழ்கள் -

படைப்புகள் இருப்பின் விவரம், ஏதாவது ஒரு படைப்பின் நகல் -

வண்ணப் புகைப்படம் (Postcard Size) ஆகியவற்றுடன் விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய கடைசி நாள்: 21-04-1997.

விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி :

ஸ்ரீராம் டிரஸ்ட்,
'அமுதசுரபி' - இலக்கிய மாத இதழ்.
பத்திரிகையாளர் பயிலரங்கு
ஏ-7, இரண்டாவது அவென்யூ,
அண்ணாநகர் கிழக்கு,
சென்னை - 600 012.
தொலைபேசி: 628 68 69
628 78 79

SHRIRAM GROUP COMPANIES
MADRAS

தமிழ்ப் பத்திரிகை தயாரிப்பில் ஆர்வமுடையவர்கள், ஊக்கமுடையவர்கள், பத்திரிகையில் தொண்டாற்றுவது தமிழ்ப் பணி என்று மனமுவந்து ஏற்கக் கூடியவர்கள் மட்டுமே விண்ணப்பிக்கவும்.

- பதிப்பாளர்

‘அதாண்டா, இதாண்டா, அருணாச்சலம் நான்தாண்டா’ என்று உரக்கப் பாடியபடி ஏப்ரல் இரண்டாம் வாரத்தில் தமிழ்நாட்டில் தீபாவளி கொண்டு வரப் போகிறார் ரஜினி.

கிட்டத்தட்ட முக்கால் வருடத் தயாரிப்பு. எக்கச்சக்க செலவு. ஏராள எதிர்பார்ப்பு. கேஸட் வெளியான அன்றே தீ வேகத்தில் விற்றுத் தீர்ந்து விட்டது!

ரஜினியின் முந்தைய படங்களை விடவும் இந்தப் படத்துக்கு ஏற்பட்டிருக்கிற அதிக ஆர்வம் - எதிர்பார்ப்புக்கு ஒரே காரணம் - தேர்தலுக்குப் பிறகு வெளியாகிற அவரது முதல் படம் - இதில் அரசியல் உண்டா?

அதிக கவனத்தோடு அரசியலை அறவே தவிர்த்திருக்கிறார் என்று படப்பிடிப்புக் குழுவினர் தீர்மானமாகச் சொன்னாலும் படத்தில் அரசியல் உண்டு என்பதுதான் உண்மை.

ஆனால், விமர்சனமாக அல்லாமல், ஆங்காங்கே அட்சதைத் தூவலாகத் தன் அரசியல் கண்ணோட்டத்தை வெளிப்படுத்தியிருக்கிறாராம். வசனங்களை மிக கவனமாக உற்றுக் கேட்டால் புத்திசாலிகளால் புரிந்து கொள்ள முடியும் என்று சொல்கிறார்கள்.

படத்தில் தீர்மானமாகத் தவிர்க்கப்பட்டிருக்கிற விஷயம் - கவர்ச்சி, இரட்டை அர்த்த வசனங்கள்.

ரம்பா இருந்தும் கவர்ச்சி இல்லை என்பது தமிழ் ரசிகர்களுக்கு ஒருவேளை அதிர்ச்சி தரலாம் என்பதாலோ என்னவோ - நகைச்சுவையில் புகுந்து விளையாடியிருக்கிறாராம். கூடுதலாகச் சற்று ‘தூக்கல்’ சென்ட்டிமென்ட்.

இந்தப் படம் சம்பந்த

# ரஜினியின் ‘அருணாச்சலம்’ - ஓர் எக்ஸ்பிரஸ் ட்ரெய்லர்!



• அருணாச்சலம் படப்பிடிப்பில்....

மாக ரசிகர்களைச் சிண்டைப் பிய்த்துக் கொள்ள வைத்திருக்கும் இன்னொரு விஷயம் - ஷூட்டிங்கின்போது ரஜினியும் மனோரமாவும் எப்படிப் பழகினார்கள்?

"தமிழ்நாட்டில் தேர்தல் என்று ஒன்று நடந்ததா? பிரசாரத்தின்போது ஆச்சி, ரஜினியைத் தாக்கி நிஜமாகவே பேசினாரா என்று பார்க்கிறவர்கள் சந்தேகம் கொள்ளும்படி அவர்கள் இருவரும் பழகினார்கள். திரைகள் ஏதும் போட்டுக் கொள்ளாமல் எப்போதும் போலவே ரஜினி மனோரமாவை அன்புடன் நடத்திய விதம், அவரது உயர்ந்த குணத்தைக் காட்டியது" என்றார் தயாரிப்பு நிர்வாகத்தில் சம்பந்தப்பட்ட ஒருவர்.

சுமார் இருபது நாட்கள் ஹைதராபாத் நட்சத்திர ஓட்டல்களில் ஷூட்டிங் நடந்திருக்கிறது. அவுட்டோர்



> ● குற்றங்களிலேயே பெரிய குற்றம் தன் குற்றங்களைத் திருத்த முயலாததுதான்!
> - கன்பூஷியஸ்
> தகவல் : கே. ஆர். ரவீந்திரன்

போய்விட்டு வந்த நடிகர்களுள் ஒருவரான வி.கே. ராமசாமியைச் சந்தித்து படப்பிடிப்பு அனுபவங்களைக் கேட்டபோது, ''எத்தனையோ வருடங்களாக, எத்தனையோ படங்கள் நடித்தவன்தான் நான். ரஜினியுடனே கூட இதற்கு முன் பல படங்களில் நடித்திருக்கிறேன். ஆனால் இந்தப் படத்து அவுட்டோர் ஷூட்டிங் அனுபவங்கள் ஆயுசுக்கும் மறக்காது'' என்றார்.

"சக நடிகர்களை, நண்பர்களாக மட்டுமல்ல; ஓர் அரசனாகவே நடத்தினார் ரஜினி. வித்தியாசமில்லாமல் அத்தனை பேருக்கும் ஸ்டார் ஓட்டல்களில் தனித்தனி அறை; வெளியே போய்வர ஆளுக்கொரு கார்; உணவு, பிற தேவைகளை கவனிக்க ஆட்கள்... சொல்லிக் கொண்டே போகலாம். ஷூட்டிங் போன மாதிரியே இல்லை. நண்பர்களுடன் பிக்னிக் போய் வந்தது போல் இருந்தது!'' என்றார் வி.கே.ஆர்.

படப்பிடிப்பின்போது ரஜினி நடந்து கொண்ட முறை பற்றிச் சொல்லும் போது சிலிர்த்துப் போனார்.

"அவரது பங்சுவாலிடிக்கு ஈடுஇணையே கிடையாது. ஹைதராபாத்தில் நாங்கள் இருந்த சமயம் இங்கே நிதியமைச்சர் ப. சிதம்பரத்தின் மகனுக்குத் திருமணம். முதல் நாளே சற்று பரபரப்பாகக் காணப்பட்ட ரஜினி, என்னிடம் 'அண்ணே, சிதம்பரம் நேரில் வந்து கூப்பிட்டிருக்கார். போகாமல் இருந்தால் நல்லா இருக்காது. நான் போயிட்டு வந்துடறதுதான் முறை. ஆனா ஷூட்டிங் பாதிக்கக் கூடாது...'' என்று அக்கறையாகப் பேசிக் கொண்டிருந்தார். அன்று மாலையே கிளம்பிப் போய் விட்டார்.

"மறுநாள் காலை, 'சரி; ரஜினி திரும்பி வர லேட் ஆகும்' என்று எல்லாரும் மெதுவாகக் கிளம்பி செட்டுக்குப் போனால் அதிர்ச்சி! எங்களுக்கு முன்னால் மேக்-அப் போட்டுக் கொண்டு தயாராக இருந்தார், ரஜினி!

"பிரமித்து விட்டோம். 'என்னங்க, நீங்க கல்யாணத்துக்கு...' என்று இழுத்தபோது, 'ஓ. போயிட்டு வந்துட்டேனே!' என்றார் சாதாரணமாக. தொழிலில் அவரது பக்தி அத்தகையது!"

அருணாச்சலத்தில் வி.கே. ராமசாமி, காமெடியன் அல்ல; வில்லன்! நாலு பேர் (ரகுவரன், நிழல்கள் ரவி, கிட்டி, வி.கே.ஆர்.) கொண்ட வில்லன் கோஷ்டியில், "டேய் முட்டாப்பசங்களா, கடலுக்குள்ள ஊசி தேட றாப்பல அருணாச்சலம்னு ஒரு பேரை வெச்சிக்கிட்டு, ஆளைத் தேடி அலையாதீங்கடா!" என்று சதா புலம்புகிற வேடமாம்!

"ஷூட்டிங் நேரம் போக, மீதி நேரங்களில் ரஜினி என்னுடன்தான் நிறைய பேசிக் கொண்டிருப்பார்! அவரை ஒரு நடிகராகப் பார்த்ததைவிட பழுத்த ஆன்மீகவாதியாகத் தான் நான் அதிகம் பார்த்தேன்.

" 'அண்ணே, உங்களுக்கெல்லாம் நாடக உலக அனுபவம் நிறைய கைகொடுக்குது. எனக்குத்தான் அந்த வாய்ப்பே இல்லை'ன்னு ஒரு நாள் சொன்னார்.

"நான் சொன்னேன், 'அப்படி இல்லீங்க. நடிகனுக்கு முக்கியத் தேவை, மனுஷங்களைக் கிட்ட இருந்து கவனிச்சி, விதவிதமான குண இயல்புகளையும் முக பாவங்களையும் படிக்கறது. அந்த விஷயத்துல நீங்க எங்களை விட ரொம்பக் குடுத்து வெச்சவர்'னேன்.

"எப்படி"ன்னு கேட்டார். பஸ் கண்டக்டரா இருந்ததுன்னா சும்மாவா? ஒருநாளைக்கு எத்தனை மனுஷங்களை கிட்ட குளோஸப்பில் கவனிச்சிருப்பீங்க; எத்தனை முகபாவங்களைப் படிச்சிருப்பீங்க. அந்த ஒரு அனுபவம் போதாதான்னேன். சிரிச்சார்!"

எட்டுப் பாடல்கள், படத்தில். 'சிங்கம் ஒன்று' என்ற பாடல் பதிவானவுடன், ஹைதராபாத்தில் வி.கே.ஆரிடம் அந்தப் பாடலைத் தாமே பாடிக்காட்டி, 'எப்படி இருக்கிறது?' என்று கேட்டாராம் ரஜினி.

"நிச்சயம் இது ஹிட் ஆயிடும் பாருங்க" என்று சொல்லியிருக்கிறார் வி.கே.ஆர்.

"எப்படி அத்தனை உறுதியா சொல்றீங்க?"

''இந்த ட்யூன் ரொம்ப காலத்துக்கு முன்னாடியே சூப்பர் ஹிட் ஆனதுதான். காந்தி மகான் கதை தெருக்கூத்துல வர்ற பாட்டுக்களில் ஒன்று. அந்தப் பாட்டு அந்தக் காலத்தில் ரொம்பப் பிரபலம்!" என்றாராம் வி.கே.ஆர்.

இசை – தேவா!

தமிழ்ப் புத்தாண்டு ரிலீஸ் என்று சொன்னாலும் ஏப்ரல் 10 அன்றே படம் வெளியாகி விடும் என்கிறது அருணாச்சலம் யூனிட் வட்டாரம். காரணம் இரண்டு.

1. ஏப்ரல் 14 – திங்கட்கிழமையானதால் முன்னதாக வரும் விடுமுறை நாட்களில் ஆகக் கூடிய கலெக்ஷனை விட விரும்பவில்லை.

2. ஏப்ரல் – 10 வியாழக்கிழமை. ராகவேந்திரருக்கு உகந்த நாள். ஆகவே ரஜினிக்கும்!

**– கிச்சா, கிரிஜா ஜின்னா**

பின்புற அட்டை, வண்ணப்படங்கள் : **ஸ்ரீஹரி**

# உங்களுக்கு தெரியும்!

## கரூர் P.R.C. கார்மெண்ட்ஸ்.

நிறுவனத்தின் தயாரிப்புகளான

**லில்லி உள்பாவாடைகள்**
**லில்லி டீலக்ஸ் உள்பாவாடைகள்**
**சிம்மிஸ் மற்றும் நைட்டீஸ்**

தரத்தில் சிறந்தவை! நியாயமான விலையில் நீண்ட காலம் உழைப்பவை! இது தமிழக மக்களின் அசைக்க முடியாத நம்பிக்கை!

இந்த தயாரிப்புகளை நீங்கள் வீட்டிலிருந்தே விற்பனை செய்து கணிசமான வருமானத்தை ஏற்படுத்திக் கொள்ள முடியும்.

**இதற்காக நீங்கள் செய்யக்கூடிய குறைந்த பட்ச முதலீடு ரூ. 3000/- மட்டுமே.**

விவரங்களுக்கு அணுகவும் :

## P.R.C. கார்மெண்ட்ஸ்,

2/12, A.N.R. காம்ப்ளக்ஸ் (2-வது மாடி), பஸ் நிலையம் எதிரில்
முருகநாதபுரம், கரூர் - 639 002. ☎ 61946



# இலக்கியபீடம்

2, ஜயசங்கர் தெரு, மேற்கு மாம்பலம், சென்னை – 600 033.

*காவியம் செய்வோம் கலை வளர்ப்போம் நல்ல ஓவியம் செய்வோம் – பாரதியார்.*

காலாண்டு இலக்கிய இதழ். ஏப்ரல், ஜூலை, அக்டோபர், ஜனவரி மாத முதல் தேதியில் வெளிவரும்.
50 ஆண்டுகளுக்கும் மேல் இலக்கியப் பாதையில் சோர்வில்லாமல் பயணம் செய்து வரும்,
51 நூல்களுக்கு மேல் படைத்துள்ள,
49 ஆண்டுகளாக 'அமுதசுரபி' இலக்கிய மாத இதழில் வரலாறு படைத்துவரும்,
தஞ்சைப்பல்கலைக்கழக 'தமிழ் அன்னை' பரிசு பெற்ற

**கலைமாமணி விக்கிரமன்**

வழங்கும் தரம் விரும்புபவர்களுக்கான கலைக் கருவூலம்

அழுத்தமான ஆழமான கவிதை, கதை, கட்டுரை, அறிவியல் கட்டுரைகள் துணிவான திறனாய்வுகளுடன் வெளிவரும். தனிப்பிரதி ரூ.20.00 பிரதிகள் கடைகளில் விற்பனைக்கு இல்லை. சந்தாதாரர்களுக்கு மட்டுமே. ஆண்டுச்சந்தா ரூ.80.00. இரண்டு ஆண்டுகளுக்கு ரூ.150.00

சந்தாத் தொகை, டிராப்ட், ம.ஆ. மூலம் மட்டுமே அனுப்ப வேண்டிய முகவரி:
'இலக்கியப் பீடம்' 2, ஜயசங்கர் தெரு, மேற்கு மாம்பலம் சென்னை – 600 033.

தனிப்பிரதி பெற விரும்புவோர் ரூ.2.00 சேர்த்து அனுப்பவும்.
முதல் இதழ் ஏப்ரல் 6–விக்கிரமனின் 70ஆவது பிறந்தநாள் விழாவன்று வெளிவரும்.



# நோக்கம்

**நா**ன் கதவைத் திறந்து உள்ளே எட்டிப் பார்க்க, ஏழெட்டுப் பேர் குதிகாலில் ஸ்பிரிங் வைத்தது போல தாவித் தாவிக் குதித்தபடி 'நான்தான் பலசாலி' என்று கூவினார்கள். மேலும் பத்து நபர்கள், டை கட்டிய, தொப்பை போட்ட தவளைகளாகத் தத்தித் தத்தி அந்தப் பாதி இருண்ட அறையின் ஒரு கோடியிலிருந்து மறுகோடிக்கு நகர்ந்து கொண்டிருந்தார்கள். 'என்னால் முடியும்' என்று அவர்கள் அவ்வப் போது கையை உயர்த்திக் கூச்சல் போட வேறு செய்தார்கள்.

கண்களை அகல விரித்து நான் இந்த விநோதத்தை எல்லாம் பார்த்தபடி நிற்க, இடி முழக்கமாக ஒரு குரல்...

"வெளியே போ..."

ருத்ரமூர்த்தியாக எனக்கு முன்னால் வந்து நின்ற முக்கால் கிழவரும் டை கட்டி இருந்தார். கருப்பு பிரேம் மூக்குக் கண்ணாடிக்கு அந்தப் பக்கம் இருந்து கோபத்தை உமிழும் கண்கள்.

"எட்டு மணி வகுப்புக்கு ஒன்பது பத்துக்கு வந்து நிக்கறியே... இந்த அகிலேஷ் ஆனந்தா வுக்குக் கட்டுப்பாடுதான் முக்கியம்... காசு இல்லே... அதைச் சம்பாதிக்க அலுத்துப் போச்சு... காதிலே விழுந்ததா?"

என் தலையெழுத்து. காக்கி நாடா எங்கே... கல்கத்தா எங்கே? காக்கிநாடாவில் கோழித் தீவனம் தயாரிக்கும் கம்பெனியில் பெர்சனல் மேனேஜராக நூறு பேரை மேய்க்கிற உத்தி யோகம். மாசம் பிறந்தால், கோழி படம் அச் சடித்த கவரில் கணிசமாக சம்பளம். சகல சௌகர்யங்களோடும் சேவல் கூண்டாக பிரம் மச்சாரி விடுதி... என்ன பிரயோஜனம்?

"உடனே கிளம்பி கல்கத்தா போ... நிர் வாகப் பயிற்சி வகுப்பு என்று ஒரு சங்கதி... ஒரு வாரம் நடக்கப் போறது... அகிலேஷ் ஆனந்தான்னு ஒரு பிரபலமான ஆசாமி கிளாஸ் எடுக்கறார்... மனவள மேம்பாட்டு ஸ்பெஷலிஸ்ட். ஒரு நாடு விடாம சுத்தி ஏகப் பட்ட வெள்ளைக்காரங்களை, கருப்பர்களை, சீன, ஜப்பான்காரங்களை எல்லாம் நன்மை



பிக்கை நிரம்பி வழியற நிர்வாகிகளாக மாற்றியவர்... மிலிட்டரி டிசிப்ளின் தான்... கஷ்டப்பட்டு... புது மனிதனாகத் திரும்பி வந்து கோழி மேய்க்கலாம்."

வேப்பிலை அடிக்காத குறையாக எம்.டி. உருவேற்றி அனுப்ப, காலையில்தான் கல்கத்தாவில் வந்து விழுந்தேன்.

தகவல் மாமா என்ற ரிட்டயர்ட் இன்கம் டாக்ஸ் ஆபீசர் 61 வயது மார்க்கண்டேயனின் தேசப்பிரியா பார்க் பக்கத்து வீடு அது.

தட்டையும் மகா தேசலுமான பற்பசை டியூப்பைச் சாதுரியமாகப் பிதுக்கி பிரஷ் மேல் வழிய வழிய நிறைத்தபடி மாமா நான் வந்த விவரம் கேட்டார்.

"அந்த உப்புக் கிண்ணத்தை எடு.. பேஸ்ட் மேலே உப்பைத் தூவித் தேய்ச்சா பல் பளீர்னு சொட்டு நீலம் போட்ட மாதிரி ஜொலிக்கும்... உனக்கு கிளாஸ் எங்கே?"

சொன்னேன்.

"யூ டேக் தி டியூப்"

"வேணாம் மாமா.... நான் வேறே டூத் பேஸ்ட் வச்சிருக்கேன்..."

"அதில்லேப்பா..." மாமா வாய் நுரைக்கக் கூறினார். "பாதாள ரயில்லே போய் எஸ்பிளனேட்லே எறங்கிக்கோன்னேன். டியூப்னா அந்த டிரெயின் சர்வீஸ்னு அர்த்தம்."

இட்லி சாப்பிடும்போது இன்னொரு எடு தகவல் கொடுத்தார். "எஸ்பிளனேட்லே எறங்கிக் கொஞ்சம் பின்னோக்கி நடந்து மெட்ரோ சினிமா தியேட்டர் பக்கம் வா... இந்தி சினிமா பழைய ஹீரோ உத்தம் குமாரோட அப்பா அங்கேதான் ஆப்பரேட்டரா வேலை பார்த்தார்... மெட்ரோ பக்கம் யாரைக் கேட்டாலும் வழி சொல்லுவாங்க.... போய்க்கோ..."

எட்டு மணிக்குத் தூங்கி வழிந்த எஸ்பிளனேடில் வழி சொல்ல யாரும் இல்லாததாலும், மெட்ரோ தியேட்டர் வாசலில் உத்தம்குமார் வகையறாக்கள் தட்டுப்படாததாலும், தட்டுத் தடுமாறித் தெருத் தெருவாகச் சுற்றி அலைந்து இடத்தைக் கண்டுபிடித்து நுழைய... கெட் அவுட்... அகிலேஷ் ஆனந்தாவின் அற்புத உலகத்தில் அனுமதி மறுப்பு... சுளையாகப் பத்தாயிரம் ரூபாயையும் வாங்கிக் கொண்டு இப்படிக் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளிய அவமானம். தேவைதானா இதெல்லாம்? அலுப்போடு நான் வெளியே போகத் திரும்பியபோது திரும்ப அகிலேஷ் ஆனந்தா குரல்.

"போகிறது... முதலும் கடைசியுமான மன்னிப்பு. போய் உட்கார்... எல்லோரும் இடத்தில் உட்காரலாம்... காவேரி... இந்தப் பையனுக்கு

**இரா. முருகன்**

பேட்ஜ் கொடு..."

இருபத்தெட்டு வயதில் என்னை இதுவரை யாரும் பையன் என்று குறிப்பிட்டதில்லை.

டையர்களும், குதியர்களும் வியர்வை வழியப் பக்கத்தில் வந்து உட்கார்வதை நான் சுவாரசியமில்லாமல் பார்த்துக் கொண்டிருந்தபோது, பின்னாலிருந்து ரஸகுல்லா குரலில் "எக்ஸ்கியூஸ் மீ..."

தேவதை. நைலக்ஸ் புடைவையில் நடந்தாய் வாழி காவேரி.

தபு, டி.ஆர். ராஜகுமாரி, டெமிமூர், சாய்ரா பானு, சாயாத பென்சிலம்மா எல்லாம் கலந்த அற்புதக் கலவை – கடைசியாகச் சொல்லப்பட்ட ஆரணங்கு எங்கள் தொழிற்சாலை வாசலில் எருமை கட்டிக் கறந்து கான்டீனுக்கு பால் என்று ஏதோ சப்ளை செய்கிறாள்.

"இந்த பேட்ஜை மாட்டிக் கொள்ளுங்கள்..."

இரண்டு பாரா முந்திய ரசகுல்லாவே இன்னும் தீராது தித்திக்க, இதை என்ன என்று சொல்ல...

பத்தாயிரம் ரூபாய் இந்தக் குரலுக்கே சரியாகப் போய் விட்டது. இதர லாபம் அரை

யிருட்டிலும் பிளாஷ் அடித்த புன்னகை. மற்றும் பாட்ஜைக் கொடுக்கும்போது உராய்ந்த மென்விரல்கள்.... பூ வாசனை...

பாட்ஜைப் பார்த்தேன். 'என் பெயர் பெர்சனல் கம்ப்யூட்டர்' என்று எழுதியிருந்தது. கண்ணைக் கவிந்து பக்கத்தில் இருந்தவர் சட்டையில் குத்திய பேட்ஜைப் பார்த்தேன். 'என் பெயர் இமயமலை'. இந்தப் பக்கம் திரும்பினால் 'கழுகு'. நேர்பின்னால் 'ஈஃபல் டவர்'. முன்னால்....

"டையா... வகுப்பு நேரத்தில் என்னைத்தான் கவனிக்க வேணும். தெரிந்ததா?"

பக்கத்து இடிமுழக்கம். என் தலைக்கு மேல்தான்.

"எஸ் சார்!" எழுந்து நின்றேன்.

"சாரா? ஐந்து ரூபா ஃபைன். இங்கே பேட்ஜிலே என்ன பெயர் போட்டிருக்கோ அதைச் சொல்லித்தான் கூப்பிடணும். என் பெயர் பார்த்தியா?"

நெஞ்சை முன்னால் நிமிர்த்திய அகிலேஷ் ஆனந்தாவின் சட்டையில் 'காண்டாமிருகம்'. பொருத்தமான பெயர்தான்.

"ஏன் இப்படிப் பெயரை மாற்றி ஒட்ட வைக்கிறேன். ஏன் தாவிக் குதிக்கச் சொல்கிறேன். ஏன் கத்தச் சொல்கிறேன்... யோசித்தீர்களா... மனத்தடங்கலை எல்லாம் நீக்க... ஷெட் யுவர் இன்ஹிபிஷன்ஸ்..."

அடுத்த ஒன்றரை மணி நேரம் அகிலேஷ் ஆனந்தாவானவர் பகவத்கீதை, பைபிள், கார்ல் மார்க்ஸ், டேல் கார்னகி, ஜென்குரு செங்காய், லீகுவான்யூ என்று கலந்து கட்டியாக மேற்கோள் காட்டி தன்னம்பிக்கை டானிக் சொற்பொழிவாற்ற, நாங்கள் மனதை ஒரு நிலைப்படுத்தித் தூங்க ஆரம்பித்தோம்.

"ஆக, நீ உன்னை என்னவாக நினைக்கிறாயோ அப்படியே இருக்கிறாய்... யூ ஆர் வாட் யூ திங்... புரிந்ததா?"

காண்டீன் வாசலில் எருமை கறக்க உட்கார்ந்த காவேரியை அப்படியே விட்டுவிட்டு நான் வெலவெலத்துக் கண்திறக்க, சுற்றி எல்லோரும் "புரிந்தது" என்று முஷ்டி மடக்கி வீசிக் காட்டுக் கத்தல் கத்தினார்கள். நான் தாமதமாகப் போன ஒரு மணி நேரத்துக்குள் அவர்களை என்னமாகப் பழக்கியிருக்கிறார் இந்த மனுஷர்...

பகல் சாப்பாட்டு நேரம்.

"நாற்பத்து மூணு நிமிஷம் சாப்பாட்டுக்காக ஒதுக்கப்படுகிறது..."

அகிலேஷ் அறிவிக்க, அவசரமாக வெளியே ஓடினோம்.

ஐந்து நட்சத்திர ஓட்டலிலிருந்து வரவழைத்த சாப்பாடு. வரிசையாகப் பரத்தி வைத்த பதார்த்தங்களை பீங்கான் தட்டில் நிறைத்துக் கொண்டு ஒரு ஓரமாக ஒதுங்க, காவேரி.

"ஹலோ... நீங்க எங்கே வேலையாக இருக்கீங்க?"

இவளை இம்ப்ரஸ் செய்ய இனியொரு சந்தர்ப்பம் கிடைக்குமோ என்னவோ...

உலகம் முழுக்கத் திரிந்து இரை பொறுக்கும் கோழிகள் எல்லாம் விரும்பிக் கேட்டுச் சுவைத்து உண்ணும் தீவனம் தயாரிக்கும் பிரம்மாண்டமான நிறுவனத்தின் பெர்சனல் மேனேஜர் என்று கனகம்பீரமாக கோழிக் கறியும் கையுமாய்ச் சொன்னேன்.



"நல்லது... இங்கே வந்திருக்கும் எல்லோரும் உங்களைப் போல பெரிய கம்பெனிகளில் நிர்வாகிகள்... சிலர் வருடா வருடம் பணம் கட்டி உற்சாகமாக வருகிறார்கள்..."

நாலரை அடி உயரமான 'இமயமலை' கல்கத்தாவில் பெரிய பிஸ்கோத்து கம்பெனியில் ஜெனரல் மேனேஜராம். பத்து வருடமாக வருகிறாராம். 'கழுகு' பெரிய தொழிலதிபராம். 'மோட்டார் சைக்கிள்' மருந்து தயாரிக்கும் தொழிலில் பிஸ்தாவாம்...

"அப்ப நீங்க?" காவேரியைக் கேட்டேன்.

"நானா... அகிலேஷ் ஆனந்தாவின் ஒரே மகள்... கல்லூரி முடித்து விட்டு அப்பாவோடு உலகத்தைச் சுற்றுகிறேன்..."

ஒரு புது மரியாதையோடு அவளைப் பார்த்தேன். குருபுத்ரி. வெளிநாடெல்லாம் போனவள். பேரழகி...

சொந்த ஊர் பெங்களூராம். வயலின் வாசிப்பதிலும், பிளாட்பாரக் கடைகளில் பேரம் பேசிக் கண்டதையும் வாங்குவதிலும் இஷ்டமாம். மெட்ரோ தியேட்டர் பக்கம் பெரிய ஓட்டலில்தான் தங்கி இருக்கிறாளாம். அம்மா வராததால், ஷாப்பிங் தனியாகப் போகச் சங்கடமாக இருக்கிறதாம்.

அகிலேஷ் ஆனந்தாவைத் தியானித்து, நிறையத் தன்னம்பிக்கையைக் குரலில் வரவழைத்தபடி கேட்டேன்.

"வகுப்பு முடிந்ததும் நான் உங்களோடு துணைக்கு வரட்டுமா? எனக்கும் பேரம் பேசிப் பொருள் வாங்குவது ரசகுல்லா சாப்பிடுகிறது

போல..."

"உங்களுக்கு வீண் சிரமம்..." அவள் பார்வையை கனிவாக என்மேல் இழையவிட, எச்சில் தட்டை வாங்கி ஓரமாக வைத்தேன். வகுப்பு எக்கேடும் கெட்டுப் போகட்டும். இவள் சரியென்றால், இப்படியே கையை அலம்பாமல் கூட வெளியே கிளம்பி விடலாம்.

"சாயந்திரம் ஆறு மணிக்கு ஓட்டல் லாபியில் காத்திருங்கள்... வருகிறேன்... அப்பாவுக்குத் தெரியவேண்டாம்..."

இனிமையான சதி உருவான நேரம் அது.

"எவ்வளவு நேரம் சாப்பிடுவாய்... போய் வகுப்பில் உட்கார்."

அகிலேஷ் ஆனந்தா பக்கத்தில் வந்து கர்ஜனை செய்தபோது காதில் தூக அப்பிப் போனது போல இருந்தது. நான் பலசாலி. என்னால் முடியும். என்னால் மட்டுமே முடியும் காவேரியைக் கவர் பண்ண.

**ம**த்தியானம் செய்முறைப் பயிற்சி வகுப்பு.

"உங்கள் வாழ்க்கையில் நடந்த ஒரு மறக்க முடியாத சம்பவத்தைப் பற்றிப் பேச வேண்டும்... இரண்டே நிமிஷம் தான் நேரம் எடுத்துக் கொள்ளலாம். அதற்குள் கேட்பவர் மனத்தில் தைக்கிறது போல, அழுத்தமாகச் சொல்ல வேண்டும்... என்னுடைய உதவிப் பயிற்சியாளர்கள் உங்களை இப்போது சக்கையாகப் பிழிவார்கள்..."

## கொள்கை வீரர்கள்

**"தலைவரே! நம்ப கட்சியோட கொள்கை என்ன?"**

**"சரியாப் போச்சு! கொள்கை பரப்புச் செயலாளரான உங்ககிட்ட நான் இதைப் பற்றி கேட்டுத் தெரிஞ்சுக்கலாம்னு இருந்தேன்!"**

**— திருச்சி எம். மல்லிகா**

அகிலேஷ் எங்களை நாலு குழுக்களாகப் பிரித்தார். மூன்று லெக்சரர்களும் காவேரியும் மூலைக்கு ஒருவராக நின்றார்கள். என் அதிர்ஷ்டம் நான் காவேரி பக்கம்.

"எப்படிப் பேசுவது என்று கற்றுத் தர, நான் என் வாழ்க்கையில் நடந்த மறக்க முடியாத ஒரு சம்பவத்தைச் சொல்கிறேன்..."

காவேரி கணீரென்று தொடங்கினாள். அவள் முதல் முதலாக மீன் வறுவல் செய்த தினம் அது. துடிப்பு அடங்கிய மீனும், சரியாக வரவேண்டுமே என்று துடிக்க ஆரம்பித்த மனதுமாகத் தயாரான வறுவல். சாப்பிட்டுப் பார்த்த அகிலேஷ் குரல் நெகிழச் சொன்னது – "நான் நாளைக்கே இறக்க நேர்ந்தாலும் பரவாயில்லை... இந்த அற்புதமான மீன் வறுவலைச் சாப்பிட்ட திருப்தியே போதும்..."

காவேரி உணர்ச்சியோடு சொல்லி, கனகச்சிதமாக இரண்டு நிமிடத்தில் முடித்து நிறுத்த, பக்கத்தில் நின்ற இமயமலை உருகிக் கண்ணீர் விட்டது.

"இப்போ... பெர்சனல் கம்ப்யூட்டர் சொல்லலாம்..."

சின்ன வயதில் பாலக்காட்டில் எனக்குப் பாலாடைப்பிரதமன் தயாரித்துக் குடிக்கக் கொடுத்த கல்லுப்பாட்டியைப் பற்றி வர்ணித்து விட்டு, அவளை சாகடிப்பதற்குள் காவேரி இரண்டு நிமிடம் ஆகிவிட்டது என்று நிறுத்தி விட்டாள். அப்புறம் இரண்டாம், மூன்றாம் ரவுண்டிலும் கல்லுப்பாட்டி சிரஞ்சீவியாகப் பாயசம் உண்டாக்கினாள்.

**சா**யந்திரம் ஐந்து மணி. வகுப்பு முடிந்து, மெட்ரோ தியேட்டர் வாசலில் கல்கத்தா மேப் வாங்கி, டேக்சியில் தேசப்ரியா பார்க் வந்து, ஜீன்ஸ்–ஸ்டோன்வாஷுக்கு மாறி, மேப்பை உருப்போட்டு திரும்ப எஸ்பிளனேட் வந்து ஹோட்டல் லாபியில் நிற்க, காவேரி.

எஸ்பினேனேடை ஒரு சென்டி மீட்டர் விடாமல் அலசினோம். நியூ மார்க்கெட்டில் கடை கடையாகப் புகுந்து புறப்பட்டு, பச்சை குடிதார் விலை விசாரித்தோம். பாதாள ரயில் நிலையப் பக்கம் பேல்பூரி சாப்பிட்டோம். காரம் விறுவிறுக்க, கே.சி. தாஸ் மிட்டாய்க் கடையில் 'அமிர்தகும்பமும்', 'காலாஜாமூனும்' வாயில் துளித்துளியாகக் கரைய விட்டோம். நெல்லிசென்குப்தா சாரணி என்ற லிண்ட்ஸே வீதியில் செருப்புக் கடை வாசலில் வாங்க நிற்கிற கியூவைப் பார்த்தபடி பழைய புத்தகக் கடைகளை மேய்ந்தோம். டேஸ்ட் மெடிக்கலில் ஏதோ மருந்து வாங்கிக் கொண்டாள் காவேரி.

"அப்பாவுக்கு வயிற்றுவலி... சீக்கிரம் போகணும்..."

ஹோட்டலுக்கு அவளைக் கொண்டு போய் விட்டு விட்டுத் திரும்ப தேசப்ரியா பார்க் வந்தபோது வானத்தில் பறப்பது போல இருந்தது. மார்க்கண்ட மாமா ஊரில் எல்லோருடைய க்ஷேமலாபங்களையும் விசாரித்தபடி இருக்க, நினைவெல்லாம் காவேரிதான்.

**வி**டிந்து, சிரத்தை எடுத்து சவரம் செய்து கொண்டு, தலைக்கு ஷேம்பு போட்டுக் குளித்து, மீசை திருத்தி, மார்க்கண்ட மாமாவின்

'இன்று ஒரு தகவலை'க் காதில் அரை குறையாக வாங்கியபடி உப்புமா கொறித்து, எட்டு மணிக்கே வகுப்புக்கு வர, காவேரி.

ஒரு அரைமணி நேரம் போல, தடங்கல் இல்லாத சுகமான அரட்டை.

உபன்யாசம். உறக்கம். சாப்பாடு. மதியம் நான் கலங்கிக் கண்ணீர் விட்ட நான்! திரும்பவும் காவேரி பக்கம் நான்.

முந்திய நாள் மீன் வறுவலையே அங்கே இங்கே மாற்றித் திரும்ப வறுத்து காவேரி கண்ணீர்க் கதையாகப் படைக்க, இமயமலை உடைந்தே போனார்.

நானும் காவேரியைப் பின்பற்றி, கல்லூப் பாட்டியைச் சுற்றிக் கண்ணீர் மாளிகை எழுப்பி, எல்லோரையும் அழவைத்ததற்காக பென்சில் பரிசு வாங்கினேன். அகிலேஷ் பெயர் பொறித்த பென்சில் அது.

சாயந்திரம் டிராம் ஏறி ராஷ்பீகாரி அவென்யு வந்தோம். பாலிகஞ்ச் மார்க்கெட்டில் படையெடுப்பு. தமிழ் ஓட்டலில் ஊத்தப்பம். கேசட் கடையில் தள்ளுபடி விலைக்கு அமர்பால் பாடிய பெங்காலி நாட்டுப்புறப்பாட்டு. கடையில் படி வழுக்க, விழாமல் சேர்த்தணைத்த என் பாதுகாப்பு வளையத்தில், தலையில் கரகமில்லாத குஷ்புவாக காவேரி.

தொடர்ந்த மூன்று நாளும் இதே போலத் தான். நான் செய்முறை வகுப்பில் காவேரி போல இடுப்பில் கையை வைத்தபடி, இரண்டு பக்கமும் லேசாக ஆடியபடி பேசப் பழகிக் கொண்டேன்.

'அதிர்ச்சி அடைய வைத்த சம்பவம்', 'ஆனந்தப்பட வைத்தது', 'வாழ்க்கையில் குறிக்கோளை அடையக் கற்றுக் கொடுத்தது'... காவேரி தொடர்ந்து வெளுத்துக் கட்டினாள். மீன் வறுவலில் இப்படி ஒரு உணர்ச்சிக் குவியலையே ஒளித்து வைக்க முடியும் என்று நான் கனவில் கூட நினைத்ததில்லை.

சனிக்கிழமை. கடைசி நாள் வகுப்பு. முந்தின நாள் ராத்திரிதான் லிண்ட்ஸே வீதி செருப்புக் கடை க்யூவில் பொறுமையாக நின்று காவேரிக்கு முப்பத்தேழு ரூபாய்க்கு அழகான ஒரு ஜதை செருப்பு வாங்கியது...

இனிமேல் அவளை எப்போது பார்க்க... எப்படி... எங்கே... சோகம் அழுத்த வகுப்பில் நுழைந்தால், காவேரி? காணோம்!

அகிலேஷ் காத்தே இல்லாமல் வகுப்பை ஆரம்பித்தார். நான் வாசலையே பார்த்தபடி இருந்தேன்.

சாப்பாட்டு நேரத்தில் எல்லோரும் முந்தின நாள் ராத்திரி ஹாத்திபாகனிலும், ஷாம் பஜாரிலும் போலீஸ் புகுந்து நடைபாதைக் கடைகளை அகற்றியதைச் சொன்னார்கள்.

"காலையில் ராஷ்பீகாரி அவென்யூவிலே கலாட்டா... ஒரு டிராமை எரிச்சுட்டாங்க.." இமயமலை சொன்னது.

காவேரி எங்கே? நான் படபடப்பாக அகிலேஷைக் கேட்டேன்.

அவர் வெறும் தட்டைக் கையில் பிடித்தபடி என்னையே ஒரு விநாடி உற்றுப் பார்த்தார்.

"காலையிலே சின்னதா ஒரு சச்சரவு... நேத்து ஏதோ செருப்பு வாங்கினாளாம்... காலையிலே போய் மாத்தணும்னாள்... நான் கிளாஸ் முக்கியம்னேன்... கோபமா வெளியே போயிட்டா.."

அவர் கண் கலங்கி இருந்தது.

ஊருக்குத் தன்னம்பிக்கை சொல்லிக் கொடுக்கிறவர் இந்தச் சின்ன விஷயத்துக்காக உருகிக் கொண்டு...

சின்ன விஷயமா... ஊரில் கலாட்டா வெடித்து வருகிறது. இந்தச் சின்னப் பெண் தனியாகக் கிளம்பி...

சடாரென்று தட்டை வைத்துவிட்டு வெளியே ஓடினேன்.

புகை மூட்டத்தில் லிண்ட்ஸே தெரு. என்னவோ எரிந்து கொண்டிருந்தது. நாலா திசையும் கல் பறந்தது. நிறுத்தி வைத்த கை ரிக்ஷாக்களில் ஏறிக் குதித்து ஓடி செருப்புக் கடையை அடைந்தேன்.

அரை சென்டி மீட்டரே திறந்த கதவு. நான் உள்ளே போகத் திரும்ப மூடிக் கொண்டது. உள்ளே, படபடக்கும் நெஞ்சோடு ஒரு சிறிய கூட்டம். ஓரமாக, செருப்பைக் கையில் பற்றியபடி, காவேரி.

எல்லாம் அடங்கி, நாலரை மணிக்கு காவேரியைக் கையைப் பிடித்து அழைத்துக் கொண்டு வகுப்பில் நுழைய, எல்லோர் கண்ணும் எங்கள் மேல்தான்.

அகிலேஷ் மெதுவாகப் பக்கத்தில் வந்தார். காவேரியைப் பார்த்த சந்தோஷம் ஒரு விநாடி கண்ணில் தெரிய, மறுபடி கோபம்.


"நாலு மணி நேரம் வகுப்பை கட் அடித்து ஊர் சுற்றி விட்டு வருகிறாய்... போய்க் குனிந்து ஒரு காலை உயர்த்திக் கொக்கு பிடித்து நில்லு."

அன்றைக்குக் கொக்கு பிடிக்க ஆரம்பித்தது தான்.

"பாருங்க... இது என் மாப்பிள்ளை... இத்தனை அழகான பெண்ணை இந்தக் குரங்குக்கு கல்யாணம் செய்து வச்சு இருக்கேன். இவனும் என் அசிஸ்டெண்ட்தான். வகுப்புக்கு நேரம் கழித்து வந்தால் எப்படி நிக்கணும்னு இப்போ காண்பிப்பான்."

எல்லா நாடுகளிலும் சுற்றி கொக்கு பிடித்து நின்றிருக்கிறேன். காவேரி மீன் வறுவலையும், நான் கல்லூப்பாட்டியையும் பற்றி சகலமான உணர்ச்சிகளோடும் பேசிப் பயிற்சி தருகிறோம். காக்கிநாடாவுக்கும் கோழித் தீவனத்துக்கும் எப்போதோ டாட்டா சொல்லி விட்டேன்.

பக்கத்தில் காவேரி. பையிலே காசு. நிறைய்யத் தன்னம்பிக்கை... உங்களுக்கும் கொஞ்சம் பொட்டலம் கட்டித் தரட்டா?






1997 ஏப்ரல் 6
தாது பங்குனி 24
மலர் : 55
இதழ் : 36

# கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.



## பெண் குழந்தைகளுக்கு நிகழ்ந்த கொடூரம்!

இலங்கையில் நடக்கும் யுத்தத்தினிடையே அப்பாவி மக்கள்- சகோதரத் தமிழர்கள் மடிந்து போனால் தமிழக அரசியல் தலைவர்கள் கொதித்தெழுகிறார்கள்.


காஷ்மீரில் பண்டிட்டுகள் பயங்கரவாதிகளால் படுகொலை செய்யப்பட்டால் நாடே அதிர்ந்து போகிறது; பத்திரிகைகள் வன்மையாகக் கண்டிக்கின்றன.

பீஹாரில் தலித்துகளை, உயர்ஜாதியினர் கூலிப்படைகள் கொண்டு தாக்கிக் கொன்றதைத் தொடர்ந்து, உடனடியாக நீதிபதி தலைமையில் விசாரணைக்கு உத்தரவாகியிருக்கிறது. நஷ்டஈடு வழங்கப்படுகிறது. 'நஷ்டஈடு கொடுத்தால் போதாது; பிரச்னையின் வேரை ஆராய்ந்து களைய வேண்டும்' என பத்திரிகைகளில் அனல் பறக்கும் தலையங்கங்கள் எழுதப்படுகின்றன.

இவையெல்லாம் சரிதான். அவசியமும் கூட. ஆனால், தமிழ்நாட்டின் தென்பகுதி குக்கிராமம் ஒன்றில் (சீர்காழி அருகே திருமுல்லைவாசல்) நடந்த ஒரு கொடூரத்துக்குத் தீவிரமாகக் கண்டனக் குரல் எழுப்ப யாருமில்லை!

ஒன்பது முதல் பதினோரு வயதுக்குட்பட்ட ஐந்து பெண் குழந்தைகள், அவர்கள் படித்து வந்த பள்ளியில், தொடக்கப்பள்ளி ஆசிரியரால் பலாத்காரம் செய்யப்பட்டிருக்கிறார்கள்.

வக்கிரமும் குரூரமும் நிறைந்த இச்செயல், சட்ட சபையில் முதல்வர் கவனத்துக்குக் கொண்டுவரப்பட, அக்குற்றம் தொடர்பாக பள்ளி ஆசிரியர் ஒருவரும் சத்துணவு அமைப்பாளர்




ஒருவரும் கைதாகியிருப்பது உறுதியாகிறது.

முதல்வர் வருத்தம் தெரிவிக்க, எதிர்க்கட்சியினர் 'குற்றவாளிகள் வன்மையாக தண்டிக்கப்பட வேண்டும்' எனக் கேட்டுக் கொள்ள, விஷயம் சிறிய செய்தியாகி முடிந்து போகிறது.

உண்மையில், இச் செய்திக்குப் பின்னால் இருக்கும் சோகமும் பயங்கரமும் நாடு தழுவிய விழிப்பையும் எதிர்ப்பையும் ஏற்படுத்த வேண்டும். ஆனால், வாக்குரிமை இல்லாத குழந்தைகளுக்காக எந்த அரசியல்வாதி போராட முன் வருவார்?


நிகழ்ச்சியின் சோகத்தை மறந்து, வக்கிரத்தை மட்டுமே பெரிதாக்கி வியாபாரம் செய்யக் கூடிய பத்திரிகைகள் ஒருபுறம்... 'இதைப் போன்ற விஷயங்களை நாம் தொடலாகாது; கண்டும் காணாமல் இருந்து விடுவோம்' என்று தப்பித்தல் மனோபாவத்துடன் பேசாமல் இருந்துவிடும் வேறு வகை பத்திரிகைகள்.

'வேலி, பயிரை மேயவில்லை; விதையையே மேய்ந்த கதை இது' என்று முதல்வர் சட்டசபையில் கூறியதுகூட இந்தக் குற்றத்தின் வீச்சையோ, முழுப் பரிமாணத்தையோ உணர்த்தவில்லை. இதுவே ஒரு ஜாதி-மதக் கலவரமானால் எவ்வளவு அமளி-துமளிப்படும் என்பதை அறிவோம்!

பெண் குழந்தைகளுக்கு இழைக்கப்பட்டுள்ள இந்தக் கொடுமையிலும் கொடுமை குறித்து துளியும் தாமதமின்றி விசாரணை நடத்தப்பட வேண்டும். மிகக் கடுமையான உயர்பட்ச தண்டனை, குற்றவாளிகளுக்கு அளிக்கப்பட வேண்டும். அதற்குச் சட்டம் இடங்கொடாவிட்டால் அந்தச் சட்டத்தையே மாற்றத்தான் வேண்டும்.

குற்றவாளிகள் தண்டிக்கப்படலாம். ஆனால், பாதிக்கப்பட்ட குழந்தைகளின் உடல், மனவளம் மட்டுமின்றி எதிர்காலமும் மீட்புக்கிடமின்றி சிதைக்கப்பட்டிருக்கிறது.

ஒரு பள்ளியில் இத்தகைய அரக்கத்தனம் அரங்கேறுகிறது எனில் நம் குழந்தைகளை எந்த நம்பிக்கையில் நாம் கல்விக் கூடங்களுக்கு அனுப்புவது?




பாடத்துடன் பண்பாட்டையும் நன்னடத்தையையும் வழிகாட்டல் மூலம் கற்றுத் தர வேண்டிய ஆசிரியர், மிருகத்தனமாக் நடந்து கொள்ளும் ஒரு சூழல் எப்படி உருவானது?

ஆசிரியர்களின் • தேர்வு எந்த அடிப்படையில் நடைபெறுகிறது? அவர்களது நன்னடத்தைக்கு உத்தரவாதம் பெற்ற பின் தேர்ந்தடுக்கப்படுகிறார்களா? மது அருந்திவிட்டுப் பள்ளிக்கு வரும் ஆசிரியர்களையும், மாணவர்களைக் கொண்டே பீடி, சிகரெட் வாங்கிவரச் செய்யும் ஆசிரியர்களையும் சகித்துக் கொள்ளும் ஓர் அமைப்பு, எப்படி சிறந்த அமைப்பாக இருக்க முடியும்?

இந்த நிகழ்ச்சி அம்பலத்துக்கு வந்தது. வெளிச்சத்துக்கு வராமல், அவமானமுற்று கூசிக் குறுகி மௌனத்தில் மறைந்துபோகும் சம்பவங்கள் எத்தனை?

சினிமாவில்கூட கல்லூரி ஆசிரியர்கள் ஜொள்ளுவிட்டு அசடு வழியும் அற்பர்களாகச் சித்திரிக்கப்படுவது ஏன்...?

மனச்சாட்சிக்கு விரோதமின்றி இந்தக் கேள்விகளுக்கு விடை தேட வேண்டியது சமுதாயத்தின் கடமை.

விடைகள், நடந்து முடிந்த நிகழ்ச்சியைப் போலவே அதிர்ச்சியும் சோகமும் ஊட்டக் கூடியவையாகத்தான் இருக்கும்.

எனினும், உண்மைகளை ஏற்று, உடனடியாக நிலைமையைச் சீர் செய்யும் பொறுப்பு அரசாங்கத்துக்கு இருக்கிறது.

அரசாங்கத்தை, அந்த முடிவை நோக்கி நெருக்கி நிர்ப்பந்திக்கும் பொறுப்பு பெற்றோருக்கு மட்டுமின்றி பத்திரிகைகளுக்கும் இருக்கிறது.

குழந்தைகளுக்குப் பாதுகாப்பான, ஆரோக்கியமான சூழலை உத்தரவாதம் செய்யாத பள்ளிக்கூடங்கள் சுடுகாடுகளுக்குத்தான் சமம்! அவை மாணவர்களின் மனவளம் கொன்று அவர்களை நடைபிணங்களாக்கி விடும்!

# தவழும் த.மா.கா.

# வீரநடைபோடுவது எப்போது?

நாற்பத்தெட்டு மணி நேரத்துக்குள் ஒரு கட்சியை உருவாக்கி, அதற்குப் பெயர் சூட்டி, அதன் சட்ட திட்டங்களை உருவாக்கி, தேர்தல் கமிஷனின் அங்கீகாரமும், தனிச் சின்னமும் பெற்று, வேட்பாளர்களைத் தேர்ந்தெடுத்து வேட்புமனுக்களையும் தாக்கல் செய்த ஒரே கட்சி த.மா.கா.தான்! அதற்குத் தான் இப்போது ஓராண்டு முடிந்திருக்கிறது!

'இந்தக் கட்சி எதிர்காலத்தில் திராவிடக் கட்சிகளுக்கு மாற்றாக அமைந்து, ஒரு நல்ல அரசியல் கலாசாரத்தை உருவாக்கும்!' என்று மக்கள் நினைத்தார்கள். அதற்கு வலுவூட்டும் வகையில், 'தமிழகத்தில் காமராஜ் ஆட்சியை அமைப்போம்!' என்று த.மா.கா.வினரும் மறக்காமல் மேடைகளில் பேசி வருகிறார்கள். மூப்பனாரும் 'நாங்கள் எங்கள் தனித்தன்மையைத் தொடர்ந்து கட்டிக் காத்து வருவோம்!' என்று கூறி வருகிறார். இதைக் கேட்கும் தி.மு.க. உடன்பிறப்புகள் சங்கடத்தில் நெளிகிறார்கள்.

"ராவும் - ஜெ.வும் சேர்ந்து கூட்டணி அமைத்து, நாட்டு மக்களை ஏமாற்ற நினைத்த போது, அதை எதிர்த்து ஓர் ஆவேசத்தில் உருவானதுதான் த.மா.கா. அதன் நோக்கம் நிறைவேறி விட்டது. என்றாலும் தொடர்ந்து அது ஒரு அரசியல் கட்சியாக நிலைத்து நிற்க வேண்டுமானால் மக்கள் பிரச்னைகளை அது சரியான கோணங்களில் அணுக வேண்டும்!" என்கிறார் பண்ருட்டி ராமச்சந்திரன்.

காங்கிரஸ் கலாசாரத்தில் ஊறியதுதான் த.மா.கா. என்றாலும் அதன் செயல்பாடுகள் மிகவும் திருப்தியளிக்கின்றன என்பதே பலரது கணிப்பு. குறிப்பாக கட்சி துவங்கிய ஒரு வருடத்திலேயே உட்கட்சித் தேர்தல்களை நடத்தி முடித்தது மிகப் பெரிய சாதனை.

பல மாவட்டங்களுக்கான தலைவர் பதவிக்கு மூப்பனார் விரும்பியவர்கள்தான் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இந்த நிலையிலும் மூப்பனாரின் முடிவை ஏற்றுச் செயல்படுத்துவதில் தொண்டர்கள் உற்சாகம் காட்டினார்களே தவிர, அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை என்பது அக்கட்சியின் இன்னொரு பலம்.

ஆனாலும், இந்தத் தேர்தல் கட்சிக்காரர்கள் எல்லோரையும் திருப்திப்படுத்தவில்லை. 'பொதுத் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்டுப் பொறுப்புகளில் இருப்பவர்கள் கட்சிப் பதவிகளுக்குப் போட்டியிடக் கூடாது!' என்று நியாயமாக ஒரு கண்டிஷன் போட்டது பலருக்கு வருத்தம்!

தேசியநலன் என்று வருகிறபோது மறுபடியும் காங்கிரஸில் இணைகிற முடிவை மூப்பனார் எடுப்பாரா?

"த.மா.கா. என்பது ஒரு சந்தர்ப்பத்துக்காக மட்டும் பிறந்த கட்சி அல்ல!" என்கிறார் மூப்பனாருக்கு நெருக்கமாக இருக்கும் ராஜ்ய சபா எம்.பி.யான பீட்டர் அல்போன்ஸ்.

"தமிழக மக்களின் நீண்ட நாள் தேவையைப் புரிந்து கொண்டு உருவானதுதான் த.மா.கா. இந்திய அரசியல் கட்சிகளில் இரண்டு வகை உண்டு. ஒன்று பிராந்தியக் கட்சிகள்; மற்றொன்று தேசியக் கட்சிகள். கடந்த சில ஆண்டுகளாகப் பல மாநிலக் கட்சிகள் வேகமாக வளர்ந்து வருவதைப் பார்க்கிறோம். இவை மக்களிடம் ஒரு பிராந்தியப் பார்வையை ஊக்குவித்து வருகின்றன. சில நேரங்களில் பிராந்திய நலன்கள், தேசிய நலன்களுக்கு மாறாக இருக்கும்போது, தேசியக் கட்சிகளால் அந்தப் பிரச்னைகளில் ஒன்றும் செய்ய முடிவதில்லை. உதாரணமாக காவிரி. இந்தப் பிரச்னையில் பிராந்தியக் கட்சிகளின் போக்குத்தான் மக்களிடையே எடுபடும். இப்படி முக்கியப் பிரச்னைகளில் தேசியக் கட்சிகள் செயலிழக்கும்போது, மாநில கட்சிகள் இடைவெளியில் புகுந்து தங்கள் பிடிப்பை இறுக்கிக் கொண்டு விடுகின்றன. இதைத் தவறு என்று சொல்லாவிட்டாலும் இந்தப் போக்குகளால் கால ஓட்டத்தில் தேசிய நலன்கள் முற்றிலும் புறக்கணிக்கப்படக்கூடிய சூழ்நிலை வரலாம். அப்படியொரு சூழ்நிலை உருவாகாமல் தடுப்பதற்காகவே தேசியப் பார்வை கொண்ட பிராந்தியக் கட்சிகள் தேவைப்படுகின்றன. அப்படி ஏற்பட்ட அரசியல் பரிசோதனையில் பிறந்த முதல் குழந்தைதான் த.மா.கா!" என்கிறார் பீட்டர் அல்போன்ஸ்.

"எங்கள் தலைவர் கறைபடாத தலைவர். பதவியில்

இல்லாவிட்டாலும், தமக்கென தனி மரியாதையைப் பெற்று வருபவர் அவர்'' என்று பெருமையுடன் சொல்லிக் கொள்கிறார்கள் கட்சித் தொண்டர்கள். அவர்களின் நெஞ்சைத் தட்டிப் பார்த்தால், 'தனியாகவே இயங்குவோம்' என்ற குரல் கேட்டுக் கொண்டிருப்பது புரியும். காரணம், உள்ளாட்சித் தேர்தல்களில் இ.மு.க. – த.மா.கா. தொண்டர்களுக்கிடையில் ஏற்பட்ட உரசல்.

''உள்ளாட்சித் தேர்தலின்போது கீழ்மட்டத்தில் இருகட்சித் தொண்டர்களுக்கும் கொஞ்சம் கருத்து வேறுபாடுகள், சச்சரவுகள் இருந்தன. ஆனால் அவையெல்லாம் குடும்பத்தில் ஏற்படும் பிரச்னைகள் போன்றதுதான்!'' என்று பண்ருட்டி போன்றவர்கள் கூறினாலும் மக்கள் பிரச்னைகளில் இன்னும் கொஞ்சம் தீவிரமாக இறங்கிச் செயல்பட வேண்டும் என்று சொல்பவர்களும் இருக்கிறார்கள்.

''எதிர்க்கட்சி என்றாலே தினசரி சட்டமன்றத்தில் வெளிநடப்பு, மறியல், போராட்டம் செய்ய வேண்டுமென்று மக்கள் எதிர்பார்க்கிறார்கள். இ.மு.க.வும், த.மா.கா.வும், சட்டமன்றத் தேர்தலில் கூட்டணியாக நின்று ஜெயித்த கட்சிகள். ஒரே பிரசவத்தில் பிறந்த இரட்டைக் குழந்தைகள். இ.மு.க. ஆட்சியில் தவறே நடக்கவில்லை என்று நான் சொல்ல மாட்டேன். ஆனால் உறவை முறித்துக் கொள்ளும் அளவுக்கு இமாலயத் தவறு எதுவும் நடக்கவில்லை என்பது மட்டும் நிச்சயம். விலைவாசி ஏற்றத்துக்கு இ.மு.க.வை மட்டும் குறைசொல்வது சரியல்ல என்பது என் கருத்து. சரியான காரணங்கள் இன்றி, இ.மு.க.வுடனான உறவை முறித்துக் கொண்டால், மக்கள் எங்களைப் பற்றி என்ன நினைப்பார்கள்? கொள்கை இல்லாத சந்தர்ப்பவாதக் கூட்டணி அமைத்திருந்தோம் என்றல்லவா எங்களைக் குறைகூறுவார்கள்?'' என்று கேட்கிறார் பீட்டர் அல்போன்ஸ்.

இவற்றோடு, ''மக்களுக்கு அரசியல் மீதும் அரசியல்வாதிகள் மீதும் நம்பிக்கை குறைந்து வருகிறது. இந்தப் போக்கை த.மா.கா. தடுத்து நிறுத்தி இருக்கிறது. லட்சியப் பிடிப்பும் நல்ல கொள்கைகளும் கொண்ட தலைவர்களுக்குத் தங்கள் ஆதரவு உண்டு என்பதை த.மா.கா.வுக்குக் கொடுத்து வரும் ஆதரவின் மூலம் மக்கள் உணர்த்தி வருகிறார்கள். மக்களுக்கு பாராளுமன்ற ஜனநாயகத்தின் மீது நம்பிக்கையை வளர்ப்பதுதான் த.மா.கா.வின் முக்கியமான பணிகளில் ஒன்று'' என்கிறார் பீட்டர் அல்போன்ஸ்.

மூலைக்கொருவராக சிதறிக் கிடக்கும்



• குமரி அனந்தன்



• பீட்டர் அல்போன்ஸ்

தமிழக இ. காங்கிரஸ் தலைவர்களோ, 'இல்லாவிடினும் என்றாவது ஒருநாள் காங்கிரஸுடன் வந்து த.மா.கா. இணைந்தே தீரும்!' என்று உறுதியாக நம்புகிறார்கள்.



• பண்ருட்டி ராமச்சந்திரன்

''தேசிய சக்திகள் ஒன்றுபடும்போது த.மா.கா.வும் ஒன்றுபடும். உலக அளவில் இந்தியா தலைநிமிர்ந்து நிற்க வேண்டுமானால், காங்கிரஸ் இயக்கத்துக்கு வலிமையூட்டுவதன் மூலமே அதைச் செய்ய முடியும் என்பதை எங்களிடமிருந்து பிரிந்து சென்றவர்கள் விரைவில் உணர்வார்கள். சோனியா அவர்கள் காங்கிரஸில் முக்கியப் பொறுப்பு வகிப்பது ஒற்றுமைக்கு வழிவகுக்கும். அது நடக்கத்தான் போகிறது!'' என்கிறார் குமரி அனந்தன் நம்பிக்கையோடு.

குமரியார் சொல்வது போல சோனியா தலைமைப் பொறுப்பேற்க வந்து விட்டால், மூப்பனார் ஒரு முடிவெடுக்கத் தள்ளப்படுவார்.

குமரியார் நினைப்பது போல் நடக்காமல், அகில இந்திய அளவில், காங்கிரஸின் பொறுப்பு மூப்பனார் கரங்களுக்கு வருமேயானால், அந்த நிலையிலும், த.மா.கா.வின் எதிர்கால நிலைத் திட்டம் பற்றி யோசிக்க வேண்டியிருக்கும். மூன்றாவதாக, ஆளும் கட்சியான இ.மு.க. ஏதாவது சொதப்பல் வேலைகள் செய்து பெயரைக் கெடுத்துக் கொண்டால், ரஜினி ஆதரவோடு காமராஜ் ஆட்சியைத் தமிழ்நாட்டில் நிலைநாட்டவும், மூப்பனார் தயாராக இருக்க வேண்டும். இப்படி எதிர்காலத்தில் மிகவும் முக்கிய முடிவுகளை எடுக்க வேண்டிய நிலையில் மூப்பனார் இருக்கிறார்.

- ப்ரியன்

(மூப்பனார் பேட்டி, அடுத்தப் பக்கம்)

**த.மா.கா. துவங்கப்பட்டு இந்த வாரத்தோடு ஓராண்டு நிறைவு பெறுகிறது. இந்தச் சந்தர்ப்பத்தையொட்டி மூப்பனாரைச் சந்தித்தபோது, வழக்கம் போலவே எல்லாக் கேள்விகளுக்கும் ஒப்பனையில்லாமல் பதிலளித்தார்....**

**"தமிழ் மாநில காங்கிரஸ் ஆரம்பிக்கப்பட்டு ஓராண்டு நிறைவு பெற்று விட்டது. ஆண்டு நிறைவு பெற்றிருப்பதைப் போல உங்கள் மனமும் நிறைவு பெற்றிருக்கிறதா?"**

"மகிழ்ச்சிதான் என்று சொன்னாலும் இன்னும் அது நிறைவான மகிழ்ச்சி என்று சொல்ல முடியவில்லை."

**"ஏன்?"**

"எங்கள் கட்சிக்கு மிகப் பெரிய ஆதரவையும் வெற்றியையும் கொடுத்த மக்களின் மனநிலையை முழுமையாக உணர்ந்து செயல்படுகிறோமா என்கிற கேள்விக்குறி இன்னமும் என் மனத்தில் இருந்து கொண்டேதான் இருக்கிறது."

**"அந்தக் கேள்விக்குறிக்கு அர்த்தம்?"**

"இனிமேல்தான் கண்டுபிடிக்க வேண்டும்!"

**"எப்படி?"**

"கட்சியிலுள்ள அனைவருடனும் கலந்து பேசித்தான் கண்டுபிடிக்க வேண்டும்."

**"த.மா.காவின் சாதனைகள் என்று எவற்றைச் சொல்வீர்கள்?"**

"மக்களின் அமோக ஆதரவுடன் பெற்ற தேர்தல் வெற்றியே மிகப் பெரிய சாதனை தானே! பிறகு திருச்சியில் நடந்த மாநில மாநாடு. அதன் பிறகு உள்ளாட்சித் தேர்தலில் வெற்றி பெற்றவர்களை அழைத்து ஈரோட்டில் மாநாடு. இவை எல்லாவற்றையும் விட மிகப் பெரிய சாதனையாக நான் கருதுவது, கட்சி தொடங்கப்பட்ட மிகக் குறுகிய காலத்துக்குள்ளாகவே ஐம்பத்தைந்து லட்சம் உறுப்பினர்களைச் சேர்த்து நடத்தப்பட்ட உட்கட்சித் தேர்தல்!"

**"உட்கட்சித் தேர்தலில்..."**

"நீங்கள் என்ன கேட்க வருகிறீர்கள் என்பது எனக்குப் புரிகிறது. சில இடங்களில் நான் சொன்ன ஆட்கள்தானே போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள் என்று கேட்கப் போகிறீர்கள்; இது எப்படி முழுமையான ஜனநாயகம் ஆகும் என்று கேட்கப் போகிறீர்கள்; இதுதானே! நான் சொன்ன சிலர் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது



உண்மைதான். அதற்குக் காரணம், த.மா.கா. என்பது இப்போதுதான் நடக்க ஆரம்பித்திருக்கிற குழந்தை. அந்த நிலையில் அதை முழுமையான ஜனநாயகம் என்று ஓடச் சொல்வது சரியாக இருக்காது. அதற்கு முதலில் நடைவண்டி கொடுத்து நடைபயிலச் செய்ய வேண்டும். அந்த வகையில்தான் நான் மிகச் சில இடங்களில் தலையிட்டிருக்கிறேன். அடுத்த தேர்தலில் நடைவண்டி என்கிற எனது தலையீடு நிச்சயம் இருக்காது."

"இதனால் தொண்டர்களுக்கு மனவருத்தம் உண்டாக வாய்ப்பிருக்கிறதே!"

"அப்படியொரு மனவருத்தம் இருந்தாலும் அது நேரடியாக என் மேல்தான் இருக்க முடியும். ஆங்காங்கே இருக்கிற சில தொண்டர்களுக்குள் மனவருத்தம் வருவதைக் காட்டிலும் அவர்களுக்கு நேரடியாகவே என் மேல் இருப்பது பரவாயில்லை என்பதால்தான் மிகச் சில இடங்களில் நான் அப்படிச் செயல்பட்டேன். இதில் என்னிடம் ஒளிவுமறைவே இல்லை."

"எதிர்க்கட்சித் தலைவராக இருக்கிற சோ. பாலகிருஷ்ணன், தமிழகத்தில் காமராஜர் ஆட்சி நடப்பதாகச் சொல்லியிருக்கிறாரே?"

"காமராஜர் ஆட்சி என்பது என்ன? நல்ல ஆட்சி. கலைஞர் நல்ல ஆட்சி நடத்துகிறார். ஆக இது காமராஜர் ஆட்சி என்கிற அர்த்தத்தில் பேசியதாகத்தான் அவர் என்னிடம் சொன்னார். அதில் தவறு ஒன்றும் இல்லையே!"

"நல்ல ஆட்சி நடப்பதாக நீங்களும் ஒப்புக் கொள்கிறீர்கள்!"

"கீழே இருக்கிற ஒரு வகையில் பார்த்தால் இந்த ஆட்சியைக் குறைசொல்கிற அளவுக்கு எதுவும் இல்லை."

"சட்டசபையில், உங்கள் கட்சி எம்.எல்.ஏக்கள் செயல்படும் விதம் உங்களுக்குத் திருப்தியாக இருக்கிறதா?"

"நன்றாகவே செயல்படுகிறார்கள்; முறையாகவும் செயல்படுகிறார்கள். இருந்தாலும் இன்னும் அதை முறைப்படுத்த வேண்டும் என்றே கருதுகிறேன்."

"எப்படி?"

"எம்.எல்.ஏக்களையெல்லாம் அழைத்துப் பேசப் போகிறோம். இன்னும் முறையாகச் செயல்படுவது பற்றி அப்போது முடிவெடுப்போம்."

"உங்கள் கட்சி எம்.எல்.ஏ.வான அழகிரி கூட காவிரிப் பிரச்னையில் உணர்ச்சிவசப்பட்டுப் பேசினாரே? நீங்கள் கூட..."

"அவரும் காவிரி டெல்டா பகுதியிலிருந்து வருபவர். அதனால் உணர்ச்சிவசப்படுவது இயல்பு. அதில் தவறு ஒன்றும் இல்லை. ஆனாலும் காவிரிப் பிரச்னைக்காக கௌடா அரசுக்கு அளித்துவரும் ஆதரவை வாபஸ் பெற வேண்டும் என்கிற அளவில்

# நீண்டும் காங்கிரஸில் இணைந்தால், நான் மட்டும்தான் இணைய வேண்டும்!

பேசியதைத் தான் நான் கூடாது என்றேன். மற்றபடி ஒன்றுமில்லை. நாங்கள் எதிரிக் கட்சியாகத்தான் செயல்பட மாட்டோமே தவிர, தவறுகள் நடந்தால் அதைச் சுட்டிக்காட்டுகிற எதிர்க் கட்சியாகச் செயல்படுவோம். தவறுகளுக்கு உடந்தையாக இருக்க மாட்டோம். இதில் எந்தவிதமான சந்தேகமும் இல்லை."

சிலர் எங்கேயாவது தவறுகள் செய்யலாம். நூறு சதம் ஊழலை ஒழிப்பது கஷ்டம் அல்ல என்று காமராஜரே சொல்லியிருக்கிறார். ஆனாலும் மேலே இருப்பவர்கள் ஊழல் செய்யக் கூடாது. அவர்கள் தூய்மையானவர்களாக இருந்தால் எங்கோ நடக்கிற ஒன்றிரண்டு தவறுகளும் பயந்து பயந்துதான் நடக்கும். அதைச் சரிசெய்வதும் கஷ்டம். இந்த

"உள்ளாட்சித் தேர்தலில் கூட உங்கள் கட்சித் தொண்டர்களுக்கும் தி.மு.க. தொண்டர்களுக்கும் சில இடங்களில் உரசல்கள்

ஏற்பட்டதே?''

''உண்மைதான். சில இடங்களில் இது போன்ற விஷயங்களைத் தவிர்ப்பது மிகவும் கடினம். அதைப் பெரிதுபடுத்த வேண்டிய அவசியம் இல்லை. ரொம்ப சாதாரண விஷயம்.''

''பா.ம.க. நடத்திய இலங்கைத் தமிழர் ஆதரவு மாநாட்டில், விடுதலைப் புலிகளை வெளிப்படையாகவே ஆதரித்துப் பேசினார்கள். ஆனாலும் அவர்கள் மேல் தி.மு.க. அரசு நடவடிக்கை எடுக்கத் தயக்கம் காட்டுகிறதே?''

''இலங்கைத் தமிழர்களை ஆதரிப்பதற்கும் விடுதலைப் புலிகளை ஆதரிப்பதற்கும் இடையிலான கோடு மிக மிக மெல்லிய கோடுதான். எனவே, அந்த விஷயத்தில் தி.மு.க. அரசு ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என்றே விரும்புகிறோம். இருப்பார்கள் என்றும் நம்புகிறோம்.''

''விலைவாசி உயர்வு என்பது இப்போதைய மிகப் பெரிய பிரச்னையாக உள்ளது. இதில் உங்களுக்கும் பங்குண்டு அல்லவா?''

''நமது நிதியமைச்சர் சமர்ப்பித்திருக்க பட்ஜெட் நல்ல பட்ஜெட் என்று அனைவரும் பாராட்டுகிறார்கள். விலைவாசி உயர்வைத் தடுப்பதற்கான முயற்சிகள் நிச்சயம் மேற்கொள்ளப்படும்.''

''இந்த பட்ஜெட்டை மன்மோகன்சிங் குறைகூறியிருக்கிறாரே!''

''அவரும் அரசியல்வாதிதானே?''

''மன்மோகன் சிங்கும் மற்ற அரசியல்வாதிகளைப் போல்தான் பேசுவார் என்று நீங்களும் நம்புகிறீர்களா என்ன?''

''அவர் பொருளாதாரத்தில் சிறந்த அறிவு படைத்தவர்தான். என்றாலும் அவரும் காங்கிரஸ் கட்சியில் ஓர் உறுப்பினர்தானே! அந்த வகையில், ஏதாவது குறை சொல்ல வேண்டும் என்று பேசியிருப்பார். ஒருபோதும் நாங்கள் மக்கள் பிரச்னைகளை மறந்து விட மாட்டோம். மக்கள் பிரச்னைகளை மழுப்பியோ, மூடி மறைத்தோ தொடர்ந்து ஆட்சியில் இருக்க வேண்டும் என்கிற எண்ணம் எங்களுக்கு நிச்சயம் இல்லை.''

''தேர்தலுக்கு முன்பிருந்த மக்களின் உணர்வுகளுக்கும், மக்களின் இப்போதைய உணர்வுகளுக்கும் வித்தியாசத்தைப் பார்க்க முடிகிறதா?''

''முன்பு புயலாக இருந்த மக்கள் இப்போது தென்றலாக இருக்கிறார்கள்: நல்லாட்சி நடந்து கொண்டிருக்கிறது என்று சொல்கிறார்கள். மக்களின் இந்த நம்பிக்கையைத் தொடர்ந்து காப்பாற்றுவோம்.''

''இன்னமும் கூட காங்கிரஸ் கட்சியில் உள்ளவர்கள், நீங்கள் மறுபடியும் காங்கிரஸில் இணைவீர்கள் என்று சொல்கிறார்களே?''

''நான் மறுபடியும் வந்து சேரவேண்டும் என்று அவர்கள் அழைப்பு விடுப்பதை நானும் பத்திரிகைகளில் படித்துக் கொண்டுதான் இருக்கிறேன்.'' (சிரிக்கிறார்!)

''காங்கிரஸின் தலைவராக சோனியா காந்தி பொறுப்பேற்றால் நீங்கள் மீண்டும் காங்கிரஸில் இணைவீர்கள் என்று ஒருசிலர் சொல்கிறார்கள்!''

''அவர் இன்னும் பொறுப்பேற்கவில்லையே! (சிரிக்கிறார்.) அப்படி நடந்தால்... இப்படி நடந்தால்... என்கிற மாதிரி நானும் மீண்டும் காங்கிரஸில் இணைந்தால் என்ற கேள்விக்குப் பதில் சொல்கிறேன். இப்போது மக்களிடம் எனக்கென்று ஒரு மரியாதை- Credibility இருக்கிறது. நான் மறுபடியும் காங்கிரஸில் இணைந்தால் நான் மட்டும்தான் இணைய வேண்டும். மக்கள் என் மேல் வைத்திருக்கிற அந்த மரியாதையும் என் கூடவே வந்து இணையுமா? அதையும் என்னால் கொண்டு போய்ச் சேர்க்க முடியுமா? இது மிகப் பெரிய கேள்விக்குறியல்லவா!''

பேட்டி : **இளங்கோவன்**
படம் : **கோபிநாத்**

**ஏழாவது மனிதன்**



''எவனுமே என்னை முக்கிய மானவனா மதிக்கிறதில்லே!''

''ரொம்பத்தான் புலம்பறீங்களே! என்ன விஷயம்?''

''பிடிபட்ட தீவிரவாதி வச்சிருந்த ஹிட்லிஸ்ட்ல என் பெயர் ஏழாவது இடத்தில்தான் இருக்கு!''

— உ. ராஜாஜி

படித்ததில் பிடித்தது!

# வெறும் கதை!




இதுவரை தமிழ் நாவல் எதிலும் இடம்பெறாத புதிய களத்தை மாத்தளை சோமுவின் 'அந்த உலகத்தில் இந்த மனிதர்கள்' நாவல் வெளிப்படுத்துகிறது. ஆனால், அது கலையாகியிருக்கிறதா என்பதுதான் கேள்வி.

இலங்கையில் களுகங்கை ஆற்றின் கரையில் மாணிக்கக் கற்களைத் தேடும் மனிதர்களில் மணியமும் ஒருவன். அவனையே நம்பியிருக்கிற பெரிய குடும்பம், அவனுக்காகவே காத்திருக்கிற அத்தை மகள், இவர்களின் ஆசைகளை என்றாவது கிடைக்கவிருக்கிற மாணிக்கக் கற்களால் நிறைவேற்றி வைக்கலாம் என்ற நம்பிக்கையில் மாணிக்கக்கல் வேட்டையில் ஈடுபட்டிருக்கிறான் மணியம். இறுதியில் கல்லுக்காகத் தோண்டிய சுரங்கத்தினுள்ளேயே மண்ணோடு மண்ணாகப் புதைந்து போகிறான் என்ற சோகமான முடிவோடு நாவல் நிறைவு பெறுகிறது.

இலங்கையில் மாணிக்கக் கற்கள் தோண்டுவதற்கு இணையான ஒரு பொக்கிஷ வேட்டை 1850-களில் அமெரிக்காவில் நடந்தது. கலிபோர்னியாவிலும், அலாஸ்காவின் பனிப் பகுதிகளிலும் அரிசோனாப் பாலையிலும் தங்கம் கிடைக்கிறதென்று மக்கள் குவிந்தார்கள். தங்கத்தைத் தேடி அலைந்தார்கள். பலர் உயிரிழந்தார்கள். இது எழுத்தாளர்களுக்கும் சினிமா கலைஞர்களுக்கும் பெரிய கருப்பொருளாகியது. பல படைப்புகள் உருவாகின. இந்தத் தங்க வேட்டைக்காக அலாஸ்காவின் பனிப் பிரதேசங்களில் ஸ்லெட்ஜ் என்ற சறுக்கு வண்டியை இழுத்துச் செல்ல நிறைய நாய்கள் தேவைப்பட்டன. நீதிபதியின் வீட்டில் செல்லமாக வளர்ந்த ஒரு உயர்ஜாதி நாய், துரதிருஷ்டவசமாக நாய்களைச் சேகரிப்பவர்கள் கையில் அகப்பட்டு ஸ்லெட்ஜ் வண்டி இழுக்கும் நாயாகப் பணியில் அவதிப்படுகிறது. ஜாக் லண்டன் என்ற எழுத்தாளரின் 'கானகத்தின் குரல்' என்ற நாவலின் கதை இதுதான். ஈடுஇணை சொல்ல முடியாத மகத்தான இலக்கிய சிருஷ்டி அது. புரட்சிக்காரரான லெனினையே கவர்ந்த நாவல் . சார்லி சாப்ளின் என்ற சினிமா மேதை நடித்த 'கோல்டு ரஷ்' என்ற சினிமாவும் இந்தத் தங்க வேட்டை பற்றிய, காலத்தால் அழியாத ஒரு அமர சிருஷ்டிதான்.

மாத்தளை சோமுவின் இந்நாவல் இதுபோன்ற அமர வேதனை எதையும் ஏற்படுத்தவில்லை. நாவலில் நம்பகத் தன்மையோ, உயர்ந்த அனுபவ வெளிப்பாடோ நிகழவில்லை. பல்வேறு மதத்தவரும் ஒன்றாக, அன்னியோன்யமாக இருக்கிறார்கள் என்பதைக் காட்டுவதற்காக மாணிக்கத்துடன் இந்து, முஸ்லீம் மற்றும் சிங்களவரும் வேலை பார்க்கின்றனர் என்பதை வலிந்து திணித்துள்ளார். தவிர, ஆசிரியரது உரைநடை வறட்டுத் தனமாக இருக்கிறது. 'ஓ! அந்த மனிதர்கள்...' என்று அடிக்கடி 'ஓ!... ஓ!...' என்று வியப்புக் கலந்த தொனியில் ஜெயகாந்தனைப் போல எழுத முயற்சி செய்கிறார்.

நாவலில் மணியத்தைச் சுற்றிப் பல துயர சம்பவங்கள் நடைபெறுவதாகக் காட்டப்படுகிறது. ஆனால், எதுவும் மனதைத் தொட முடியாமல் வெறும் பத்திரிகைச் செய்தியாக மறைகிறது. சம்பவங்களை அமைக்கும்விதத்திலும் அதைச் சொல்லும் விதத்திலும்தான் கலையாகிறது. 'ஆண்டவரே என்னை ஏன் கைவிட்டீர்' என்று சிலுவையில் இயேசு கிறிஸ்து அறையப்பட்டபோது சொன்ன அந்த மகாவாக்கியம் 20 நூற்றாண்டுகளைத் தாண்டி இன்றும் கேட்கிறது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வறுமையைப் பார்த்து 'பரந்து கெடுக உலகியற்றியான்' என்று திருவள்ளுவர் சொன்னது இன்றும் எதிரொலிக்கிறது. ஒரு கலைஞனால்தான் இது சாத்தியமாகும்.

பேனாவிலிருந்து உருவாவது கதை. மனதின் அடியாழத்திலிருந்து உருவாவதே இலக்கியம். இந்த நாவல் வெறும் கதை.

**- வண்ணநிலவன்**

**அந்த உலகத்தில் இந்த மனிதர்கள் (ஸ்ரீலங்கா சாகித்திய விருதுபெற்ற நாவல்), எழுதியவர் : மாத்தளை சோமு; தமிழ்க்குரல் பதிப்பகம், *8/116* The Cresecent, Homebush West, N.S. W-2140, Australia; விலை : ரூ. *40*.**



அந்த அறையில் மொத்தம் இருபது பேர். பொறியியல், மருத்துவம் போன்ற தொழிற்படிப்புகளில் சேருவதற்கான நுழைவுத் தேர்வு. சுந்தர் சத்தியமாக எதிர்பார்க்க வில்லை – அறை முழுவதும் இப்படி பெண் மாணவர்களாக வந்து வாய்ப்பார்கள் என்று!

அவன்தான் எக்ஸாம் சூப்பர்வைசர் என்ற போதும், இதுவே இரண்டு மாதத்திற்கு முன் பாக இருந்தால், அவனது பார்வைக் கோணம் கொஞ்சம் வித்தியாசமாகவே இருந்திருக்கும். இப்போது அப்படி இல்லை!

அவனுக்குக் கிட்டத்தட்ட திரு மணம் நிச்சயமாகி விட்டது. அவ னுக்கென்று ஒரு பெண் உரிமை யாவதற்குத் தொண்ணூறு சதம் உறுதியாகி விட்ட நிலை.

அறையை இடமிருந்து வல மாக ஒருமுறை தோரணை யோடு பார்வையிட்டான். ஒரு பையன் கூட இல்லை. எல்லோருமே சுரிதார், சல்வார், மிடி என்று மாடர்ன் உடைகளில் இருந்

# அவளா

தார்கள்.

அவன் பணிபுரிவதோ ஆண்கள் மட்டும் பயிலும் இன்ஜினியரிங் கல்லூரி. இப்போது அவனுக்குள் நிறையவே கூச்சம் பரவியது.

"டியர் ஸ்டூடண்ட்ஸ்! வினாப் புத்தகத் தைக் கொடுத்ததும் யாரும் உடனே பிரித்து விடக் கூடாது. அறிவிக்கும் போதுதான் பின் களை அகற்றிப் பிரிக்க வேண்டும். அதுவரை மேல் பக்கத்தில் உங்கள் பதிவு எண், பெயர் போன்ற தகவல்களைப் பூர்த்தி செய்ய வேண் டும். கையொப்பம் இடவேண்டும். புத்தகத் தைப் பிரித்தபின் உள்ளேயும் இரண்டு கையொப்பம் இடவேண்டும்...." – சுந்தர் தன் கணீர் குரலில் அறிவிப்புகளைச் செய்ய ஆரம் பித்தான்.

இன்னும் ஐந்து நிமிடங்கள் இருந்தன – வினாப் புத்தகங்களை விநியோகம் செய்ய. இருபது பெண்களும் அநேகமாக ஒரேவித

மான பதற்றத்தோடு அவனையே கவனித்துக் கொண்டிருந்தார்கள்.

சுந்தர் சிவில் இஞ்சினீயரிங்கில் முது நிலைப் பட்டதாரி. பிரபலமான கல்லூரி ஒன்றில் விரிவுரையாளர். அவனுக்குப் பார்த்திருந்த பெண்ணோ, இறுதியாண்டு மருத்துவக் கல்லூரி மாணவி. பணத்துக்குப் பஞ்சமில்லாத வசதியான குடும்பத்தைச் சேர்ந்தவள்.

"எல்லாம் நீங்க பார்த்து முடிவு பண்ணுங்கம்மா. ஜாதகம் மற்ற பொருத்தமெல்லாம் உங்க மனசுப்படி அமைஞ்சுதுன்னா கடைசியா நான் பொண்ணைப் பார்த்துக்கலாம். அது கூட கம்மா ஃபார்மாலிட்டிக்குத்தான். உங்களுக்கு சரின்னா எனக்கும் சரிதான்" என்று அழுத்த

# இவள்?

மாகச் சொல்லி விட்டான் ஆரம்பத்திலேயே. அதன்படியே எல்லாம் நடந்து, இப்போது இறுதிக்கட்டத்தில் வந்து நின்றது. பெண்ணும் மாப்பிள்ளையும் பார்த்துக் கொண்டு ஓ.கே. சொல்ல வேண்டியதுதான் பாக்கி!

''வர்ற ஞாயிற்றுக்கிழமை மதுரை போறேன்டா சுந்தர், பெண் பார்க்க. அன்னிக்கு வேற வேலை எதுவும் வைச்சுக்காதே" என்று இரண்டு நாள் முன்பே அம்மா சொல்லியிருந்தாள். கூடவே "இதோ பார்த்துக்கோ. பெண்ணோட போட்டோ அனுப்பியிருக்காங்க" என்று நீட்டினாள்.

ஒருசில விநாடிகள்தான் பார்த்திருப்பான்! நேர்த்தி என்றால் அப்படி ஒரு நேர்த்தி. மூக்கும், கண்களும், புருவமும்.... அந்த முகம் அப்படியே அவனுக்குள் உட்கார்ந்து கொண்டது.

அம்மா அதற்குள் போட்டோவைப் பிடுங்காத குறையாக வாங்கிக் கொண்டாள்.

"எதிர்வீட்டு மாமி பக்கத்து வீட்டுப் பாட்டி எல்லோரும் கேட்டுட்டே இருந்தாங்க. போட்டோவைக் காண்பிக்கணும்..."

அம்மா இன்னும் கொஞ்ச நேரமாவது பார்க்க விட்டிருக்கலாம். திரும்பவும் அம்மாவிடம் போட்டோவைக் கேட்டு வாங்கக் கூச்சமாக இருந்தது.

'ம்... இன்னும் நாலைஞ்சு நாள்தானே! நேராப் பார்த்துக்குவோம்.... அந்த விஜய லட்சுமியை!...'

மாணவிகள் இன்னும் சற்றுக் கூடுதலான பதற்றத்தோடு தங்கள் பெயர் விவரங்களை நிரப்பிக்கொண்டிருந்தார்கள்.

"ஹால் டிக்கெட்டைப் பார்த்து உங்கள் எண்ணைத் தவறின்றி எழுதுங்கள்..." என்று அறிவித்துக் கொண்டே ஒவ்வொரு இடமாகச் சென்று அடையாள அட்டையை எடுத்துச் சரிபார்க்க ஆரம்பித்தான்.

அட்டையில் இருந்த புகைப் படத்தோடு வந்திருக்கும் பெண்ணின் முகத்தை ஒப்பிட்டுச் சரி பார்க்க வேண்டும்.

கடைசிக்கு முதல் வரிசையில் இருந்த பெண்ணை நெருங்கிய போது ஒரு வித்தியாசம் பளிச்சென தென்பட்டது. இருபது பேரில் இவள் மட்டுமே புடைவையில் வந்திருக்கிறாள்!

அடையாள அட்டையைக் கையில் எடுத்து புகைப் படத்தை ஊடுருவிய சுந்தர் அதிர்ந்தான். ஆனந்தமான அதிர்வுதான்!

அந்த உருவம்...? அதேதான். முகத்தைக் கவனித்தான். சந்தேகமே இல்லை. அதே நேர்த்தி. ஆனாலும் புகைப்படத்தில் ஏதோ ஒரு வித்தியாசம். சின்ன வித்தியாசம்தான்.

அவனுக்குள் படபடப்பு பரவியது. இதயத் துடிப்பு வேகமெடுத்தது.

அட்டையில் இருந்த பெயர், முகவரியை அவசரமாகக் கண்கள் கிரகித்தன.

'ராஜலட்சுமி, D/o ரகுநாதன், 67, வடக்கு விஸ்தரிப்பு, ஆரப்பாளையம், மதுரை...'

அதே முகவரிதான். அம்மா சொன்னது நினைவில் அச்சாக இருந்தது.

ராஜலட்சுமி...? அதுபற்றியும் அம்மா சொல்லித்தான் இருந்தாள்.

"பெண்ணுக்கு ஒரு தங்கை மட்டும்தான். மூணு வயசு இளையவளாம். மீனாட்சி காலேஜிலே லிட்ரேச்சர் முதல் வருஷம் படிக்கிறாளாம். அப்படியே அக்காவும் தங்கையும் ஒரே அச்சிலே வார்த்தாப்பலே முகம்! சட்டுன்னு வித்தியாசமே தெரியலை..."

"ஓஹோ...! என் 'வுட்பி'யோட தங்கை ராஜலட்சுமியா இவள்...? சென்ற வருடம் கிடைக்காததால் திரும்பவும் நுழைவுத் தேர்வு எழுது

**ராஜ்கோகுல்**

கிறாளா...? இந்த அழகுத் தங்கையைப் போலத் தானே அக்காவும் இருப்பாள்...!'

அவனுக்கு மகிழ்ச்சி பிடிபடவில்லை.

'நான்தான் உன் அக்காவுக்கு வரப்போகும் மாப்பிள்ளை என்று சொல்லி விடலாமா...? ஊஹூம்! சஸ்பென்ஸ்...'

ஆனாலும் அவனால் சும்மா இருக்க முடியவில்லை. ஏதாவது பேசிப் பார்க்கத் தோன்றியது.

"உன் பேர் என்னம்மா...?" என்றான் அவள் முகத்தை நேருக்கு நேர் பார்த்து.

அவள் பயந்து போய் விட்டாள்.

''ராஜலட்சுமி சார்...'' பதில் முனகலாக வந்தது.

மீண்டும் போட்டோவைப் பார்த்தான். 'ஃப்ளாஷ்...! - வித்தியாசம் பிடிபட்டு விட்டது. இந்த போட்டோவில் மூக்குக் கண்ணாடி இருக்கிறது. அன்று அம்மா காட்டிய விஜயலட்சுமியின் போட்டோவில் மூக்குக் கண்ணாடி இல்லை!

''போட்டோவில கண்ணாடி போட்டிருக்கே? இப்போ எங்கே போடக் காணோம்...?''

அவள் மேலும் மிரண்டாள்.

"அது.. தலைவலிக்கு.. சில சமயம் போடுவேன்..."

அடுத்து ஏதாவது கேட்டால் அழுது விடுவாளோ...? அவனுக்கு விட மனசில்லை.

''ஊர் மதுரைன்னு அட்ரஸ் இருக்கு. அங்கேயே சென்டர் இருக்கே. இங்கே வந்து எழுதறே...?'' - சற்று அதட்டலாகக் கேட்டான், மனதுக்குள் சிரித்துக் கொண்டே.

"அது... வந்து..." எச்சில் விழுங்கி விட்டு, தொடர்ந்து "எங்க ரிலேட்டிவ் வீட்டிலே தங்கியிருக்கேன்."

"ரிலேட்டிவா...? யாரது...?" - அவன் கேட்கவில்லை.

**மா**ணவிகள் வேகவேகமாக பதில் கட்டங்களை கறுப்பு தீட்டுவதில் முனைந்து விட்டிருந்தனர். இன்னும் அரை மணி நேரம் பாக்கி இருந்தது. சுந்தர் உற்சாகமாக அறையில் அங்குமிங்கும் நடந்து கொண்டிருந்தான்.

மீண்டும் அவளிடம் போய் ஏதாவது பேசச் கொடுத்துச் சீண்டத் தோன்றியது.

ஆவலை அடக்கவியலாமல் அருகே போனான். அவளது விடைத்தாளைக் கவனித்தான்.

''என்னம்மா இது? ஆன்சர் ஷீட்டிலே கையெழுத்துப் போடலே? அப்பவே சொன்னேனில்லே? போடும்மா...'' என்றான் குரலை உயர்த்தி.

அவள் கைகள் நடுங்கின. அவசரமாகத் தாளை நகர்த்தி, கையெழுத்திட்டாள். 'விஜயலட்சுமி' என்று தெளிவாகப் படிக்கக்கூடிய எழுத்துக்களில்!

சுந்தரின் மூளை அவனுக்கு அவசரமாகச் செய்தி சொன்னது.

''உன் உண்மையான பேரு என்னம்மா...?''

"ராஜலட்சுமி... இல்லே.. ராஜலட்சுமி..."- தடுமாறினாள்.

அவன் ஒரு முடிவு செய்தான்.

**மா**லையில் வீடு திரும்பியபோது அம்மா கடுங்கோபத்தில் இருந்தாள். அதற்குள் தகவல் எட்டி விட்டது.

"அவதான்டா உனக்கு பார்த்து வைச்சிருந்த டாக்டர் பொண்ணு."

"தெரியுமே..." - சாதாரணமாகச் சொன்னான் சுந்தர்.

''தெரிஞ்சுமா புடிச்சுக் கொடுத்தே? என்னடா இது?''

''என்னோட வேலையைத்தாம்மா செஞ்சேன். ஆள் மாறாட்டம் பண்ணி தேர்வு எழுதறது பெரிய குற்றம்மா. உருவ ஒற்றுமையைப் பயன்படுத்தி தங்கைக்காக அக்கா பரீட்சை எழுதினா எப்படிம்மா விட முடியும்? என்னாலே முடியலை."

"பெரிய இடம்டா. டாக்டர் வேற. இது மாதிரி அமையாதுடா..'' அம்மா கெஞ்சலாகப் பேசினாள்.

''பரவாயில்லேம்மா. எனக்குப் படிக்காத பொண்ணா இருந்தாக் கூட பரவாயில்லேம்மா. ஆனா மனசாட்சியையே ஏமாத்தத் துணியக்கூடிய பெண் வேண்டாம்மா...'' தீர்மானமாகச் சொன்னான் சுந்தர்.

**ஷாக்**




'' மின்சாரக் கனவு படத்துக்குக் காதலியைக் கூட்டிட்டுப் போனது தப்பாப் போச்சு!''

''ஏன்?''

''ஸிம்பாலிக்கா பாதிரியார் டிரஸ்ஸை 'பார்த்டே பிரசன்டா' அனுப்பியிருக்கா!''

– ஆர்.எஸ். சந்திரசேகர்.

மூழ்காத ஷிப் :



• பாரதி • வாசு

# "மாதா பிதா குரு நண்பன் தெய்வம்..."

வெஸ்லி உயர்நிலைப் பள்ளியில் என்னுடன் படித்த நண்பர்களில் சிலரை இன்னமும் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையன்றும் சந்தித்துக் கொண்டுதான் இருக்கிறேன். நான் இயக்கும் படங்களின் கதைகளை அவர்களிடம் சொல்வேன். "நீ.. நீயேவா இந்தக் கதையை எழுதினே?" என்று அவர்கள் கிண்டலாகக் கேட்டதுண்டு. என் படம் நன்றாக இல்லையென்றால் திட்டுவார்கள். நன்றாக இருந்தால் அதிகம் பாராட்டுவார்கள் என்று சொல்லிவிட முடியாது!

இப்படி மனத்தில் பட்டதை மறைக்காமல் கூறும் நண்பர்கள் இருந்தாலும் ஒரு ஸ்பெஷல் நண்பனாக நான் கருதுவது தொழில்ரீதியாகவும் எனது தோழனாக விளங்குகிற சந்தானபாரதி தான்.

ஸ்ரீதர் இயக்கி, எம்.ஜி.ஆர். நடித்த 'மீனவ நண்பன்' படப்பிடிப்பின் போதுதான் நாங்கள் அறிமுகமானோம் - உதவி இயக்குனர்களாக. அவனுடன் பழகியபோது, அவனுடைய சோகமான குடும்பப் பின்னணியைத் தெரிந்து கொண்டேன். பிரபல தயாரிப்பாளராக இருந்த பாரதியின் அப்பா இறந்து, ஒரு வருடத்திற்குள் அவனது அம்மாவும் இறந்து விட்டார். ஜாலியாக, பட்டாம்பூச்சி போல இருக்க வேண்டிய பள்ளியிறுதிப் பருவம். ஆனால் துரதிர்ஷ்டவசமாக வீட்டுச் சூழ்நிலையில், அந்தப் பருவத்தில் அவனுக்கு நிறைய பொறுப்புகள் வந்து சேர்ந்தன.

எங்கள் நட்பு இறுக, பாரதியின் வீட்டுக்குப் போவதை நான் தினசரி வழக்கமாகவே ஆக்கிக் கொண்டேன். எங்கள் இருவரையும் இயக்குனர்களாக்க வேண்டுமென்று கங்கை அமரன் மிகவும் ஆசைப்பட்டார். என் அப்பா பண உதவி செய்ய, கங்கை அமரன் தயாரிப்பாளராக,

**இயக்குனர் வாசு**

நானும் பாரதியுமாக இணைந்து நான்கு திரைப்படங்களை ஒன்றாகவே இயக்கினோம். அப்போது நான் உறங்குவது கூட அவன் வீட்டில்தான் என்றானது. எந்த உடை யாருடையது என்றெல்லாம் பார்க்காமல் உடுத்திக் கொள்வோம்! ஒன்று நிச்சயம்! நம் எண்ணங்களையோ, பிரச்னைகளையோ, எல்லாவற்றையும் நம் உறவினர்களிடம் சொல்லிவிட முடியாது என்பதால்தான் கடவுள் நமக்கு நண்பர்களை அளிக்கிறார். உதாரணமாக, யாரிடமாவது பணத்தைக் கொடுத்து ஏமாந்தால், "ஏன் கொடுத்தே?" என்று உறவினர்கள் திட்டுவார்கள். அந்தப் பணத்தை மீண்டும் எப்படிப் பெறுவது? என்று வழி சொல்லுபவன் நண்பனாகத்தான் இருப்பான்.

நெருங்கிய நண்பர்கள் என்றாலும் திரைப்படங்களைப் பொறுத்தவரை எனக்கும் பாரதிக்குமிடையே சில வித்தியாசமான கோணங்கள். நான் கமர்ஷியலாகப் படங்களை இயக்க விரும்புபவன். அவனோ, வித்தியாசமான படங்களை எடுப்பதில் தாகம் கொண்டிருப்பவன். கமர்ஷியலாக 'சம்பாதிக்கக்'கூடிய ஒரு படத்துக்கான கதை மற்றும் திரைக்கதையை நான் எழுதி, அதை அவன் விரும்பாது போகவும் வாய்ப்புண்டு. ஒரு சங்கடத்தோடு அந்தக் கதையை அவன் என்னுடன் இயக்குவது என்பது நியாயமாகப்படவில்லை. தவிர எனக்கு எப்படி பாரதி நண்பனோ, அது போல் பாரதிக்கு கமலஹாசனும் நண்பர். வித்தியாசமான படங்களை இயக்கச் சொல்லி கமல், பாரதியை அழைத்துக் கொண்டிருந்தார்.

இந்த நிலையில் இனி நாங்கள் தனித்தனியாகவே திரைப்படங்களை இயக்குவது என்று முடிவெடுத்தோம். ஜோடியான இயக்குனர்கள் பிரிந்தபிறகு அவர்கள் வெற்றி பெற்றதாக சரித்திரமேயில்லை என்று பயமுறுத்தினார்கள். ஆனால் அதை நாங்கள் பொய்யாக்கி இருப்பதாகத்தான் நினைக்கிறேன். சேர்ந்தே இயக்கியிருந்தால் சில சங்கடங்கள் தோன்றியிருக்கலாம். சின்னதம்பி, வால்டர் வெற்றிவேல் ஆகிய கதைகளை பாரதி ஏற்றுக் கொண்டிருப்பானா என்பது கேள்விக்குறி. திரையுலகில் நான் காலூன்ற இதுபோன்ற படங்கள் மிகவும் உதவின. அதே சமயம் குணா, மகாநதி போன்ற படங்களை இயக்கி, இருமுறை தேசிய விருது வாங்கும் அளவுக்கு அவனும் உயர்ந்து விட்டான்!

இந்தப் புகழும் பெயரும் பின்னாளில் வந்தன. ஆனால் தனித்து இயங்க முடிவெடுத்த பிறகு கொஞ்ச காலத்துக்கு எனக்குப் படமில்லை. பாரதி, கமலோடு கதை விவாதத்தில் இறங்கி விட்டிருந்தான். திருமணமாகி ஒரு குழந்தைக்கும் அப்போதுதான் தகப்பனாகியிருந்த நிலை எனக்கு. படமே கிடையாது என்று சொன்னால் குடும்பத்தில் பெரும் அதிர்ச்சி ஏற்பட்டு விடும். இதனால் ஸ்டோரி டிஸ்கஷனுக்குப் போவதாகச் சொல்லி தினமும் காலையில் கிளம்பி பாரதியின் வீட்டுக்குச் செல்வேன். அங்கேயே சிற்றுண்டி, மதிய உணவு, கிரிக்கெட் என்றெல்லாம் நேரத்தைக் கழிப்பேன். பல மாதங்கள் இப்படிக் கழிந்தபிறகு கன்னடப் படம் ஒன்றை இயக்க எனக்கு வாய்ப்பு கிடைத்தது. விஷ்ணுவர்த்தனை கதாநாயகனாகக் கொண்டு எடுக்கப்பட்ட அந்தப் படம் ஹிட் ஆக, அடுத்து ராஜ்குமாரை வைத்து இயக்கும் வாய்ப்பும் வந்தது. அதே சமயம் பாரதி இயக்கிய கடமை கண்ணியம் கட்டுப்பாடு படமும் இங்கு பெரும் வெற்றி பெற்றது. எங்கள் நட்பும் சந்திப்புகளும் தொய்வடையவில்லை.

'என் தங்கச்சி படிச்சவ' படத்தை இயக்க வாய்ப்பு கிடைத்ததே என்று மகிழ்ந்த வேளையில், அந்த உற்சாகத்தை அனுபவிக்க முடியாதபடி சில சம்பவங்கள். இருபத்தேழு வயதேயான என் மனைவி மாரடைப்பால் பாதிக்கப்பட்டாள். 72 மணி நேர கெடு கொடுத்திருந்தனர் மருத்துவர்கள். இதற்கு நடுவேயும் கதை விவாதத்திற்காக அவ்வப்போது செல்ல வேண்டிய கட்டாயம் எனக்கு. அப்போதும் சரி, தொடர்ந்து மருத்துவமனையில் என் மனைவி தங்கியிருந்த ஒரு மாத காலத்துக்கும் சரி, தினமும் லஸ் ஆஞ்சநேயர் கோவிலுக்குச் சென்று அவள் உடல்நலத்துக்காக வேண்டிக் கொண்டு எங்களுக்குப் பிரசாதம் எடுத்து வருவான் பாரதி!

தொழில்ரீதியாகப் பிரிந்தபோது இருவரில் ஒருவருக்கு வெற்றி கிடைக்கவில்லையென்றால் கூட மீண்டும் சேர்ந்துவிடலாம் என்று பேசிக் கொண்டோம். பாரதியும் ஜெயித்து விட்டான். என்றாலும் அவன் கொஞ்ச காலத்துக்குக் கூட சும்மாயிருக்கக் கூடாது என்று கருதி நான் இயக்கும் படங்களில் அவனை நடிக்க வைக்கிறேன்.

என் குடும்பம் பெரியது - சுமார் நாற்பது பேர். எங்கள் வீட்டு விசேஷங்களுக்கு பாரதி தாமதமாக வந்தால் கூட "பாரதி ஏன் வரலே?" என்று என்னைத் துளைத்தெடுத்து விடுவார்கள். அந்த அளவுக்கு நாங்கள் குடும்ப நண்பர்களும் கூட.

'மாதா பிதா குரு தெய்வம்' என்று சொல்லுவார்கள். என்னைப் பொருத்தவரை "மாதா, பிதா, குரு, நண்பன், தெய்வம்" - இதுதான் சரியான வரிசை.

சந்திப்பு : அருண்சரண்யா

# எய்ட்ஸுக்கு மருந்தா?



"எய்ட்ஸ் ஆட்கொல்லி நோய்க்கு சித்தா முறையில் மருந்து கண்டுபிடிக்க முடியும். எங்களுக்கு இன்னின்ன வசதிகளைச் செய்து தாருங்கள்" என்று சுகாதார அமைச்சர் ஆற்காடு வீராசாமியிடம் கோரிக்கை விடுத்தார்கள், சென்னையில் நடந்த சித்த மருத்துவ வல்லுநர்கள் மாநாட்டில்!

அந்த தாடிக்கார டாக்டர் எழுந்து, "இதோ எய்ட்ஸ் நோய் தீர்க்கும் மருந்து" என்று தாம் கண்டுபிடித்த மருந்தையே அமைச்சரிடம் சமர்ப்பித்தார். மருந்து பற்றிக் கேட்டறிந்த அமைச்சர், 'ஐந்து நோயாளிகளை உங்களிடம் அனுப்பி வைக்கிறோம். குணப்படுத்திக் காட்டுங்கள்!" என்று கேட்டுக் கொண்டார்.

அந்த தாடிக்காரர் யார்? சித்த வைத்திய உலகில் டாக்டர் எம். சௌரிராஜனை தெரியாதவர்கள் இருக்க முடியாது.

"எய்ட்ஸ் மருந்தை அமைச்சரிடம் சமர்ப்பிக்கும் முன்பாக யாரையாவது தனிப்பட்ட முறையில் குணப்படுத்தி வெற்றி கண்டிருக்கிறீர்களா?" நாம் சந்தித்துக் கேட்டோம்.

"செய்யாமலா? நான் வேண்டுமானால் அவர்களின் முகவரி, தொலைபேசி எண்களை இப்போதே தருகிறேன். நீங்களே போய் விசாரித்துப் பாருங்கள்."

"எய்ட்ஸுக்கு உங்கள் சிகிச்சை முறை?"

"சண்டரச பற்பம் என்பது என் மருந்தின் பெயர். விளக்கெண்ணெயில் இந்த மருந்தை அரிசி அளவுக்குக் கலந்து தினம் ஒரு முறை என ஏழு நாட்களுக்கு முதலில் கொடுப்பேன். உப்பு புளி சேர்க்கக் கூடாது. வெறும் பால் சாதம் மட்டுமே. இந்த கோர்ஸ் முடிந்தபின் அடுத்த பதினைந்து நாட்களுக்கு வேறு மருந்து. புளி சேர்க்கக் கூடாது. ஆனால் உப்பு சேர்த்துக் கொள்ளலாம். இது முடிந்ததும் மறுபடியும் ஐந்து நாட்களுக்கு சண்டரச பற்பம். இப்படி மாற்றி மாற்றி சிகிச்சை. பத்து நாட்கள் போனதும் ரத்தப் பரிசோதனை செய்தாலே முன்னேற்றம் தெரியும். ஐம்பது நாட்களில் பூரண குணம் உத்தரவாதம்."

"இவ்வளவு உறுதியாகச் சொல்லும் நீங்கள் இந்த ஃபார்முலாவை அரசுக்குக் கொடுக்கலாமே?"

"ஒருமுறை பட்ட பாடு போதும் சார். உங்களிடம் சொல்வதற்கென்ன? டாம்ப்கால் என்று அரசு அமர்க்களப்படுத்துகிறதே, அது என்னுடைய தயாரிப்பு முறைதான். இப்படி ஒரு எண்ணெய் இருக்கிறது; கூந்தல் வளர்ச்சிக்கு அற்புதமானது என்று நானே தெரிவித்து அதை தமிழக அரசுக்காகச் செய்து கொடுத்தேன். ஆரம்பத்தில் முப்பதாயிரம் லிட்டர் தயாரித்துக் கொடுத்தேன். அந்தச் சமயம் சித்த மருத்துவக் கல்லூரியில் என் மகனுக்கு இடத்துக்கு விண்ணப்பித்தேன். 'இந்த எண்ணெய் தயாரிப்பு சூத்திரத்தைக் கொடுத்தால் தான் உன் மகனுக்கு சீட்' என்று இரண்டையும் தேவையில்லாமல் இணைத்து என்னை அலைக்கழித்தார்கள். அப்போதைய ஐ.ஏ.எஸ். அதிகாரிக்கும் எனக்கும் பெரிய போராட்டமே நடந்தது. நான் பார்முலா தரவில்லை. (இருப்பினும் அரசு வேறொரு ஃபார்முலாவில் தயாரித்துக் கொண்டிருக்கிறது!) கோர்ட்டுக்குப் போய் சீட் வாங்கினேன். அந்தக் கசப்பு அப்படியே நெஞ்சில் இருக்கிறது."

"சரி, அமைச்சர்தான் ஐந்து நோயாளிகளை இப்போது அனுப்புவதாகச் சொல்லியிருக்கிறாரே, எய்ட்ஸைக் குணப்படுத்திக் காட்டினால் நீங்கள் எங்கேயோ போய் விடுவீர்கள்."

"நீங்க வேற. இதில் கூட என்னென்ன சிக்கல் வருமோ. பாருங்கள், இந்த ஐந்து பேருக்குச் சிகிச்சை அளிக்க நான் தினமும் தாம்பரம் வர வேண்டும் என்கிறது அரசு. நான் இருப்பதோ ஷெனாய் நகரில். தினம் தாம்பரம் போய் வருவது எவ்வளவு சிரமம்? அண்ணா நகர் மருத்துவமனைக்கு அவர்களை அனுப்பி வையுங்கள் என்கிறேன் நான். ஃபைல் அங்கு மிங்கும் அலைந்து கொண்டிருக்கிறது."

டாக்டர் சௌரிராஜனின் கோரிக்கையை நிறைவேற்றுவதில் அரசுக்கு என்ன தயக்கம் இருக்க முடியும்? ஒருவேளை ராமர் பிள்ளை விஷயமாக ஏற்பட்ட ஏமாற்றம்தான் காரணமாக இருக்குமோ!

- ஆரெம்




• படம்: ஸ்ரீஹரி

# சாவித்ரி கொடுத்த ஷாக்!

'நாம் இருவரி'ன் அபார வெற்றிக்குப் பிறகு எனக்கு நிறைய படங்கள் வரத் தொடங்கி விட்டன. மாடர்ன் தியேட்டர்ஸ் படத்தில் வேறு நடித்து விட்டபின் வாய்ப்புக்களுக்குக் கேட்க வேண்டுமா? ஓரிரு வருடங்களிலேயே தமிழகம் முழுவதும் தெரிந்த, 'பிரபல' நடிகனாகி விட்டேன்.

பிரபலமான நடிகர்களை, நாடக கம்பெனிகள் அழைத்து, ஸ்பெஷல் நாடகம் போடுகிற வழக்கம் பற்றி முன்பே சொல்லியிருந்தேனல்லவா?

அப்படியொரு வாய்ப்பு 1948-ல் எனக்கு வந்தது.

சிறு வயது முதலே நாடக கம்பெனியில் என்னுடன் நடித்தவரும் பின்னாளில் பிரபல கதாசிரியர் - இயக்குநர் - நடிகராக ஒளிவீசிய வருமான ஏ.பி. நாகராஜன் அப்போது அரியலூரில் நாடக கம்பெனி வைத்து நடத்தி வந்தார். சினிமாவில் புகழ் சேரத் தொடங்கியிருந்த என்னிடம் அவர் தமக்காக ஓரிரு நாடகங்கள் நடத்தித் தர முடியுமா என்று கேட்டார்.

நண்பருக்கு உதவும் வாய்ப்பு கிடைத்ததே என்ற மகிழ்ச்சியில் நான் ஒப்புக்கொண்டு, டி.கே. ராமச்சந்திரன், சாய்ராம் இவர்களையும் கூட்டிக் கொண்டு போய் சுமார் பத்து நாடகங்கள் அவருக்கு நடத்திக் கொடுத்தேன்.

மிக நல்ல வசூலானது ஒருபுறம் இருக்க, ஏ.பி. நாகராஜனுடன் என் நட்பு மேலும் இறுகியது. கலையுலக இரட்டையர் என்று சொல்லும் அளவுக்கு நாங்கள் இணைந்தே காணப்பட்டோம்.




தொழில்ரீதியில் அப்போது நான் சென்னையிலும் அவர் சேலத்திலுமாக இருந்தோம். சேலம் மாடர்ன் தியேட்டர்ஸில் டி.ஆர். சுந்தரத்தின் நிர்வாகியாக இருந்த எம்.ஏ. வேணு, அப்போது மாடர்ன் தியேட்டர்ஸிலிருந்து விலகி, தனியாகப் படங்கள் எடுத்துக்




கொண்டிருந்தார்.

நான் பெற்ற செல்வம், டவுன் பஸ், பணம் பந்தியிலே, செங்கமலத் தீவு, ராமாயணம் என்று தரத்திலும் வசூலிலும் சிறந்த படங்களை அவர் தந்து கொண்டிருந்த சமயம் அது. வேணுவின் படங்களுக்கு ஆஸ்தான இயக்குநராக அப்போது விளங்கியவர் சோமு.

மாடர்ன் தியேட்டர்ஸி லிருந்து வேணு விலகியபின், அவரது கதை இலாகாவின் முதுகெலும்பாக விளங்கியவர் ஏ.பி. நாகராஜன்.

'கண்கள்' என்ற படத்தின் அவுட்டோர் ஷூட்டிங்குக்காக நான் சேலம் சென்றிருந்தபோது, ஏபிஎன் என்னை வந்து சந்தித்தார்.

சிறு வயது நட்பு. நாடக உலகில் மேலும் இறுகி, நான் சினிமாவுக்கு வந்தபின் பூகோள ரீதியில் சற்றே விலகி இருந்ததால், அப்போது மீண்டும் சந்தித்தபோது எழுந்த உணர்வுகளை வடிக்க வார்த்தை இல்லை! ஊர்க் கதை மொத்தமும் பேசித் தீர்த்தோம்.

அன்று மாலை மறுபடி ஏ.பி.என். என் அறைக்கு வந்தார்.

"அண்ணே, நாமெல்லாம் ரொம்ப கஷ்டப்பட்டு, அடிபட்டு •முன்னுக்கு வர முயற்சி பண்ணிட்டிருக்கோம். கடவுள் புண்ணியத்துல இப்ப ஓரளவு நல்ல வருமானம் வரத் தொடங்கி இருக்கு. வர்ற பணத்தைக் கண்டபடி செலவழிக்காம நல்லபடியா முதலீடு செய்ய வேணாமா?" என்று கேட்டார்.

நியாயம்தான். என்ன செய்யலாம் என்று நான் கேட்டேன்.

"நாம் ரெண்டு பேரும் சேர்ந்து ஒரு சினிமா கம்பெனி ஆரம்பிச்சி, சொந்தமா படங்கள் எடுக்கலாமே?"

எனக்கு ஆச்சர்யமாக இருந்தது. காரணம், அப்போதுதான் நானும் பீம்சிங்கும் சேர்ந்து ஒரு படம் எடுக்கலாமா என்பது பற்றி யோசித்துக் கொண்டிருந்தோம். 'ஒரே வழி' என்ற கதையைக் கொடுத்து என்னைப் படித்துப் பார்க்கச் சொல்லியிருந்தார் பீம்சிங்.

தவிர அந்நாளின் மற்றொரு பிரபல இயக்குநர் டி.ஆர். ரகுநாத் வேறு என்னிடம், 'பம்பாய் மெயில்' நாடகத்தைத் திரைப்படமாக எடுக்கலாம்; இருவரும் இணைந்து தயாரிக்கலாம் என்று சொல்லியிருந்தார்.

இந்த இருவருடனும் பேச்சு வார்த்தை நடந்து கொண்டிருந்த நிலையில் இப்போது ஏ.பி.என். வேறு சொந்தப்படம் எடுப்பது பற்றிக் கேட்கவும் எனக்கு அது பற்றித் தீவிரமாக யோசிக்க வேண்டியதாயிற்று.

விஷயத்தை விவரமாக ஏ.பி.என்னிடம் சொல்லிவிட்டு, யோசித்து முடிவெடுப்போம் என்று சென்னைக்கு வந்து விட்டேன்.

ஏபிஎன் சென்னைக்கு வரும்போதெல்லாம் பழைய உட்லண்ட்ஸ் ஓட்டலில்தான் அப்போது தங்குவார். திருவல்லிக்கேணியில் குடியிருந்த நான் அங்கு போய் அவரைச் சந்திப்பேன். பேச்சு முழுவதும் படநிறுவனம் தொடங்குவது பற்றியே இருக்கும்.

பேசிப் பேசி, அதிலுள்ள லாப நஷ்டங்களைத் தீர அலசினோம். சினிமாதான் வாழ்க்கை என்றானபின், நம் முயற்சிகள் எதுவானாலும் அது சினிமா சார்ந்தே இருக்க வேண்டும் என்று உறுதியாகத் தீர்மானம் ஆனபின், துணிந்து சொந்தமாகப் படம் எடுப்பது என்று முடிவு செய்தேன்.

ஸ்ரீலட்சுமி பிக்சர்ஸ் என்று பெயரிடுவது என்று முடிவு செய்தபின் திடீரென்று ஏபிஎன்,



**"அண்ணே, இது உங்க சொந்த நிறுவனமா இருக்கட்டும். பங்குதாரரா ஆகற அளவுக்கு என்கிட்டே பணம் இல்லை. ஆனா நாம சேர்ந்து உழைப்போம்" என்றார் ஏ.பி.என்.**

"அண்ணே, இது உங்க சொந்த நிறுவனமா இருக்கட்டும். பங்குதாரரா ஆகற அளவுக்கு என்கிட்டே பணம் இல்லை. ஆனா நாம சேர்ந்து உழைப்போம்" என்றார்.

நான் ஒப்புக் கொள்ளவில்லை. நண்பர்களுக்கு மத்தியில் பணம் ஒரு பொருட்டே அல்ல. "என் பணம், உன் பணம் என்று ஏன் பிரிக்கிறாய்? கம்பெனியை நாம் சேர்ந்தே ஆரம்பிப்போம். உன்னிடம் பணம் இல்லாவிட்டால் பரவாயில்லை" என்று சொல்லிவிட்டு, விரைவாகக் காரியங்களைத் தொடங்கினோம்.

சிவாஜி கணேசனையும் பானுமதியையும் அணுகி நடிக்கச் சம்மதம் பெற்று கால்ஷீட் வாங்கி விட்டோம்.

அதன் பிறகுதான் கதையையே யோசிக்க ஆரம்பித்தோம்.

'கதை' விஷயத்தில் ஏபிஎன் தன்னிகரில்லாதவர். அழுத்தமும் ஆழமும் உருக்கமுமான கதைகளைப் படைப்பதில் அந்நாளில் அவருக்கு நிகர் அவர்தான்!

ஆனால் சொந்த நிறுவனம் தொடங்கிப் படம் எடுப்பது என்றானபோது, எங்களுக்குக் கதை கிடைக்கத் தாமதமாகிக் கொண்டே போனது.

சிவாஜியே என்னிடம் பலமுறை கேட்டு விட்டார், "என்னப்பா, இன்னும் படம் ஆரம்பிக்கலையா?" என்று.

ஏதாவது சொல்லி சமாளிப்பேன்.

ஒருவழியாக ஸ்கிரிப்ட் ரெடியாகி, 'மக்களைப் பெற்ற மகராசி' என்று தலைப்பும் வைத்து, படம் தொடங்கினோம். முதல் படம். எக்காரணம் கொண்டும் தோல்வியடையக் கூடாது என்பதில் மிக கவனமாக இருந்தேன். சிவாஜி, பானுமதி, நம்பியார் என்று ஸ்டார் வேல்யூ உள்ள நடிகர்கள். தலைசிறந்த டெக்னீஷியன்கள். அருமையான இசை; பாடல்கள்.




தொடங்குவதில் நான் தாமதமாயிற்றே தவிர படம் தயாராகி வெளியானதும் மகத்தான வெற்றி கண்டது. 'மணப்பாறை மாடு கட்டி' பாடல் அன்று தமிழகத்தில் ஒலிக்காத மூலையே இல்லை என்கிற அளவுக்கு சூப்பர் ஹிட் ஆனது.

ஒரு தயாரிப்பாளனாக என் முதல் முயற்சியே பெரும் வெற்றி கண்டதால், எனக்கு ஏற்பட்ட திருப்தியும் மகிழ்ச்சியும் கொஞ்ச நஞ்சமானதாக இல்லை.

ஆனால், ஏ.பி. நாகராஜனுக்கு அந்த மகிழ்ச்சியைப் பூரணமாக அனுபவிக்க முடியாத அளவுக்கு ஒரு பிரச்னை இருந்தது.

சேலத்தில் எம்.ஏ. வேணுவின் நிறுவனத்தில் அவர் கதை இலாகாவில் இருந்தார் என்று சொன்னேனல்லவா? அதிலிருந்து அவரால் முழுவதும் விடுபட முடியாத சூழ்நிலை. ஆனால் சேலத்தில் இருப்பதை விட, நிரந்தரமாக சென்னைக்கு வந்து விட்டால் தொழிலில் பிரகாசமான எதிர்காலம் இருக்கும் என்று அவர் நம்பினார். ஆனால் வேணுவிடம் இதை எடுத்துச் சொல்லத் தயக்கம். காரணம் - முதல் முதலில் ஏபிஎன்னுக்கு சினிமாவில் ஓர் இடம் கொடுத்து, அங்கீகாரம் வழங்கியவர் அவர்தான்.

ஆகவே ஏ.பி.என். ஓர் உபாயம் செய்தார். வேணுவுக்கு நான் எழுதுவது போல அவரே ஒரு கடிதம் எழுதிக் கொண்டு வந்தார். 'சென்னையில் தொடர்ந்து பல வாய்ப்புகள் இருப்பதாகவும் புதிய முயற்சிகள் பல செய்து பார்க்க விரும்புவதாகவும் - அதனால் சென்னையிலே அவர் தொடர்ந்து வசிப்பதுதான் அவரது முன்னேற்றத்துக்கு நல்லது என்றும் ஆனாலும் அவ்வப்போது சேலம் வந்து எம்.ஏ.வி. பிக்சருக்கு வேலை பார்த்துத் தருவதாகவும் அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

"நானே இதைச் சொல்வதைக் காட்டிலும் நீங்கள் எழுதுவது போல இருந்தால் நன்றாக இருக்கும்!" என்றார் ஏ.பி. நாகராஜன்.

முதலில் தயக்கமாக இருந்தாலும் 'நண்பருக்காகச் செய்கிறோம்' என்று நினைத்துக் கொண்டு நான் அதற்கு உடன்பட்டேன். ஏ.பி.என். எழுதிய கடிதத்தை, நான் எழுதியது போலக் கையெழுத்திட்டு, திரு. வேணுவுக்கு



கலையுலக இரட்டையர்!

அனுப்பி வைத்தேன்.

பிறகு உற்சாகமாக அடுத்தப் படத்தை ஆரம்பித்தோம். 'வடிவுக்கு வளைகாப்பு' என்பது டைட்டில்.

இந்த நேரத்தில்தான் மாடர்ன் தியேட்டர்ஸ் அதிபர் டி.ஆர். சுந்தரம் என்னைத் தேடி வந்தார்.

திரு. சுந்தரம் அவர்களின் பொதுநல நோக்கு எத்தகையது என்பதை எனக்கு உணர்த்திய சம்பவம் அது!

ஓர் இயக்குநராக, தயாரிப்பாளராக, ஸ்டூடியோ அதிபராகக் கொடிகட்டிப் பறந்த சுந்தரம், தயாரிப்பாளர்களின் நலனுக்காக, அவர்களின் பாதுகாப்புக்காக ஏதாவது செய்ய வேண்டும் என்பது பற்றித் தீவிரமாக யோசித்துக் கொண்டிருந்த தருணம் அது.

சென்னையில் தயாரிப்பாளர்கள் சங்கம் நிறுவி செயல்பட ஓரிடம் வாங்க வேண்டும் என்கிற எண்ணத்தில் இன்று பிலிம் சேம்பர் இயங்கி வருகிறதே, (டி.ஆர்.எஸ். அவின்யூ) அந்த இடத்தைப் பார்த்து, விலைபேசி விட்டு நிதி திரட்ட ஆரம்பித்தார். ஒவ்வொரு தயாரிப்பாளராகத் தாமே நேரில் சென்று பார்த்து வசூலித்து வந்தவர், அப்போதுதான் தயாரிப்பாளராகியிருந்த என்னிடமும் வந்தார்.

அத்தனை பெரிய மனிதர் என்னைத் தேடி வந்திருக்கிறாரே என்கிற பெருமிதமும், பரவசமும் உந்த, அவர் கேட்பதற்கு முன்பே ரூபாய் இரண்டாயிரத்தை எடுத்து நீட்டினேன்.

டி.ஆர்.எஸ். என்னை உற்றுப் பார்த்தார். "தம்பி, எனக்காக, நான் வந்திருக்கேன் என்பதற்காக இத்தனை பெரிய தொகையைத் தராதே! உன் சௌகர்யப்படி என்ன முடியுமோ, அதைக் கொடுத்தால் போதும்!" என்றார் மிருதுவான குரலில்.

செட்டில் நான் பார்த்த டி.ஆர். எஸ்ஸுக்கும் இங்கு பார்க்கிற டி.ஆர்.எஸ்ஸுக்கும் எத்தனை வித்தியாசம்! நான் அதிசயித்தேன். இவர் இத்தனை மிருதுவானவரா?

"ஐயா, நீங்க செஞ்சிட்டிருக்கிற காரியம், தயாரிப்பாளர்கள் நலனுக்காக! தனிப்பட்ட முறையில நமக்கு என்ன கஷ்டம் உண்டானாலும் ஒரு ஸ்தாபனம் உருவாகறது முக்கியம். நான் சந்தோஷமா குடுக்கறேன். தயவுசெஞ்சு மறுக்காம வாங்கிக்கங்க!" என்றேன்.

சுந்தரம் பிறகு வெகுநேரம் என்னுடன் பேசிக் கொண்டிருந்தார்.

"அது என்ன மக்களைப் பெற்ற மகராசின்னு இத்தனை பெரிய டைட்டில்?" என்று கேட்டார்.

"விஷயம் ஜனங்களுக்கு சுலபமா புரியணுமில்லீங்களா?" என்றேன்.

"அது சரிதான் மேன்!" என்றவர் போகிற போது, "ராமசாமி, யு ஆர் எ வெரி நைஸ் பாய்!" என்று தட்டிக் கொடுத்து விட்டுப் போனது இன்னும் என் கண்ணில் நிற்கிறது!

இதற்கிடையில் 'வடிவுக்கு வளைகாப்பு' ஷூட்டிங் ஆரம்பமாகி விட்டிருந்தது.

சிவாஜியும் சாவித்ரியும் நடிக்க, மளமளவென்று வேலை தொடங்கி, படம் வளர்ந்து கொண்டிருக்க, திடீரென்று எதிர்பாராத ஒரு பிரச்னை வந்தது.

ஒரு வாரத்திலோ, ஒரு மாதத்திலோ தீரக்கூடிய பிரச்னை அல்ல அது. குறைந்தது ஒரு வருடம் படப்பிடிப்பையே நிறுத்தி வைக்க வேண்டிய நிலை...

ஹீரோயின் சாவித்ரி அப்போது கர்ப்பமாகியிருந்தார்!

எத்தனை பணம்! எத்தனை நடிகர்களின் நேரம், உழைப்பு! எத்தனை பணிகள்! எல்லாம் அப்படி அப்படியே நின்று போக, இழப்பைத் தாங்க முடியுமா என்று நான் பரிதவித்துக் கொண்டிருந்தேன்.

யாரைக் குறைசொல்ல முடியும்? கடவுள் மேல் பாரத்தைப் போட்டு விட்டுச் சும்மா இருந்து விடுவது என்ற முடிவுக்கு வந்தபோது சிவாஜி என்னைக் கூப்பிட்டு அனுப்பினார்.

போனேன்.

"ராமசாமி, உனக்கு ஒண்ணும் ஆட்சேபணை இல்லாட்டா நான் ஒரு யோசனை சொல்றேன்" என்றவர், "பேசாமல் எடுத்த வரைக்கும் வெட்டித் தூக்கிப் போட்டுடுவோம். சாவித்ரிக்கு பதிலா சரோஜா தேவியைப் போட்டு படத்தை முடிச்சுடலாம்!" என்றார் தீர்மானமாக.

நான் அதிர்ந்தேன்!

(தொடரும்)

## சால்வை

"ஆனாலும் அந்த அரசியல்வாதி ரொம்ப மோசம்..."

"ஏன் அப்படிச் சொல்றீங்க?"

"தலைவருக்கு சால்வை போட்டு நம்ம கட்சியில சேர்ந்தார்; இப்ப கட்சியை விட்டு விலகும்போது, அந்த சால்வையைத் திரும்பக் கேட்கிறார்!"

- சீர்காழி வி. ரேவதி



## பதி பக்தி

'சரத்பவாருக்கு எதிராக நான் திரட்டி யிருக்கும் தகவல்களை, சமயம் வரும்போது வெளியிடுவேன்' என்று தாக்கரே ஸீனியர் மிரட்டினாலும் மிரட்டினார், சகன் புஜ்பல், தாக்கரே குடும்பத்தையே தாக்கும் வேலையில் இறங்கி விட்டார்! 'லேடீஸ் ஃபர்ஸ்ட்' என்ற ரீதியில் அவர் ஸ்மிதா தாக்கரே (மகன் ஜயதேவ் தாக்கரேயின் மனைவி)யிலிருந்து துவங்கியுள்ளார்! தாதர் சௌபாத்தி பகுதியில் அவர் வாங்கியிருக்கும் 1800 சதுர அடி ஃப்ளாட்டுக்கான 3.10 கோடி ரூபாய் எங்கேயிருந்து இவருக்கு வந்தது என்பதை நிதியமைச்சர் ப. சிதம்பரம் அவர்களே விசாரித்து, பொதுமக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டு மென்றிருக்கிறார் புஜ்பல்! 'தலைப்புச் செய்திகளில் இடம் பெற வேண்டுமென்றால் தாக்கரே குடும்பத்தைத் தாக்க வேண்டும்' என்ற ஃபார்முலாவை புஜ்பல் கடைப்பிடிக்கிறார்' என அலட்சியமாக மறுதளித்து விட்டார் ஸ்மிதா! இவர் கணவர் ஜெயதேவ், ரலூர் ஹில்ஸ் என்ற இடத்தில் ஆதிவாசி களுக்குத் தொண்டாற்றி வரும் ஸிவானந்த மகராஜ் என்ற பைராகியை விரட்டி விட்டு, அந்த இடத்தை 'அபேஸ்' பண்ணிப் பார்த்து சர்ச்சையில் மாட்டிக் கொண்டவர்...! கணவரின் அடிச் சுவட்டைப் பின்பற்றும் ஸ்மிதாவின் பதிபக்தி பளிச்சிடு கிறதல்லவா?

## உரிமையா? கொடுமையா?

நடக்க இருக்கும் 'பட்ஜெட்' ஸெஷனில் "Right to Information Act' என்ற மசோதாவை அறிமுகப்படுத்த இருக்கிறார்கள். இது 'பாஸாகி' விட்டால் இந்தியாவிலேயே மஹாராஷ்ட்ராவில்தான் இந்தச் சட்டம் முதன் முதலாக அமலுக்கு வரும். அரசின் நடவடிக்கைகள் அனைத்தும் பொதுமக்களுக்கு வெட்ட வெளிச்ச மாக்கப்படும். அரசின் மீது மக்களுக்கு ஓர் அதிகாரம் இருப்பதுடன், ஊழல்கள் பெருமளவில் குறையவும் இது வழி வகுக்கு மென எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் "முன்னாள் காங்கிரஸ் ஆட்சியின் வண்டவாளங்கள் எல்லாம் அம்பல மாகி விடும்" என பி.ஜே.பி. எம்.எல்.ஏ. 'லோதா' ஆவலுடன் எதிர்பார்க்கிறார். இந்தச் சட்டம் எல்லா அரசுகளுக்கும் பொது என்பதை அவர் நினைத்துப் பார்த்ததாகத் தெரியவில்லை!

# ஆன்மீகம்



• சரத்பவார்



• பால்தாக்கரே

மார்க் வெறி
பெ பத்ரோ

• தலாய்லாமா





• ஓம் புரி

ரும் பள்ளிகளும் கோச்சிங் கிளாசுகளும் சேர்ந்து ஒரு மும்முனைத் தாக்குதலை நடத்த, எஸ்எஸ்சி. தேர்வுகள் என்பது பல குழந்தைகளுக்கு ஒரு பெரிய கண்டமாகி விட்டது! தற்கொலை முயற்சிகள் அதிகரிப்பதால், இறுக்கமான மனநிலையில் இருக்கும் குழந்தைகளுடன் இதமாகப் பேசி அறிவுரை அளிக்கவென்றே தனி 'ஹாட்லைன்'களெல்லாம் வந்திருக்கின்றன!

## அன்பின் விலை!

கம்ப்யூட்டர் குருவிற்குப் பிறகு இப்போது 'ஸ்பிரிச்சுவல் குரு' – தில்லியில் பிறந்து, பாஸ்டனில் வளர்ந்து, வேதம், வேதாந்தம், யோகா, அன்பு போன்றவற்றைக் கலந்து, நவயுக குருவாக உருவாகியிருக்கும் தீபக் சோப்ரா, கோவாவுக்குச் செல்லும் வழியில் மும்பையிலும் தலைகாட்டினார். 'அன்பின் வழி' என்ற

# - ஒரு டோஸ் ரூ. 85,000!

அவரது புத்தகத்தை விளக்குமுகமாக, 'அன்பால் மரணத்தின் பிடியிலுள்ள நோயாளியையும் மீட்க முடியுமென்றும் மன-மெய் தொடர்பு மிகவும் சக்திவாய்ந்ததென்றும் விளக்கினார். தாம் நடத்த இருக்கும் 'வொர்க் ஷாப்புக்கு' 'Seduction of Spirit' எனக் கவர்ச்சிகரமாகப் பெயரிட்டிருக்கிறார். முந்நூறு நபர்கள் அதில் கலந்து கொள்ள ஏற்கெனவே பெயர் கொடுத்திருக்கிறார்கள் – எல்லாம் அமெரிக்கா, ஐரோப்பா, ஆஸ்திரேலியா, சிங்கப்பூர் முதலிய நாடுகளிலிருந்துதான்... இந்தியர்கள் ஏதோ பெயருக்கு கொஞ்சம்! காரணம், இந்த ஒரு வார ஆன்மீகப் பட்டறையில் பங்கேற்க கட்டணம் ரூ 85,000!

## அழகும் வரியும்

மும்பையை அழகுபடுத்தும் முயற்சியில், சுவரொட்டிகளை எல்லாம் முனிசிபாலிடிக்காரர்கள் கிழித்தெறிய, அதிகமான பாதிப்புக்காளானவர்கள் சினிமா ஸ்டார்கள்தாம்! அவர்கள் முகத்தைத்தானே இவர்கள் பெருமளவில் கிழித்தார்கள்! பதிலடியாக ஓம்பூரி, தீப்தி நாவல் போன்ற நட்சத்திரங்கள் ஒரு போராட்டத்தை நடத்தினர். அவர்கள் வசிக்கும் 'வர்ஸோவா' பகுதியிலுள்ள அழகிய கடற்கரை, குடிசைக் குடியிருப்புகளால் அலங்கோலமாகி வருவதை எதிர்த்து ஊர்வலம் நடத்தினர். இந்த 'ஓட்டு வங்கி'களை சம்பந்தப் பட்ட கார்ப்பொரேட்டர்கள் அப்புறப் படுத்தாவிட்டால், முனிசிபல் வரிகள் எதுவும் கட்டமாட்டோமென கொடிபிடித்தனர். அழகுக்கும் வரிக்கும் என்ன சம்பந்தம் என மும்பை முனிசிபல் கார்ப்பரேஷன்காரர்கள் விழிக்கிறார்கள்.

## டீ இன் ஒன்

தத்ரூபமான மெழுகு பொம்மைகள் கொண்ட 'மேடம் டுஸாட்ஸ்' மியூசியத்தைப் பார்க்க எல்லோராலும் லண்டனுக்குப் போக முடியுமா? தலாய்லாமாவின் அருகாமையை உணர திபெத்தை நோக்கிப் படையெடுக்கத்தான் முடியுமா? மிட்டே செய்தித்தாளும், பிரிட்டிஷ் டூரிஸ்டு அதாரிட்டியும் இணைந்து, இந்த இரண்டு கனவுகளையும் நனவாக்கியிருக்கிறார்கள் லண்டனிலிருந்து மும்பைக்கு கண்காட்சிக்கென எடுத்து வரப்பட்ட தலாய்லாமாவின் முழு உருவப் படிமத்துடன், யார் வேண்டுமானாலும் இணைந்து நின்று புகைப்படமெடுத்துக் கொள்ளலாம்! வசூலிக்கப்படும் கட்டணம், தலாய் லாமா உருவாக்க இருக்கும் அறக்கட்டளையைச் சென்று சேரும்!

— ஜெயஸ்ரீ ராஜ்

விந்தை! கையில் தாயத்தைக் கட்டிக் கொண்டால் பண மழை கொட்டுமாமே... விளம்பரம் கொடுத்தவர்களின் வாயைக் கொஞ்சம் கிண்டிப் பார்ப்போமே-

தேதியூர் வி. மகாதேவன் கோபப்படாமல் பதிலளித்தார்.

"விளம்பரம் பார்த்தேன். தாயத்தை வாங்கிக் கட்டிக் கொண்டால் அது எப்படி பணம் வரும்? மாஜிக்கா? பல இடங்களில் மக்கள் பல வழிகளில் ஏற்கெனவே ஏமாந்து கொண்டிருக்கிறார்கள். உங்கள் விளம்பரம் மீதும் சந்தேகம் வருகிறதே..."

"பொறுமையாகக் கேளுங்கள். மாஜிக் அல்ல இது. அகல்டிஸம் (occultism) என்பது ஒரு பெரிய கலை. என் தந்தை வழி பாரம்பரியமாக நான் கற்றுக் கொண்டது. சாதாரணமாகப் புரியாது. அசாத்திய பொறுமையும், ஒருமுக சிந்தனையும் (கான்ஸன்ட்ரேஷன்) அவசியம். என்னிடம் பிரச்னையோடு வரும் நண்பர்களிடம் நெடு நேரம் மனம் விட்டுப் பேசி, பிரச்னையின் தன்மை, அதன் அகலம், ஆழம் அனைத்தையும் அலசி அவர்களின் ஜாதகத்தை ஆராய்ந்து அதன் அடிப்படையில் மந்திரங்களை ஒரு எந்திரத்தில் பொறித்து, தாயத்து செய்து தருகிறேன். இந்த சக்தியை அனுபவித்தால்தான் புரிந்து கொள்ள முடியும். இது ஏனோதானோ வேலையல்ல. போலி நிதி நிறுவனங்கள் போல ஏமாற்று வேலையும் அல்ல. தெய்வீகக் கலை. நூறு சதவீத நம்பிக்கையுடன் வந்தால்தான் மகிமையை உணர முடியும்."

"இருக்கட்டும். நீலக்கல், மரகதம், பச்சை என்று பல்வேறு கற்கள் பதித்த மோதிரங்களை அணிந்து கொண்டால்கூட நல்லது என்று பலர் சொல்கிறார்கள். அதன்படி அணிந்தும் கொள்கிறார்கள். உதாரணத்துக்கு 200 ரூபாய் கொடுத்து ஒரு மோதிரம் வாங்கினால் அந்த மதிப்புக்கு நம்கையில் ஏதோ போட்டிருக்கிறோம் என்ற திருப்தியாவது அட்லீஸ்ட் கிடைக்கிறது. நீங்கள் ஒரு தாயத்து ஆயிரம் ரூபாய் என்கிறீர்கள். அவ்வளவு பெறுமா?"

"நான் ஏற்கெனவே சொன்னேன். ஜாதகம் பார்த்து, பிரச்னையின் ஆழம் பார்த்து மிகக் கவனமாக எந்திரம் எழுதித் தயாரிக்கிறோம். இப்போது மார்க்கெட்டில் ரெடிமேட் எந்திரங்கள் ஏராளமாக இருக்கின்றன. இவை 'எம்பாஸ்' செய்யப்பட்டவை. (ஒன்றை எடுத்துக் காட்டுகிறார்) லேசாக தடவிப் பாருங்கள். எழுத்துக்களின் மேடு

# தாயத்தின் மகிமை தாயத்தில் மட்டுமல்ல!



• மகாதேவன்

தட்டுப்படும். நான் செய்வது எம்பாஸ் அல்ல. என்கிரேவிஸ். ஒவ்வொரு எழுத்தையும் கீறி வடிக்க வேண்டும். பள்ளம் தெரியும். இதற்கென தேர்ந்த கலைஞர்கள் உண்டு. அவர்கள் தான் எழுத வேண்டும். வாரக் கணக்கில் ஆகும். அதுமட்டுமல்ல. எந்திரத்தை பூஜை, பாராயணம், ஹோமம் என்று பல கட்டங்களுக்குப் பின்தான் கஸ்டமர்களுக்குத் தருகிறோம். தாயத்தைப் பயன்படுத்துகையில் கிடைக்கும் பலனை வைத்துப் பார்க்கையில் நாங்கள் வாங்கும் கட்டணம் ரொம்பச் சொற்பமே."

"கோபித்துக் கொள்ளாதீர்கள். ஒரு உதாரணம். ஒரு ஆட்டோ டிரைவர் இருக்கிறார். நேர்மையான உழைப்பாளி. தினம் அவர் வருமானம் 200 ரூபாய். உங்கள் விளம்பரம் பார்த்து வந்து உங்களிடம் தாயத்து வாங்கி கட்டிக் கொள்கிறார் என்று வைத்துக் கொள்வோம். அதே ஆட்டோதான். அதே உழைப்புதான். பின் எப்படி பணமழை கொட்டும்? தினசரி வருமானம் இருநூறிலிருந்து இரண்டாயிரத்துக்கு ஜம்ப் ஆகிவிடுமா என்ன?"

"தாயத்து கட்டிக் கொண்ட பின்பு அவரது டைம் நல்லபடியாக மாறலாம். இவரது உழைப்புக்கு எதிர்பாராத இடத்திலிருந்து சன்மானம் மூலமாகவோ மற்ற எப்படியோ அங்கீகாரம் கிடைக்கலாம். இப்படித்தான் நடக்கும் என்று என்னால் சொல்ல முடியாது. ஆனால் நிச்சயம் வளம் பெருகும் என்பதற்கு நான் உத்தரவாதம். நான்தான் சொன்னேனே, அடிப்படையில் நம்பிக்கை வேண்டும். தெய்வ பக்தி வேண்டும். ஒரு நாளைக்கு குறைந்தபட்சம் மூன்று பேராவது என்னிடம் தங்கள் பிரச்னைகளோடு வருகிறார்கள். நம்பிக்கையோடு வருகிறார்கள். நான் சின்னியராக உதவுகிறேன். அந்த நம்பிக்கை புத்துணர்ச்சியூட்டும். உழைப்பார்வம் பெருகும். புதிய சிந்தனைகள் உருவாகும். அவர்கள் பலன் பெறுகிறார்கள். அவர்கள் இன்னொருவருக்குச் சொல்ல, இப்படி இதன் மகிமை பரவுகிறது. பலன் கிடைக்கவில்லை என்றால் என்னிடம் வரமாட்டார்கள் இல்லையா?"

சந்திப்பு : **ராணிமைந்தன்**

## அன்புள்ள வாசகர்களே,

உங்களில் பலரும் 'கல்கி பத்திரிகையின் விலையை ஏன் இன்னும் உயர்த்தவில்லை? எப்படி கட்டி வருகிறது?' என்று கவலையோடு கேட்டு கடிதங்கள் எழுதியதுண்டு.

உங்களுக்கு சிரமம் தர வேண்டாம் என்பதற்காகத்தான் கடந்த ஆறு ஆண்டுகளாக விலையை உயர்த்தாமலே இருந்து வந்தோம்.

கடந்த ஒன்பது மாதங்களாகப் பக்கங்களை 64லிருந்து 80 ஆக உயர்த்திய போதிலும் விலையை உயர்த்தாமலே இருந்து வந்தோம்.

ஆனால் இப்போது இனியும் இந்த நஷ்டத்தைத் தாங்க முடியாது என்ற நிலை தோன்றியிருக்கிறது. கல்கி பத்திரிகையின் விலையை அடுத்த வாரம் 13.4.97 சித்திரைச் சிறப்பிதழிலிருந்து ரூ.4/- ஆக உயர்த்த வேண்டிய நிர்பந்தத்துக்கு உள்ளாகியிருக்கிறோம்.

கல்கி பத்திரிகையின் 80 பக்கம் என்பது விகடன் அல்லது குமுதம் சைஸில் 112 பக்கங்களுக்குச் சமம் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

பத்திரிகையின் உற்பத்திச் செலவு பல்வேறு விதங்களிலும் கணிசமாக உயர்ந்திருப்பதால் விலையை உயர்த்த வேண்டிய கட்டாயம். நாட்டு நடப்பு நன்கறிந்த கல்கி வாசகர்களுக்கு இது புரியாமல் போகாது.

முன்னெப்போதையும் விட அதிகமான அளவில் உங்கள் பேராதரவை அளித்து ஒத்துழைக்குமாறு வேண்டுகிறோம்.

ஒவ்வொரு இதழின் ஒவ்வொரு பக்கத்தையும் நீங்கள் விரும்பி வரவேற்கும் விதத்தில் அமைக்க முழு மூச்சுடன் செயல்படுகிறோம்.

புத்தாண்டு வாழ்த்துக்கள்.

கல்கி நிர்வாகம்.


பத்மவாசன்

47

# குறையொன்றுமில்லை

திருமலையிலே நடந்த அந்தத் திருக்கல்யாணத்துக்கு தேவதைகளெல்லாம் வந்து நின்றிருக்கிறார்கள். மகான்கள் குழுமியிருக்கிறார்கள். அதியாச்சர்யமாக திருக்கல்யாணம் நடக்கிறது.

தேவர்களையெல்லாம் கீழே இறங்கி வர வைத்தவன்தான் நம்மையும் அந்த வடவேங்கட மலைமேல் ஏறி வர வைக்கிறான். சாமானியர்களான நம்மை எப்படி தேவர்களுக்குச் சமமாய் உயர்த்தி விடுகிறான் பாருங்கள்! எல்லோருக்கும் ஒரே சமமாக அனுக்கிரஹம் பண்ணுகிறான். அந்தத் திருவேங்கட மகிமை என்ன சாதாரணமானதா?

ஆசார்யர்கள் மூன்று விஷயங்களை மிகவும் உயர்த்திச் சொல்லுவார்கள் :

திருவேங்கட யாத்திரை

வைகுண்டம் செல்லும் மார்க்கம்

அந்த மார்க்கத்தை நினைத்துப் பார்த்தல் இந்த மூன்றும் சமமான அனுபவங்கள் என்பார்கள்.

'குறையொன்றுமில்லாத கோவிந்தா' என்று கோதை அவனைப் பாடினாள். திருமலைக்குப் போகிற அனுபவம் அந்த கோவிந்த நாமத்திலேயே இருக்கிறதாம்! எவ்வளவு எளிமையாக்கித் தருகிறான்! கொஞ்சம் அவன் திருநாமத்தைச் சொன்னாலும் உத்தமமான பலனை அவனது தயையினாலே அள்ளித் தருகிறான்!

ஸ்வாமி தேசிகன் சொல்கிறார். 'வீணையான என்னை மீட்டி தயா சதகத்தைப் பேச வைத்தான் வேங்கடவன்' என்று. அதே வேங்கடவன்தான் இப்போது ஸ்ரீநிவாஸ கல்யாணத்தை நான் விவரிக்கும்படி செய்திருக்கிறான். அவன் சொல்ல வைக்க, நான் சொல்கிறேன்.

சஹஸ்ரநாமத்திலே ஸ்ரீநிவாஸ கல்யாணமா..? என்று கேட்பீர்கள். அந்த பெருமாளே தினமும் சஹஸ்ரநாம அர்ச்சனையைக் கேட்பவன்தானே!

விச்வம் என்கிற ஒரு நாமத்துக்குப் பத்து அவதாரங்களைப் பொருளாகச் சொன்னேன். 'கோவிந்தா' என்ற நாமமும் அதே பத்து அவதாரங்களைக் குறிக்கிறது. கோவிந்த சப்தத்தை ஆராய்ந்தால் பத்து அவதாரங்களும் இருக்கிறது.

கோ என்றால் பர்வதம் - பர்வதத்தைத் தூக்கிய கூர்மாவதாரத்தை நினைவுபடுத்துகிறது.

கோ என்றால் பூமி - பூமியை உத்தாரணம் செய்த வராக அவதாரத்தைக் குறிக்கிறது.

சமஸ்த தேவதைகளும் நரசிம்ஹனை 'கோவிந்தா' என்று ஸ்தோத்திரம் செய்தார்கள். அதனால் நரசிம்ஹனுக்கும் கோவிந்தன் என்று பெயர்.

பூமியில் மூன்றடி மண் கேட்டான் அல்லவா? அதனால் வாமனனையும் கோவிந்த சப்தம் குறிக்கும். பூமி முழுதும் சஞ்சாரம் பண்ணிய பரசுராமனும் கோவிந்தனே.

'கோ' என்றால் ஆயுதம் என்றொரு பொருள். விச்வாமித்ரர் ஐந்நூறு விதமான அஸ்திர சாஸ்திரங்களை ராமனுக்கு அர்ப்பணம் செய்தார். அவரிடமிருந்து அஸ்திரங்களைப் பெற்ற ராமனுக்கு கோவிந்தன் என்றும் பெயர்.

சமுத்திர ஜலத்தை சரித்து பூமியைக் கலப்பையால் இழுத்தவனானதாலே அந்த பலராமனுக்கு கோவிந்தன் என்றொரு பெயர்.

கோ - பசு. பசுவை ரக்ஷித்த கிருஷ்ணனுக்கு கோவிந்த நாமம் பொருந்தும்.

இப்படி பத்து அவதாரங்களுக்கும் பொரு

முக்கூர் லக்ஷ்மிநரசிம்மாச்சார்யார்



# அருள்வாக்கு

ஜீவர்கள் என்று நாம் இருக்கிறோம். நாம் வாழ்க்கை நடத்துகிற ஜகத் என்று ஒன்று இருக்கிறது. இந்த இரண்டையும் உண்டாக்கி, நடத்திக் கொண்டிருக்கிற ஈச்வரன் என்று ஒருத்தன் இருக்கிறான். 'ஜீவ-ஜகத்-ஈச்வரன் என்கிற இந்த மூன்றும் என்ன? இந்த ஜகத் வியாபாரத்தில் ஜீவன் இன்பத்துக்கும் துன்பத்துக்குமிடையே ஊசலாடிக் கொண்டிருப்பது போல் இல்லாமல், இவன் சாச்வதமான இன்பத்திலேயே இருக்க வேண்டுமானால் அதற்கு என்ன செய்ய வேண்டும்?' என்று ஆராய்ந்து, அநுபவ ரீதியில் பதில் சொல்வதுதான் உபநிஷத்துக்கள் எல்லாவற்றுக்கும் பொதுவான லக்ஷியம். இவை முடிவாகச் சொல்வது என்ன?

பிரம்மம் என்கிற ஒரு பரம்பொருள்தான் ஜீவன், ஜகத் இரண்டுக்கும் காரணம். அந்தக் காரணமும் அதன் விளைவான ஜீவ-ஜகத்துக்களும் வேறு வேறு இல்லை. ஏனென்றால் பிரம்மத்துக்கு வேறாக எதுவுமே இருக்க முடியாது. இப்போது ஜகத்தையே நிஜம் என்று நினைக்கிற ஜீவாத்மா, அதை ஒதுக்கிவிட்டு, தன்னையே யார் என்று விசாரம் பண்ணிப் பார்த்துக் கொண்டால், 'உடம்பு நானில்லை, இந்திரியங்கள் நானில்லை, மனஸ் நானில்லை, புத்தி நானில்லை, பிராணன் நானில்லை' என்று ஒவ்வொன்றும் கழன்று போய், கடைசியில் தான் பிரம்மமே என்று அறிந்து கொள்வான். 'பரமாத்மா என்று ஒன்று ஜீவாத்மாவைப் படைத்தது என்று சொல்வது கூட ஒரு மாயைதான். ஜகத்திதெல்லாம் அந்த மாயையின் விளையாட்டுதான். வாஸ்தவத்தில் பரமாத்மா ஜீவாத்மா என்ற பேதமில்லாமல் ஆத்மா என்ற ஒன்றுதான் இருக்கிறது. 'அந்த ஒன்றே ஸத்தியம்' என்று தெரிந்து கொள்கிறான். அப்படி ஸத்தியத்தோடு இரண்டற (அ-த்வைதமாக) இருக்கிறபோதுதான் சுக-துக்க ஊசலாட்டம் போய் ஒரே சாச்வத இன்பமாக, சாந்தியாக ஆகிறது. அதுதான் மோக்ஷம்.

**— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திர சேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்.**

...யாண உத்ஸவம் — தாரை வார்க்கப்படுகிற நேரத்தில் பத்மாவதி ஸ்ரீநிவாஸனைப் பாராமல் வெட்கத்துடன் தலைகுனிந்து இருக்கிறாளாம்.

'இந்தப் பெண் இவ்வளவு விநயமாக இருக்கிறாளே!' என்று வந்தவர்களெல்லாம் வியப்பு அடைகிறார்கள். ஒரு பெண்ணுக்கு அழகு விநயம்தானே என்று கொண்டாடுகிறார்கள்.

ஆனால் பத்மாவதியின் அனுபவமே அனுபவம்! அது உலகில் வேறு யாருக்காவது கிடைக்கக்கூடியதா! அவள் கழுத்திலே ஒரு மாலை அணிந்து கொண்டிருக்கிறாள். ரத்தின மாலை. அதிலே மத்தியிலே ஒரு பெரிய மணி. அந்த மணியிலே, எதிரேயிருக்கிற ஸ்ரீநிவாஸனுடைய திருமுக மண்டலம் தெரிகிறது! அப்புறம் அவள் ஏன் தலையைத் தூக்க வேண்டும்! அந்த மணியிலே தெரிகிற பிம்பத்தையே பார்த்துக் கொண்டிருக்கிறாள்.

பத்மாவதிக்கு உலகத்தவரிடத்திலும் நல்ல பெயர்; அவள் அனுபவத்துக்கும் குறையில்லை! ஸ்ரீநிவாஸனைப் பார்த்து ரசிக்கிறாள்!

ஆந்திர தேசத்திலே நடக்கிற விவாகம் அல்லவா... அதனால் அந்த தேச வழக்கப்படி ஒரு விஷயம் :

ஆந்திர தேசத்திலே மாங்கல்ய தாரணத்தோடு 'ஆனந்தம் ஆனந்தம் ஆனந்தமே' என்று முகூர்த்தம் முடிந்து விடாது. ஜீரகத்தையும் வெல்லத்தையும் சேர்த்து அரைப்பார்கள். அதை பெண் — மாப்பிள்ளை கையில் கொடுத்து ஒருவருக்கொருவர் தலையில் தேய்த்துவிடச் சொல்லுவார்கள். இடையிலே திரை பிடித்திருப்பார்கள். அதுதான் முகூர்த்தம்! அந்த நேரத்திலே மகா சங்கல்பங்களெல்லாம் சொல்லுவார்கள்.

சீரகம் ஒரு ருசி; வெல்லம் இன்னொரு ருசி. இரண்டும் கலந்து இழைகின்றன. அதைப் போலே இரண்டு பேரும் கலந்து இழைய வேண்டும் என்பது ஐதீகம்.

அதுமட்டுமல்ல... கல்யாண தினத்திலே உட்காருவதும் எழுந்திருப்பதும் சேவிப்பதுமாக இருப்பதால் சிலருக்கு தலை

...ளாயிருக்கிறவன் திருமலையிலே இருப்பதாலே — முன்பு பரக்கப் பேசப்பட்ட பெருமைகளெல்லாம் — சஹஸ்ரநாம விளக்கமெல்லாம் இந்த ஸ்ரீநிவாஸனுக்கும் பொருந்துவதே.

பேராயிரம் கொண்டதோர் பீடுடையவனான திருவேங்கடமுடையான் இருக்கல

சுற்றல் போன்ற உபாதைகளெல்லாம் வரும். வைத்திய சாஸ்திரப்படி சிரகத்தையும் வெல்லத்தையும் அறைத்து உச்சந்தலையில் வைத்தால் உஷ்ண சமனம் ஏற்படுகிறது.

இன்றைக்கும் பெருமாளுக்கு வேங்கடத்திலே கல்யாண உத்ஸவம் நடத்தும்போது இந்த சிரக - வெல்ல சடங்கு நடக்கிறது.

இன்னொரு வழக்கம் - சோபனாக்ஷதை சேர்ப்பது. ஒருத்தருக்கொருத்தர் தலையிலே அக்ஷதை சேர்த்துக் கொள்ள வேண்டும். வெள்ளை வெளேரென்ற அக்ஷதையை எடுத்து பத்மாவதி சிரஸிலே சேர்க்கிறான் பெருமாள். அது கீழே விழும்போது அப்படியே தங்கக் கட்டியைப் போல் விழுகிறதாம்.

ஏன்...? பத்மாவதி பொன்னிறத் திருமேனியுடையவளானதாலே அக்ஷதை அவள் நிறத்தைப் பெற்று அப்படி ஒளிர்கிறதாம்.

ஸ்ரீநிவாஸன் சிரஸிலேயிருந்து விழுகிற அக்ஷதை நீலமணிகளாகக் காட்சி அளிக்கிறதாம். அவன் நீலமேக ஷ்யாமள வண்ணனல்லவா...? அதனாலே.

நாடக அரங்கத்திலே வண்ண விளக்குகளைப் போட்டு மாற்றி மாற்றி சிவப்பு, பச்சை, நீலம் என்று காட்சி சித்திரிக்கிறார்களே அதைப் போல, விளக்குகளுக்கு அவசியமே இல்லாமல் ஒரு வர்ண ஜாலம் நடக்கிறது அங்கே. நீலம், பொன்னிறம், வெண்மை என்று மாறி மாறி விழுகிறபோது, பார்க்கிறவர்களெல்லாம் 'இன்னும் கொஞ்சம் நேரம் பார்த்துக் கொண்டேயிருக்க மாட்டோமா?' என்று ஆசைப்படுகிற அளவுக்கு இருக்கிறதாம் அந்தக் காட்சி.

சரி, இந்தக் காட்சியைப் பார்க்க முடியாவிட்டாலும் இதை வர்ணிக்கக் கேட்க முடிகிறதல்லவா நமக்கு... அதனால் நமக்குப் பலன் என்ன...?

அந்த ஸ்ரீநிவாஸனுடைய திருக்கரத்தை நாமும் பிடித்து, பத்மாவதிக்கு சமானமாக அவன் திருவடியிலே கைங்கர்யம் பண்ணும் படியான பாக்கியம் அருள்வாள்.

இந்த உலகத்திலே இதனால் நமக்குப் பலன் என்ன.... வாழ்க்கையிலே நடக்க வேண்டிய சமஸ்த மங்கள காரியங்களையும் அது நடத்தி வைக்கும். வயதான காலத்திலே, நமக்கு அந்த ஸ்ரீநிவாஸனுடனேயே கல்யாணத்தை நடத்தி வைக்கும். அதாவது மோக்ஷ பதவியை அளிக்கும்.

*(ஆஸ்திக சமாஜம், சென்னை - 18-ல் முக்கூர் ஆற்றிய உரைகளின் தொகுப்பு இது. - இரண்டாம் பகுதி அடுத்த இதழில் ஆரம்பம்)*



## மறியல்

''எங்கள் கிராமத்துக்கு சாலை வசதியும் பஸ்சும் கண்டிப்பா வேண்டும், தலைவரே!''

''அதென்னய்யா அத்தனை கண்டிஷனா பேசறே?''

''அப்பத்தானே சாலையில் அமர்ந்து பஸ்ஸை மறியல் செய்ய முடியும்!''

— எஸ். மோகன்

## குலுக்கல்



"உங்க கட்சியில ஒரே மாசத்தில் ரெண்டு லட்சம் உறுப்பினர்கள் சேர்ந்துட்டாங்களாமே, எப்படி?"

"உறுப்பினர்களுக்கு மாருதி கார், ப்ரிட்ஜ், டீவின்னு குலுக்கல் முறையில் பரிசு தர்றதா அறிவிச்சோம், அதுதான்."

- நந்தன் குமார்


## மீதி?

''எப்பவும் பையனை 'படி படி'ன்னு நச்சரிக்காதே. 'பிடிச்ச டீவி நிகழ்ச்சிகளைப் பாரு. அப்புறம் படி'ன்னு சொல்லு.''

''அப்படிச் சொன்னால்?''

'' 'நாம சொன்னதிலே பாதியையாவது பையன் கேட்டு நடக்கிறான்'ற திருப்தி கிடைக்கும்.''

- குல்லூர



**கா**தலியை முத்தமிட ஆசைப்படுவது இயல்பான ஒன்றுதானே?

நீங்கள் 'சுலபமாக எடுத்துக் கொள்ளும்' பிரிவு என்றால் "இதெல்லாம் கொசு ஆசை. மைக்ரோ லெவல் விஷயம்" என்று ஏளனப் படுத்தலாம். மரபு மாறாத பழமைவாதி என்றால் கூட, அப்படி 'ஆசைப்படுவதில்' தப்பு இல்லை என்று ஒத்துக் கொள்வார்கள்.

ஆனால் இப்படி ஒரு இயற்கையான எண்ணம் வந்ததற்கே தன்னைக் கடிந்துக் கொண்டான் பரசு.

'நேரடியாக ஊர்மியிடமே தன் ஆசையை வெளியிட்டாலென்ன?' என்று மின்னலாக யோசனை தோன்ற, அப்படி நினைத்ததற்காகத் தன் தலையில் ஓர் இடியை (குட்டு) இறக்கிக் கொண்டான்.

இருதலைக் காதல்தான். என்றாலும் ஊர்மியின் ரேஞ்ஜே தனி. அவள் பொத்திக் காக்கப்பட வேண்டியவள். வெள்ளை உள்ளக்காரி.

"உங்களை ரொம்ப உயர்வாக நினைச்சிருந்தேன் பரசு. கடைசியிலே நீங்களும் சராசரிதானா?" என்று அவள் கேட்டு விட்டால்? அப்படிக் கேட்டுத் தொலைத்து விட்டால் கூடப் பரவாயில்லை. கண்ணீர் பொங்கும் கண்களோடு தன்னைக் குற்றம்சாட்டுவது போல் பார்த்து விட்டால்?

பரசுவின் எண்ண ஓட்டங்களுக்குக் காரணம் இருந்தது.

அழகு, அறிவு, பணிவு, பண்பு - இப்படி ஒருத்தியைக் காதலிக்க ஆயிரம் காரணங்கள் இருக்கலாம். ஆனால் பரசு ஊர்மிளாவைக் காதலிக்கத் தொடங்கியது ஆயிரத்தோராவது காரணத்துக்காக - அவளது அப்பாவித்தனத்துக்காக.

"அப்படி என்னென்ன விதங்களில் ஊர்மிளா அப்பாவித்தனமாக நடந்து கொண்டு அவன் மனத்தில் இடம்பிடித்தாள்?" என்று கேட்டால் பரசுவால் ஒரு பட்டியலைக் கொடுக்க முடியாதுதான். ஆனால் முதல் சந்திப்பிலேயே அப்படி ஒரு இமேஜ் அவள் மீது விழுந்து விட்டது.

**ந**வீன அபார்ட்மெண்ட்கள் போல் அமைந்த பெசண்ட் நகர் கோவில். அதன் உச்சியில் உள்ள தனலட்சுமி சன்னதியில் மற்றவர்கள் மனமுருகி வேண்டிக் கொண்டிருக்க (பணத் தாசை!), "ஹை, கடற்காத்து எவ்வளவு சுகமா இருக்குது?" என்று உற்சாகக் குரல் கேட்டு பரசு திரும்பினான். பறந்து கொண்டிருந்த முடியையும், புடைவையையும் தன் இரு கைகளால் அழுத்திக் கொண்டபடி ஊர்மிளா. அப்பாவிப் பெண் என்று பச்சென்று மனத்தில் பதிந்து விட்டது.

கடற்கரைக் காற்றை ரசித்தால் அது அப்பாவித்தனமா என்ன? அப்படியல்ல. என்றாலும் ஊர்மிளா ஓர் அப்பாவி என்ற இமேஜ் ஏனோ அவன் மனத்தில் பதிந்து விட்டது.

வட்டமுகம். அலைபாயும் பெரிய கண்கள். முக்கியமாக, கீழுதட்டில் சிறிய மச்சம்.

பரசுவின் அலுவலகத்திலேயே அதற்கு அடுத்த வாரம் ஊர்மிளா வேலைக்குச் சேர்ந்தவுடன் "ஐயோ, எங்கள் இணைப்பு தெய்வ சங்கல்பம்" என்று புல்லரித்துப் போனான்.

சந்திப்புக்களையும், பேச்சுக்களையும் தற்செயலாக நிகழ்வது போல் வேண்டுமென்றே உருவாக்கினான். நாளடைவில் தன்னிடமும் அவளுக்கு ஈடுபாடு இருப்பது போல் தோன்றியவுடன், அந்தப் 'பிரபலமான மூன்று ஆங்கில வார்த்தைகளை' உதிர்த்தான்.

"உங்க அப்பா அம்மா நம்ம கல்யாணத்துக்கு மறுக்க மாட்டாங்க ஒத்துக்குவாங்களா?" இதுதான் அவளது உடனடி பதில் (கேள்வி?). 'ஐயோ ஊர்மி, உனக்குப் பளிங்கு மனம். அப்பாவி' அவளை மேலும் நேசிக்கத் தொடங்கினான்.

"**உ**னக்கு என்னை ஏன் பிடிச்சுப் போனது ஊர்மி?"

"குறிப்பா தெரியல்லே. மொத்தமாப் பிடிக்குது. எங்க அப்பா கேட்டப்பவும் இதைத்தான் சொன்னேன்."


"உங்க வீட்டிலே நம்ம காதலைப் பற்றி சொல்லிட்டியா?"

"ஓ! 'உன் முடிவுதான் எங்க முடிவும்'னுட்டாங்க. அது சரி பரசு. உங்களுக்கு என்கிட்டே பிடிச்சது என்ன?"

எப்படிச் சொல்வது - 'உன் அப்பாவித்தனத்தை அப்படியே வெளிப்படுத்தும் கண்களும், உதடுகளும்' என்பதை? 'சுற்றிச் சுற்றி என் உருவ அழகில்தான் உங்களுக்கு மயக்கமா?' என்று அவள் புண்பட்டால்?

இதுவரை அவன் தன்

# தேவை ஒரு முத்தம்



அருண் சரண்யா


கைகளைக் கூடப் பற்றிக்கொண்டு நடந்த தில்லை. இன்னும் மூன்று மாதங்களில் திரு மணம் செய்து கொள்ளும் உத்தேசம். பிறகு கண்ணைப் போல் இவளைக் கண்ணிமையாகக் காக்க வேண்டும்.'

என்றாலும் ஊர்மியைப் பார்க்கும்போ தெல்லாம் அவள் உதடுகள் அவனை அலைக்கழித் தன. குறைந்தபட்சம் கன் னத்திலாவது முத்தமிட்டால்? நினைவே கள்வெறி தந்தது.

"இரண்டு பூக்கள் ஒன்றை யொன்று தொடுவது போல் சினிமாவில் காண்பித்தால் என்ன அர்த்தம் ஊர்மி?" என்றான் ஒரு நாள்.

"சாரி. நான் அதிகம் சினிமா பார்த்ததில்லை. என்ன அர்த் தம்?"

'இதையெல்லாம் விளக்கி உன் அழகான அறியாமை யைக் கலைப்பேனா? உன்



# முதற் கனவு

கண்ணீர் இல்லாமல் கதறினாய் நீ
உலக வாசலில் வரவேற்கப்பட்டதும்
மண்ணைப் பிளந்த பயிரேபோல்
மாதாவின் மடியில் உதித்த புத்துயிரே!
பழகிய வீட்டுச் சூழல் போகவே,
புது உலகக் காற்றும் ஒளியும்
உன்னை வீணை நரம்புபோல் நடுக்கின;
உதறலும் கதறலும் பெரிய உழைப்பு உனக்கு.
ஒரு நாழிகைக்குள் உறங்கிப் போனாய்.

பாராட்ட, சீராட்ட வந்த நாங்கள்
உன் விழிகள் அசைவில் வியந்து நிற்கிறோம்.
என்ன கனவு காண்கிறாய்?
புதுமை எப்போதும் இனிக்குமே!
முதல் உழைப்பில் அயர்ந்து முதன்முதலாக
உறங்கும் நீ,
எதற்கென இதழ்களை முறுவலிக்கிறாய்?
உன் முதற்கனவின் இனிமையை
எங்களிடம் பகிர மாட்டாயோ?

உன்னைச் சூழ்ந்துள்ள நாங்களும்
உன்னைப் பற்றி முதற்கனவு காணகிறோம்,
மனித குலத்துக்கே நீ மாமருந்தாக,
மாமணியாக விளங்க வேண்டும் என்று.
எங்கள் முதற்கனவு மெய்ப்படட்டும்!

— ஆர். கோபாலகிருஷ்ணன்

களங்கமில்லா மனசு அப்படியே இருக்கட்டும்.'

என்றாலும் முத்த ஆசையை மொத்தமாக மறந்துவிட முடியவில்லை.

இருள்கவிந்த மாலை நேரத்தில், பல காதலர்கள் வரம்பு தாண்டிக் கொண்டிருந்த அந்தக் கடற்கரைச் சூழலில், மீண்டும் ஒரு சினிமாத்தனமான யோசனை தோன்றியது பரசுவுக்கு.

"ஊர்மி. நான் ஒண்ணு கேட்பேன்."

"கேளுங்களேன்."

"மாட்டேன்னு சொல்லக் கூடாது."

"ஓக்கே. சொல்லுங்க பரசு."


'ஊர்மியின் குரலில் 'எனக்குத் தெரியாதா உன் சாகசம்' என்ற எள்ளல் இல்லை. கடைந்தெடுத்த அப்பாவித்தனம். வேறுவழியில்லை. வெளிப்படையாகக் கேட்டு விடத்தான் வேண்டும். அதிர்ந்து போவாள். 'குறைந்தபட்சம் என் கையில் உன் இதழ்களைப் பதி. உன் கையில் நான் முத்தமிடுகிறேன்' என்று சொல்லி விடலாம். காம்ப்ரமைஸ்!

"என்ன பரசு, இன்னும் யோசிக்கிறீங்க?"

"ஒரு முத்தம்.... கொடுக்கணும்னு ஆசை ஊர்மி."

"அவ்வளவுதானே." டக்கென்று அவனைத் தன்புறம் இழுத்து வேகமாக அவன் இதழ்களைக் கௌவினாள். சில நொடிகளுக்குப் பின் விலகினாள்.

"திருப்தியா பரசு?" அவள் பரவசத்துடன் கேட்க, சட்டென்று ஒரு வெறுமை கவ்வியது அவனை.



இவர்தான்
அவரது
அப்பா!

# P.R.C. கார்மெண்ட்ஸ், கரூர்.

இந்நிறுவனம் "பாரதப்பிரதமரின் படித்த இளைஞர்களுக்கான சுயவேலை வாய்ப்பு திட்டத்தின்" கீழ், 1984 ம் ஆண்டு கரூர் கிளை கனரா வங்கியின் பொருளாதார உதவியுடன் துவக்கப்பட்டு 1984 ம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது.

## மீண்டும் புதுமைத் திட்டம் No. 2

**சில மாற்றங்களுடன் 07-02-1997 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.**

இத்திட்டத்தின் மூலம் வங்கி ஒன்றின் நீண்டகால டெபாசிட் ரசீது பெறப்பட்டு 'சிறு சேமிப்பு' ஊக்குவிக்கப்படுகிறது. மேலும் இத்திட்டத்தின் உறுப்பினர்களின் அன்றாட தேவைப் பொருட்கள் அனுப்பப்படுவதின் மூலம், அவர்களுடைய சிறிய அளவு தேவைகள் பூர்த்தி செய்யப்படுகிறது.

ஒரே ஒருமுறை ரூபாய் 500/- செலுத்துங்கள். உடனடியாக ரூபாய் 905/-க்கான வங்கி ஒன்றின் டெபாசிட் ரசீதை பெற்றுக் கொள்ளுங்கள். இத்துடன் ஆண்டுக்கு ஒருமுறை வீதம் தொடர்ந்து ஏழு ஆண்டுகளுக்கு ரூபாய் 140/- மதிப்பிற்கு கீழ்கண்ட பொருள்களில் உங்கள் விருப்பத்திற்கு ஏற்றவாறு பெற்றுக் கொள்ளுங்கள்.

### திட்ட விபரம் :

1. இத்திட்டத்திற்காக ஒரே ஒருமுறை ரூபாய் 500/-ஐ D.D. (or) M.O. மூலமாக எங்கள் நிறுவனத்திற்கு செலுத்துங்கள்.
2. உங்கள் பணம் கிடைக்கப் பெற்றவுடன், உங்கள் பெயரில் வங்கி ஒன்றில் டெபாசிட் கணக்கு துவக்கப்படும். இதற்கான வங்கியின் விண்ணப்பப் படிவம் உங்களுக்கு அனுப்பி வைக்கப்படும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவம் கிடைக்கப் பெற்றவுடன் உங்கள் பெயரில் ரூபாய் 905/- க்கான டெபாசிட் ரசீது ஒன்று பெறப்பட்டு உங்களுக்கு அனுப்பி வைக்கப்படும். இந்த டெபாசிட் ரசீதின் முதிர்வு காலம் 90 மாதங்களாக இருக்கும்.
3. ஒவ்வொரு ஆண்டும் உங்களுக்கு தேவைப்படும் பொருட்களை பற்றிய விபரங்கள் உங்களிடமிருந்து கேட்டறியப்படும். இதற்கான விலைப்பட்டியல் ஒவ்வொரு ஆண்டும் அனுப்பி வைக்கப்படும். இதற்கான பதில் கிடைக்கப் பெற்றவுடன் ரூபாய் 140/- மதிப்புக்குரிய பொருட்களை தபால் அல்லது கூரியர் சர்வீஸ் மூலம் எங்கள் நிறுவனத்தின் செலவில் அனுப்பி வைக்கப்படும். இவ்வாறு ஏழு ஆண்டுகள், ஆண்டுக்கு ஒருமுறை வீதம், (140 X 7 = 980/-) தொடர்ந்து அனுப்பி வைக்கப்படும். முதல் தவணை பொருட்கள் நீங்கள் பணம் செலுத்திய தேதியிலிருந்து ஓராண்டு கழித்து அனுப்பி வைக்கப்படும்.

### பொருட்கள் விவரம்

1. "லில்லி" உள்பாவாடைகள்
2. நைட்டீஸ்
3. கரூர் நிட்டிங் கம்பெனியாரின் ISI முத்திரைபெற்ற PRESTIGE பனியன்கள்
4. லுங்கிகள் (கைலிகள்)
5. பெட்சீட்

இதற்கான விலை மதிப்பு ஒவ்வொரு ஆண்டும் அனுப்பிவைக்கப்படும்.

**இத்திட்டத்தில் சேர்ந்து அனைவரும் பயன்பெற வேண்டுகிறோம்.**

பணம் அனுப்ப வேண்டிய முகவரி :

**P.R.C. கார்மெண்ட்ஸ்,** ☎ **04324 - 61946**

**2/12, A.N.R. காம்ப்ளக்ஸ் 2-வது மாடி,**

**முருகநாதபுரம், கரூர் - 639 002.**

குறிப்பு :

*நீண்ட கால டெபாசிட்களுக்கு வங்கிகள் அளித்து வரும் வட்டி விகிதங்களில் வங்கிகளுக்கிடையே மிகுந்த அளவு ஏற்றத்தாழ்வு இருப்பதாலும், வட்டி விகிதங்கள் அடிக்கடி மாறுதலுக்கு உட்படுத்தப்படுவதாலும் எந்த வங்கியில் டெபாசிட் செய்யப்படுகிறது என்பது இத்திட்டத்தில் குறிப்பிடப்படவில்லை.*







குளிர்காலம் முழுவதும் தில்லியில் காலிஃப்ளவர், பட்டாணி சீசன் மட்டுமல்ல... செமினார் சீசனும் கூட! 'ஜே ஜே' என்று செமினார்கள் நடந்த வண்ணம் இருக்கும். இப்படி ஜே ஜே என்று நடக்கும் தில்லி செமினார்கள், ஜெவுடைய வளர்ப்பு மகனின் கல்யாணத்துடன் ஒப்பிடும்படி இல்லாவிட்டாலும், அந்தக் காலத்து மூன்று நாள் கல்யாணங்களை நினைவூட்டும் அளவிற்கு ஜாம் ஜாம் என்றுதான் நடக்கின்றன.

# செமினார் சீசன்!

வீட்டைக் கட்டிப் பார், கல்யாணத்தைப் பண்ணிப் பார் என்ற பழமொழியுடன், செமினாரை நடத்திப் பார் என்ற புதுமொழியையும் சேர்த்துக் கொள்ளலாம். அதுவும் பல் நாட்டு நிபுணர்கள் கலந்து கொள்ளும் சர்வதேச செமினார் என்றால் தடபுடலுக்குக் கேட்கவே வேண்டாம். இப்படிப்பட்ட செமினார்களுக்கான ஏற்பாடுகள் ஒரு வருடம் முன்பே துவங்கி விடும். சென்னையில் கல்யாண சீசனில் மண்டபம் கிடைத்தாலும் கிடைக்கும், தில்லியில் செமினார் சீசனில் ஹால் கிடைப்பது, குதிரைக் கொம்புதான்! மகாநாடுகள், செமினார்கள் நடத்துவதற்கென்று பிரத்யேகமான அரங்கங்கள் ஒன்றிரண்டுதான் உள்ளன.

செமினார் வேலைகளை ஒரு வருடத்திற்கு முன்பே துவங்குவதற்கு மற்றொரு முக்கிய காரணமும் உள்ளது. செமினார்களில் பங்கு பெறும் நிபுணர்களை அவ்வளவு எளிதில் பிடித்து விட முடியாது. தான் ஒரு 'செமினாரிஸ்ட்' என்று மார்தட்டிக் கொள்ளும் இந்த நிபுணர்களுக்கு செமினார்களில் பங்குகொள்வதே தலையாய வேலை. ஏன்... அதைத் தவிர வேறு வேலை ஒன்றும் கிடையாது என்று



கூடச் சொல்லலாம். இப்படிப்பட்ட பழம் தின்று கொட்டை போட்ட செமினாரிஸ்டுகளுக்கு முன்கூட்டியே அழைப்பு விட வேண்டும். பல்வேறு நாடுகளில் அவ்வப்பொழுது 'கொண்டாடப்படும்' செமினார்களின் தேதிகளுடன் மோதாமல் நல்ல முகூர்த்த நாளைத் தேர்ந்தெடுக்க வேண்டும். அதே நாளில் அரங்கமும் கிடைக்க வேண்டும். அப்புறம் இந்த நிபுணர்கள் செமினாரில் சமர்ப்பிப்பதற்கான கட்டுரைகளை எழுத போதிய







அவகாசம் கேட்பார்கள்!

கொடுக்க வேண்டுமல்லவா!

இந்த நிபுணர்களிடமிருந்து நாம் புதிதாக ஏதாவது கற்றுக் கொள்கிறோமோ இல்லையோ, இப்படி நாலு வெள்ளைக்காரர்களை நாம் அழைத்தால்தான் அவர்கள் நாடுகளில் செமினார்கள் கொண்டாடும்பொழுது நம்மை அழைத்து பதில் மரியாதை செலுத்துவார்கள்!

சர்வதேச செமினாரில் பங்குபெற வரும் வெளிநாட்டு நிபுணர்களை, சர்வ மரியாதையுடன் விமான நிலையத்திற்குப் போய் "செமினார் கல்யாணமே, வைபோகமே" என்று பாடி வரவேற்காத குறையாக, மலர் மாலை அணிவித்து வரவேற்று, ஐந்து நட்சத்திர ஹோட்டல்களில் தங்க வைப்பதும், உள்நாட்டு நிபுணர்களைச் சற்று சுமாரான விடுதிகளில்

செமினாரிஸ்ட்கள் எழுதும் கட்டுரைகளின் கருத்தை, நம் வீட்டு இட்லி அல்லது தோசை மாவுடன் ஒப்பிடலாம். ஒருமுறை மாவை ஆட்டி வைத்தால் போதும். அந்த மாவை வைத்தே இட்லி வார்க்கலாம், தோசை சுடலாம் அல்லது ஊத்தப்பமாக உருமாற்றலாம். தாங்கள் எப்பொழுதோ கொஞ்சம் சிரமப்பட்டு செய்த ஆராய்ச்சியை அடிப்படையாக வைத்து, இந்த செமினாரிஸ்ட்கள், அவ்வப்பொழுது அதில் உப்பு, புளி, மிளகாய் என்று மசாலாவைக் கூட்டி, குறைத்து, தாளித்து செமினார்களில் பரிமாறி விடுவார்கள். இப்படிப்பட்ட சமையலைப் படைப்பதற்கு, செமினாரிஸ்ட்களுக்கு கம்ப்யூட்டர் வேறு வரப்பிரசாதமாக விளங்குகிறது.

எல்லா செமினார்களிலும் நான்கைந்து வெள்ளைக்காரர்களாவது நிச்சயமாகத் தென்பட வேண்டும். நம் குழந்தைகளை நாம் எப்படி சத்துள்ள உணவு கொடுத்து வளர்க்க வேண்டும், நம் வீட்டுப் பெண்மணிகளை நாம் எப்படி நடத்த வேண்டும், நம் குடும்பத்தை நாம் எப்படிக் கட்டுப்படுத்த வேண்டும் என்றெல்லாம் அமெரிக்காவிலிருந்தும், ஆஸ்திரேலியாவிலிருந்தும் வெள்ளைக்கார நிபுணர்கள் வந்துதான் நமக்குச் சொல்லிக்



தங்கவைப்பதும் சர்வ சகஜம்.

ஆனால், உள்நாட்டு செமினாரிஸ்ட்கள் இதைப் பற்றியெல்லாம் அதிகம் கவலைப்பட மாட்டார்கள். விமானக் கட்டணத்தைப் பெற்றுக் கொண்டு, திருட்டுத்தனமாக ரயிலில் பயணித்து பணத்தை மிச்சப்படுத்துவதிலும், ஒரே சமயத்தில் இரண்டு இடங்களிலிருந்து விமானக் கட்டணத்தை வசூலிப்பதிலும், குறியாக இருப்பார்கள்!.

**செமினார் கல்யாணங்களுக்கு அநேக நிபுணர்கள் தம்பதி சமேதராகத்தான் வருவார்கள். வீட்டிற்குள் அடி-தடி சண்டை போட்டுக் கொண்டாலும், செமினார்களுக்கு மட்டுமே மிக ஒற்றுமையாக இணைந்து கட்டுரை எழுதி இரண்டு விமான டிக்கெட்டுகளைப் பெறுவதில் கில்லாடிகள்!**

இப்படி ஹனிமூன் கொண்டாட ஜோடி ஜோடியாக வரும் தம்பதிகளை குஷிப்படுத்த வேண்டியது, செமினார் நடத்துபவர்களின் முக்கிய கடமை. மாலை வேளைகளில் தில்லியைச் சுற்றிப் பார்க்கவும், ஷாப்பிங் பண்ணவும், முடிந்தால் ஆக்ரா, ஜெய்ப்பூர் போன்ற ஊர்களுக்கு உல்லாசப் பயணமும் இவர்களுக்காக ஏற்பாடு செய்யப்படும்.

கறுப்புப் பூனைகள் புடைசூழ விஐபி ஒருவர் வந்து செமினாரைத் துவங்கி வைத்தால், அந்தச் செமினாருக்கு மதிப்பே அலாதிதான்! காரணம், கறுப்புப் பூனை முக்கியஸ்தர்கள் வருகை தொலைக்காட்சிக் குழுவினரையும் வரவழைக்கும். அன்று இரவே தொலைக்காட்சி செய்திகளில், செமினாரிஸ்ட்களின் முகங்கள் காட்டப்படும்.

துவக்க விழா அன்று, நிகழ்ச்சி நிரல், நிபுணர்கள் எழுதிய கட்டுரைகள், பேனா, நோட்டுப் புத்தகம் ஆகியவை அடங்கிய பை ஒன்று செமினாரில் பங்குபெறும் நிபுணர்களுக்கு வழங்குவது ஒரு முக்கிய சடங்கு. இப்படி விநியோகிக்கப்படும் பையின் தரத்தை வைத்து, செமினாரின் அந்தஸ்தை நிர்ணயித்து விடலாம்.

**செமினார் ஏற்பாடு செய்யும் அலுவலகங்களில், செமினாருக்கான பைகளை வாங்குவதற்கென்றே கமிட்டி ஒன்று நியமிக்கப்படும். இந்த 'செமினார் பை' கமிட்டி பல இடங்களிலிருந்து 'மாதிரி' பைகளைத் தருவித்து, செமினார் மற்றும் செமினாரிஸ்ட்களின் அந்தஸ்திற்கு ஏற்ற பையைத் தேர்ந்தெடுப்பதற்கு சுமார் மூன்று மாதங்கள் வரையில் கூட ஆகலாம். இப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட செமினார் பைகளில் ஒன்றிரண்டு, கமிட்டி மெம்பர்களின் வீடுகளையும் சென்றடையும் என்பதைச் சொல்லவும் வேண்டுமா?**

குளிர்காலம் என்பதைச் சாக்காக வைத்து, செமினாரில் பங்குபெறும் ஆண்கள் சூட்டு பூட்டு அணிந்து, தாட்பூட்டென்று ஜான வாச மாப்பிள்ளை போல் காட்சியளிப்பார்கள். பெண்மணிகளைப் பற்றி கேட்கவே வேண்டாம். காஞ்சிபுரம் பட்டு, டஸ்ஸர் சில்க், மைசூர் கிரேப், ஜாம்தானி என்று மூன்று நாட்களும் விதவிதமான புடைவைகளில் பவனி வர, இவர்களுக்கு செமினாரை விட்டால் வேறு நல்ல வாய்ப்பு கிடைக்குமா?

உடனே செமினாருக்கு வரும் எல்லா நிபுணர்களுமே தாட்பூட்டென்று வருவார்கள் என்று நினைக்காதீர்கள். பிரதமர் தேவே கௌடாவைப் போல், தூக்கத்திலும் இந்நாட்டினர் ஏழை, எளிய மக்களைப் பற்றிய கவலையில் மூழ்கிக் கிடக்கும் செமினாரிஸ்ட்களும் இல்லாமல் இல்லை. இந்த நிபுணர்கள், மாருதி எஸ்டீமிலும், சியோலோ கார்களிலும் வந்திறங்கினாலும், ஜோல்னா பையை மாட்டிக் கொண்டு, பொத்தல் விழுந்த பைஜாமா, ஜிப்பா, கசங்கிய கைத்தறி புடைவை அல்லது சல்வார் கமீஸில், ஏழைக் கோலம் பூண்டு, இந்நாட்டு அடிமட்ட மக்களின் உண்மை பிரதிநிதியாக செமினார்களில் கலந்து கொள்வார்கள்.

நாட்டின் ஜனத்தொகையில் சுமார் நாற்பது சதவீதம் பேர் பட்டினி கிடக்கிறார்கள் என்பதற்காக, செமினாரிஸ்ட்களின் வயிற்றைக் காயப் போட முடியுமா?

மூன்று நாட்களும் என்னென்ன உணவு வகைகள் படைக்கப்பட வேண்டும் என்பதைத் தீர்மானிக்க, சாப்பாட்டு ராமன்கள் அடங்கிய குழு ஒன்று அமைக்கப்படும். இந்தக் குழுவின் பரிந்துரையின்படி, முதல் நாள் தந்தூரி சிக்கன், சோலே பூரி, புலாவ் அடங்கிய வடஇந்திய சாப்பாடு, மறுநாள் சாம்பார், மசால் தோசை, இட்லி, வடை வகைகளுடன் தென்னிந்திய போஜனம், கடைசி நாள் மேல்நாட்டு அல்லது சைனீஸ் உணவு என்று சூப்பில் ஆரம்பித்து, ஐஸ்கிரீமில் மங்களம் பாடும் விதத்தில் மூன்று நாட்களும் மதிய உணவு சற்று பலமாகத்தான் இருக்க வேண்டும். அப்பொழுதுதான் செமினாரிஸ்ட்கள், உணவு இடைவேளையின் பிற்கு பலமாகத் தூங்கலாம்.

இப்படித் தூங்குபவர்களைத் தட்டி எழுப்புவதற்காகவே காலை பதினோரு மணிக்கு ஒருமுறையும், மதியம் மூன்றரை மணிக்கு ஒரு முறையும் தேநீர் இடைவேளை விடப்படும். இந்த இடைவேளைகளில் வெறும் தேநீர் மட்டும் வழங்கினால், சம்பந்தி சண்டை வந்து விடாதா? அதனால் காலையில் பிஸ்கெட், கேக், முந்திரி வறுவல் வகைகளுடனும், பிற்பகலில் பஜ்ஜி, பகோடா, சமோசா வகைகளுடனும், ஏழை நாட்டிற்கு ஏற்ற என்னுருண்டையாக தேநீர் வைபவங்கள் நடந்தேறும். போதாக்

குறைக்கு இரவு வேளைகளில், கோழி கூவும் வரையில் கோழிவால் பார்ட்டிகளும், டின்னருமாக கொட்டம் அடிப்பார்கள் செமினாரிஸ்ட்கள்!

செமினார்களுக்கு வரும் நிபுணர்கள் பல வகைப்பட்டவர்கள். சில செமினாரிஸ்ட்கள், அதுவும் குறிப்பாக உள்ளூர் செமினாரிஸ்ட்களில் பலர், அங்கு விநியோகிக்கப்படும் பை, பேனா, நோட்டுப் புத்தகம் இத்தியாதிகளைச் சுருட்டிக் கொண்டு, துவக்க விழா முடிந்தவுடன், மூச்சுக் காட்டாமல் நழுவி விடுவார்கள்! (ஆமாம்! இந்தப் பழம் தின்று கொட்டை போட்ட செமினாரிஸ்ட்கள் இப்படி ஒவ்வொரு செமினாரிலிருந்தும் சேகரிக்கும் பைகளை வைத்துக் கொண்டு என்னதான் செய்வார்கள்? ரகசியமாக பைக் கடை ஏதாவது வைத்திருப்பார்களோ?)

வெளியூர் செமினாரிஸ்ட்களில் சிலர், தில்லிக்கு வந்த வாய்ப்பை, நேரத்தை வீணடிக்காமல் உறவினர்கள், நண்பர்களை சந்திக்க அல்லது வேறு செமினார்களுக்கான அழைப்பிற்கு ஏற்பாடு செய்ய என்று இங்கே அங்கே ஊர் சுற்றி விட்டு, சரியாக மதிய உணவு பரிமாறும் சமயத்தில் டாணென்று ஆஜராகி விடுவார்கள்.


ஆக, மூன்று நாள் செமினார் கல்யாணங்களில், துவக்க விழா முடிந்த உடனேயே கூட்டம் பாதியாகக் குறைந்து விடும். கடைசி நாளன்றோ கேட்கவே வேண்டாம். செமினார் அரங்கில் அங்கொன்றும், இங்கொன்றுமாக எண்ணி பத்து பேர் தூங்கி வழிந்து கொண்டிருப்பார்கள். பாதிப் பேருக்கு மேல், தாங்கள் இன்னும் செய்து முடிக்க வேண்டிய வேலைகள் ஏதாவது விட்டுப் போயிருந்தால் அவற்றைக் கவனிப்பதிலும், கடைசி நேர ஷாப்பிங் செய்வதிலும் மும்முரமாக இருப்பார்கள். இன்னும் சிலர், வரவு செலவு கணக்குப் பார்ப்பதிலும், விமானக் கட்டணத்தை வசூலிப்பதிலும் பொழுதைக் கழித்துக் கொண்டிருப்பார்கள்.

மூன்று நாட்களாக இத்தனை நிபுணர்கள் விழுந்து விழுந்து மண்டையை உடைத்துக் கொண்டு சர்ச்சை செய்தார்களே, ஏதாவது உருப்படியான முடிவிற்கு வருவார்களா?

நிச்சயமாக, மாட்டார்கள். பிறகு அடுத்த செமினாரில் அலசுவதற்கு விஷயம் வேண்டாமா? அநேக செமினார்கள், அடுத்த செமினாரை எந்த நாட்டில், எந்த ஊரில் கொண்டாடலாம் என்ற சர்ச்சையில்தான் முடிவடையும். இந்த செமினாரிஸ்ட்கள், பார்க்காத நாடுகள், ஊர்கள் இன்னும் எத்தனை பாக்கி இருக்கின்றன!

தில்லியிலிருந்து: **ரமாமணி சுந்தர்**

## பொருத்தம்



"வாலுடன் தலைவர் இருக்கறமாதிரி சிலை வடிக்கச் சொல்லித்தான் சிற்பியிடம் சொன்னோம். அவர் தப்பாப் புரிஞ்சுகிட்டிருக்காரு...!"

— பாஸ

## ஆசி!



"நீ என் மருமகளா இருக்கலாம்; அதுக்காக, நாம சண்டையை ஆரம்பிக்கும் முன்னால் நீ இப்படி என் காலைத் தொட்டு ஆசீர்வாதம் வாங்கறது கொஞ்சங்கூட நல்லா இல்லே?"

— திருச்சி எஸ். மல்லிகா



**"மொட்டை மாடு உட்கார்ந்திருக்க, மூக்கணாங்கயிறு மேய்ந்த கதையாகப் பெரிய தலைகள் ஒழுங்காக இருந்தாலும் சின்னதுகள் தவறுகளைச் செய்கின்றன! பெரிய தலை இதை சரிசெய்தால்தான் உண்டு! செய்யுமா?**

**— ரேஷன் கடை விவகாரத்தில் மோகன்ராம் இப்படித்தான் கேட்கிறான்."**

13

**வா**சலில் கிருஷ்ணாராவ்! கிருஷ்ணாராவைப் பார்க்கவும் மகாலட்சுமி சற்று தடுமாறுகிறாள். ஆமை, அமீனா புகுந்த வீடுகள் மட்டுமல்ல; கிருஷ்ணாராவ் புகுந்த வீடும் கூட உருப்படாது என்பது அந்த வீதியின் அசைக்க முடியாத நம்பிக்கை. மனிதரும் ஒரு கோணல் புத்தித் திலகம்! நடமாடும் வட்டிக் கடையாகவும் இருப்பதால் அவரைப் பார்ப்பவர்கள் பல காரணங்களுக்காக ஓட வேண்டிய நிலை.

"என்ன மகா வான்னு கூட கூப்பிட

மாட்டேங்கறே. யாரு வந்திருக்கறது?" – கேள்வியோடு, 'நீ என்ன கூப்பிடுவது' என்கிற மாதிரி மனிதர் உள்நுழைந்து விடுகிறார். வந்த ஜோரில் கனகாவையும் வெறிக்க ஆரம்பித்து விடுகிறது பார்வை.

"என்ன வேணும் கிருஷ்ணாராவ்? உங்ககிட்டே என் மகன் எதாவது கடன் கிடன் வாங்கிட்டானா என்ன?"

''யாரு மோகனா... என்கிட்டையா... கடனா? நல்லா கேட்ட போ. சும்மா கொடுத்தாலே வேண்டாங்கறவன் உன் புள்ளை."

"அப்ப என்ன விஷயம்?"

"ஏன் சும்மா வரக் கூடாதா நான்?"

இருவரின் பேச்சை நரசிம்மன் புரிந்து கொண்டு கனகாவைப் பார்க்க, அவள் கொல்லைப்புறம் செல்லத் தயாராகிறாள்.

''அடடா... கால் விளங்கலையா? பக வானே..." – கிருஷ்ணாராவிடம் விதரணையே இல்லாத ஆதங்கம். கனகா நின்று திரும்பி ஒரு முறை முறைக்கிறாள்.

"தப்பா எடுத்துக்காதேம்மா. எப்படி ஆச்சு இப்படி?"

''உங்களுக்கு எதுக்கு இதெல்லாம்? நீங்க கிளம்பறீங்களா? இங்க எங்களுக்கு நிறைய வேலை இருக்கு" – மகாலட்சுமி பொறுமை இழந்து விட்டது பேச்சில் தெரிகிறது. கிருஷ்ணாராவிடமும் தாக்குப்பிடிக்க முடியாத ஒருவித தடுமாற்றம்.

"ஹூம்... சரி கிளம்பறேன். பிள்ளைக்குக் கல்யாணம் பண்ணப் போறே! என்ன ஏதுன்னு விசாரிக்கலாம்னு வந்தேன். நீ என்னடான்னா ஓரேடியா விரட்டறே. மனுஷா வேணும் மகாலட்சுமி. அதை மறந்துடாதே..." – புலம்பிக் கொண்டே திரும்பி நடக்கிறார். ஓடி வருகிறாள் எதிர் வீட்டவள்.

"மகா, வீட்டைக் கழுவி விடு. இல்லாட்டி தரித்திரம்தான். அவன் கனகாவை நோட்டம் போடத்தான் வந்துருக்கான். இந்த வயசுல நாயிக்கு இரண்டாம்தாரம் கேக்குது" – என்று அவள் சொன்ன போது நரசிம்மனுக்கு ஒரு வினாடி கந்தகத்தை சப்பியது போல் ஒரு பதற்றம். பின்னர்தான் தெரிகிறது. அவன் முதல் மனைவி இறந்து ஆறு மாதமாகிறது என்பதிலிருந்து பல தகவல்கள். அதைக் குறைப்பது போல சுக்குக் காப்பி போட்டு எடுத்து வந்து தருகிறாள் மகாலட்சுமி.

"என்ன நச்சு... சாப்பிடு."

"நான் சாப்பிட்றது இருக்கட்டும் மகா. நீ இனியும் இந்தத் தெருவுல இருக்கக் கூடாது."

"ஏன் இந்த தெருவுக்கென்ன...?"

"கார்ல சட்டுன்னு நுழைய முடியலை. நாய், கோழி, பன்னின்னு மனுஷங்களுக்குச் சரியா ஜீவராசிகள் வேற. மனுஷாளும் மலை விழுங்கிகளா தெரியறானே."

"உன் ஊர்ல எல்லாரும் சத்யசந்தர்களா?"

''அப்படி சொல்ல வரலை. ஆனா இவ்வளவு மோசமில்லை."

"அது பாக்கற பார்வைல இருக்கு நச்சு. நான் அறிய இந்த தேசத்துல எல்லா தெருவுலையும் இதான் நிலை. அத விடு நீ. ஆமா உன் வீட்டுக்காரியைக் கூட்டிக்கிட்டு வரலியா?"

"இல்லை... அவ நிச்சயத்துக்குத்தான் வரேன்னுருக்கா. மாப்ளை வரட்டும் நானே ரெண்டுல ஒன்னு கேட்டுப்பிடறேன்."

"கெடுத்தே போ...! மோகன் நீ நினைக்கற மாதிரி பையனில்ல. இப்ப எதையாவது கேட்டு வெச்சு மொத்த காரியத்தையும் கெடுத்துக் காதே."

''அப்படின்னா?"

"கனகா இங்க இருக்காலியா... எல்லாத்தையும் அவ பாத்துப்பான்னு சொல்றேன்."

இருவரும் பேசிக் கொண்டிருக்க, கனகா மோகன்ராமின் புத்தகப் பெட்டியை ஆராய்ந்து கொண்டிருந்தாள். கட்டுக்கட்டாய் சட்டப் புத்தகம். தலையைச் சுற்றும் ஆங்கில அணிவகுப்பாக... நடுநடுவே திருக்குறள் கதை, திருவாசக விளக்கம் என்று ஆன்மீக புதையல்களும்...! ஒரு பதவிசான பைண்டாக பொன்னியின் செல்வன் கூட தட்டுப்படுகிறது.

''ஓ... இந்தப் புத்தகம் இல்லாத வீடும் இல்லையோ?' நினைப்போடு பிரிக்கிறாள். ஏற்கெனவே ஒருமுறை படித்திருக்கிறாள். இரண்டாம் முறை படிக்கத் தூண்டுகிறது அது. பக்கங்களை மருதாணி விரல்கள் நிரடுகின்றன. நடுவில் ஒரு குட்டி டைரி! வழுக்கிக் கொண்டு

## மீசைக்காரன்



''சந்தனக் கடத்தல் வீரப்பன்கிட்ட இருந்து ஆடியோ டேப் வந்திருக்கா! என்ன சொல்றான்?''

''அத்தனை சந்தனமரமும் என்னோட கஸ்டடியில இருந்திருந்தா இப்படி வீணா எரிஞ்சி போயிருக்குமான்னு கேட்கு றான்!''

– கே.அனிதா

புத்தக அடைவு நீங்கி அவள் மடியில் விழு கிறது. எடுத்து விரித்தால் அதில் மோகனின் கையெழுத்தில் சில வரிகள்.

'வீட்டுக்கு வந்தவளிடம் நிறைய பேச ஆசைதான். ஆனாலும் என்னால் முடிய வில்லை. ஏன் என்று தெரியவில்லை. இது காதலிக்கும் வயதுதான். ஆயினும் எந்த அடித் தளம் இருக்கிறது எனக்கு? முதலில் அதை அடைய வேண்டும். பிறகுதான் காதல்! நிச்ச யம் அதுவரை அவள் காத்திருப்பாள். ஊனப் பட்டு நிற்கும் அவளுக்கு என்னை விட்டாலும் வேறு யார் இருக்கிறார்கள்?'

படித்த நொடியில் கனகா ஆகாயத்தில் மிதக்க ஆரம்பித்து விட்டாள். தேகம் மேக மாகிறது. மனது பறவையாகிறது. ஓ.. இவன் தான் எத்தனை நேர்த்தியான மனிதன்? நினைத்த நொடியில் என்ன வேண்டுமா னாலும் என்னை செய்யலாம் என்கின்றபோதி லும் தன்னைத்தானே என்னமாய் செலுத்திக் கொள்கிறான்!

அந்த டயரியை ஞாபகமாக பொன்னியின் செல்வனுக்குள் அடக்குகிறாள். மூடி வைக் கிறாள்.

சற்று சோபையிழந்தது போலிருந்தவள் முகத்தில் இப்பொழுது ஜாஜ்வல்யம் தெரிவது கண்டு நரசிம்மனுக்கே மிகுந்த ஆச்சரியம்!

**கா**லை இப்பொழுது சுசிலாவால் நன்கு ஊன முடிகிறது. கைகளையும் அசைக்க முடிகிறது. அடிபட்டு இன்றுடன் ஒரு மாதம் தான் கழிந்திருக்கிறது. அதற்குள்ளேயே இத் தனை மாற்றம்.

அவளை விடவும் அதிக ஆச்சரியம் அந்த ஆசிரமத்து சிலம்பாட்டக் கூட்டத்துக்குதான். ஒரு வருஷம் ஆனாலும் தேறுவது கடினம் என்ற கேஸ் இப்படி இத்தனை சீக்கிரம் குண வயப்பட்டால் யாரைத்தான் ஆச்சரியம் தாளிக்காது?

அங்கும் இங்கும் தாவி, விஷயம் ஜவஹரின் காதுக்குப் போகிறது. ஜி.எச்சில் தாமு இன்னும் குணமாகவில்லை. அரை சதம் கூட காயம் ஆறியிருக்கவில்லை. ஆனால் சுசீலா எழுந்து நிற்கிறாள், நடக்கிறாள் என்றால் நம்பவா முடிகிறது?

போய்த்தான் பார்த்து விடுவோமே... அவனது பஜாஜில் ஏறி, சிட்டாய்ப் பறந்து ஆசிரமத்தை எட்டுகிறான். பகல் பொழுது வறட்டு வெயிலின் ஊமைப் பொசுங்கலில் பிடறியில் எல்லாம் வியர்க்கிறது.

**ஆ**சிரமத்தில் ஆலமரத்தடி வேர்த் தண்டை ஒட்டி ஐந்தடி உயரத்தில் ஆஞ்சநேய ஸ்வாமி விக்கிரகம் ஒன்று நின்ற நிலையில். அதன்முன் தேசிகாச்சாரி அமர்ந்து நிஷ்டை புரிகின்ற மாதிரி தெரிகிறது. உள்ளே மரக்கட் டிலில் கால் கைகளை நீட்டி மடக்கிக் கொண்டு பயிற்சி செய்தபடி இருக்கிறாள் சுசீலா. மற்றபடி யாரையுமே காணவில்லை.

ஒரு சிகரெட்டைப் பற்றவைத்துக் கொண்டு உள்ளே நுழைகிறான் ஜவஹர். அவன் வருவதற்கு முன்பே அவன் விட்ட புகை அவள் வரை சென்று நிமிர்த்துகிறது.

"என்ன பாக்கறே? நான்தான். பாம்பை அரைகுறையா அடிச்சுட்டு விட்டா, திரும்ப பழிவாங்கக் கிளம்பி வரும்னு சொல்லுவாங்க. உன் விஷயத்துலயும் அது நிஜம்தான்..." என்று சிகரெட்டை திரும்பவும் ஒரு இழுப்பு.

சுசீலா அந்த நிலையிலும் அவனை முறைக் கிறாள்.

"என்னடி.. பதிவிரதை மாதிரி பார்க்கிறே? உன்னை கவனிக்கறதுக்கு முந்தி அந்தக் கிழவனை கவனிக்கணும். அப்பத்தான்

சரிப்படும்..."

"அப்ப கவனி..." - பின்புறமிருந்து உடனடியாக பதில்- தேசிகாச்சாரிதான்.

"ஏய்யா உனக்கென்ன கிறுக்கா...? இவளைப் போய் ஆசிரமத்துல வெச்சிருக்கியே..." புகையோடு முன் சென்று மார்பு நிமிர்த்து பவன் எதிரில் நின்று தேசிகாச்சாரி சலனமேயின்றிப் பார்க்கிறார்.

"ஆமா! நீ என்ன பெரிய ஆர்த்தோவா? கட்டு போட்டு வைத்யமெல்லாம் பாக்கறே? பட்டு நெஞ்சு முடியாம போய் ஊரை விட்டே ஒதுங்கிட்டவன் நீ. இங்க என்னடான்னா சிலம்பம், தியானம்னு ஏதோ கலந்து விட்டுக்கிட்டிருந்தே. போகட்டும்னு விட்டா டாக்டர் வேலை எல்லாம் பாக்கறியே. ஆசிரமம் இருக்கணுமா? இல்லை அது எரியணுமா?"

திமிர்ப் பேச்சோடு தேசிகாச்சாரியை சிகரெட் புகையால் மூடுகிறான். அவரிடம் சலனமேயில்லை. எரிச்சல் பீறிடுகிறது ஜவஹரிடம்.

"பேசறது காதுல விழுதுதானே... கல்லு மாதிரி நின்னா என்ன அர்த்தம்?" - பேச்சின் எச்சில் அவர் முகத்தில் படுகிறது. மெல்ல சலனப்பட ஆரம்பிக்கிறார் தேசிகாச்சாரி.

"பேசிட்டியா?" கேட்கிறார்.

"இவனை முதல்ல வெளிய இழுத்து விடு. இல்ல நிறைய பேசுவேன்."

"விட மாட்டேன். நீ பேசு.."

"வேண்டாம். ராத்திரியோட ராத்திரியா இந்த ஆசிரமத்தையே சாம்பலாக்கிடுவேன்."

"ஏன் இப்பவே ஆக்கேன் பாப்போம்..." -

அவர் பேச்சு சவாலா? இல்லை சாதாரணரகமா என்று தெரியவில்லை. ஆனால் ஒரு தீர்மானம் தெரிகிறது. ஜவஹருக்குக் குழப்புகிறது. தடுமாற்றம் தொற்றுகிறது. பேண்ட் பாக்கெட்டில் கைவிட்டு சிகார் லைட்டை எடுக்கிறான். சொடுக்கி தீச்சுடரும் பிடிக்கிறான்.

எரியப் போவது ஆஸ்ரமமா? இல்லை...

தேசிகாச்சாரியிடம் இப்போது ஒரு புயல் வேக மாற்றம். கண்களிரண்டில் கோவைச் சிவப்பு. அதீத காற்றை உள்ளிழுக்கும் உதட்டுச் சூம்பல். புடைத்த கன்னம்; என்று உருமாறுகிறார்! இரு கைகளை அவன் எதிரே நீட்டி அவன் இரு பக்கப் பிடரியிலும் தட்டப் போக அவன் அப்படியே ஸ்தம்பிக்கிறான். மரம் போலக் கீழே விழுகிறான்.

வினாடியும் தாமதிக்காமல் அருகில் இருந்த பானைத் தண்ணீரை எடுத்து அவன் மேல் அபிஷேகிக்கிறார். அவன் உதறலான உதறு உதறுகிறான். ஆனால் வாய் மட்டும் கோணிக் கொண்டு பேச்சை இழந்து விட்டிருந்தது!

"தேசிகனுக்கு வர்மம் தெரியும்கறது உனக்கு தெரியாதா? அறிவு கெட்டவனே...!" - கேட்டபடியே கழுத்துப்புரம் மயில்துத்த தைலம் போட்டு நீவி விடுகிறான் வெட்டால் பாவா! அருகிலேயே பம்பாய் மணியம் - ஜவஹரின் அப்பா.

"வெட்டால்... முதல்ல அவனைப் பேச வை - பிறகு திட்டலாம்..."

"என்னத்த போ... எதிரியோட பலம் தெரிஞ்சு மோதணும். இப்படியா போய்த் தலையக் கொடுத்து மாட்டிக்கறது...!"

"எல்லாம் உதைபட உதைபட, தானா வந்துட்டுப் போகுது..."

"அதுக்குன்னு இப்படியா. நான் இருக்கறதால பேச வெச்சுடுவேன். இதே இல்லைன்னா..."

"தா... அஞ்சு நிமிஷம் முந்தி பொறந்திருந்தா நான் எம்ஜிஆர்ங்கற மாதிரி எதையாவது

## அம்மா



"பிரமாதம்கிறியே! எது?"

"பட்ஜெட்டில் துண்டு விழும் 500 கோடியை சமாளிக்க முன்னாள் முதல்வரிடம் கடன் கேட்கும் திட்டம் எதுவும் அரசுக்கு உண்டான்னு நம்ம எம்.எல்.ஏ. சட்ட சபையில் கேட்டதுதான்."

—உ.ராஜாஜி

## பாஸிடிவ்



''எதையுமே பாஸிடிவாக நினைன்னு சொன்னா அதுக்குப் போய் அடிக்கிறியே?''

''அதற்காக, ஹெச்.ஐ.வி. இருக்கான்னு, ரத்தப் பரி சோதனை ரிசல்ட்டுக்குக் காத் திருக்கும்போது இப்படிச் சொன்னால்?''

– குல்லூ

பேசாதே! ஆமா நான் ஒண்ணு கேக்கணும் உன் கிட்டே. இந்த வர்மம்லாம் நிஜமா?''

''அப்படின்னா...?''

''ஏய்... இதெல்லாம் சுத்த சினிமா சமாசாரம்னு நினைச்சுகிட்டிருக்கேன் நான்.''

''போய் வாயைக் கழுவு. பார்வைக் கட்டு, ஒத்தக்கால் கட்டு, நயனக்கட்டு, நாபிக் கட்டுன்னு நூறு ஜாதி இருக்கு இதுல. நம்ம கிழ டுங்க பல விஷயங்களைச் சொல்லிக் கொடுக்காமலே செத்துட்டாங்க.''

''அப்ப தேசிக்கு மட்டும் எப்படி தெரிய வந்துச்சு?''

''நானறிய ஒரு பத்து வரு ஷம் வடக்க இமயமலைப் பக்கம் போன பிறகுதான் தேசிகனுக்கு இது வசப்பட் டிருக்கு. எந்த சாமியார் கால் கைய அமுக்கிவிட்டு கத்துக்கிட்டு வந்தானோ?''

''உனக்கு எப்படித் தெரி யும்?''

''எனக்கு கூட்டத் தெரி யாது. அவுக்கத்தான் தெரி யும். அதைக் கூட தேசிகன் கிட்டதான் கத்துக்கிட் டேன். ஓரளவு கத்துக்கிட்ட நிலையில சாரயம் பக்கம் போச்சு புத்தி. தேசிகன் விரட்டி விட்டுட்டான்.''

பேச்சோடு பேச்சாக கை நீவியதில் ஓரளவு குணம் தெரிகிறது ஜவஹரிடம். அப்பாவை 'அவ்வா' என்று அழைக்க முடிகிறது.

''இரண்டு நாள் தொடர்ந்து நீவி விடணும். எட்டிச் சாறையும் நாக்குல தடவிக்கணும். கசப்பு தாளாம கழுத்து நரம்பெல்லாம் பாம்பா நெளியும்போது மெள்ள பிடிதளர்ந்து, ரத்தம் பாய்ஞ்சு, பேச்சு வரும். இனியாவது ஆளறிஞ்சு நடந்துக்க சொல் உன் மகனை...''

வெட்டால் பாவா கிளம்பி விட்டான். மருத்துவ கைமாறாக சாராயத்தை ஒரு மடக்கு ஊற்றிக் கொள்கிறான். தொட்டுக் கொள்ள மேட்டூர்க் கெண்டை மீன் ஊறுகாய்!

உஸ்ஸ்ஸ்...!

**மோ**கன்ராமைச் செய்தி அடைந்த போது, முதலில் அவனால் நம்பவே முடிய வில்லை. கூடவே தேசிகாச்சாரியைப் பார்த் துப் பேச வேண்டிய ஒரு ஆசையும் துளிர் விட்டது.

புத்தகத்தை மூடிவிட்டுக் கிளம்பலாம் என உத் தேசித்தபோது ரேஷன் கார்டும் பையுமாக எதிரில் வருகிறாள் மகாலட்சுமி. ''மோகன் அரிசியும் சர்க்கரை யும் போட்றாங்களாம்...'' என்று மட்டும் சொல்கிறாள்.

''வேண்டாம்மா'' என்று சொல்லப் பார்க்கிறான். முடியாமல் தயங்கியபடியே பையையும் கார்டையும் வாங்குபவன் கனகாவைக் கவனிக்கிறான்.

''அத்தான் நான் வேணா போய் வாங்கிட்டு வரட் டுமா?'' – கேட்கிறாள்.

''சேச்சே... நான் போறேன் நீ எதுக்கு... பாவம்!''

''அதான் இல்லை. நான் போனா லைன்ல நிக்க வேண்டாம்ல. இந்த நொண் டிக்கால் இதுக்காவது உப யோகப்படட்டுமே...''

''உனக்கென்னம்மா தலை எழுத்து...'' என்று மோகன் ராமைத் தள்ளி விடுகிறாள் மகாலட்சுமி.

''ரேஷன் கடைக்குப் போறதுல கௌரவக் குறைச் சல் இல்லை அத்தை.''

''அதுக்குச் சொல்லலைம்மா... அவனுங்க ஆளுக்கு தகுந்த மாதிரி அளந்து போடுவாங்க. மோகனைப் பார்த்தா கொஞ்சம் பயப்படு வாங்க...''

''அதனாலேயே சண்டையும் வரும். கட்டி உருண்டிருக்கேன். அவங்களுக்கு ஒரு கிலோக்கு நூறு கிராமாவது திருடணும். இந்த ஏழைகிட்ட திருடற கொடுமை இருக்கே...''

''டேய் கதை அப்பறமா பேசு. இப்பக் கிளம்பு. நீ வந்துதான் உலை வைக்கணும்.''

கனகாவுக்கு அப்பொழுதுதான் அந்த வீட்டு நிலை ஒரு இடி இடித்தது. அப்பாவும் போகும் போது பணம் கொடுத்து விட்டுப் போனதும் நினைவுக்கு வந்தது.

''அத்தே...''

''என்ன கனகா?''

''அப்பா பணம் கொடுத்திருக்கார். அதுல நல்ல அரிசி வாங்கிட்டு வரலாமே...'' என்று சொல்லி முடிக்குமுன் வாசற்படி கடந்து விட்டான் மோகன்ராம்.

''நல்லவேளை... அவன் இருக்கும் போது பேசலை நீ. அவன் காதுல விழுந்திருந்தா

விட்டத்துக்கும் கூரைக்கும் எகிறிக் குதிச்சிருப்பான்."

"நமக்குள்ள என்ன அத்தை..."

"தோ பார் கனகா... பெத்தவ என் கிட்டையே அவன் சில விஷயங்கள்ள தன்மானம் பாக்கறவன். நீ நேத்து வந்தவ... அதோட உழைச்சுதான் சாப்பிடணும்கறதெல்லாம் அவன்கிட்ட சின்ன வயசுலையே வந்துட்ட விஷயம்மா."

மகாவின் பேச்சுக்குத் தோதாக எதிரில் புதிய பட்டுத் தறி நெசவுத் திண்ணையில் இழுத்துக் கட்டப்பட்டு கிடக்கிறது.

ராத்திரியெல்லாம் தூங்காமல் அவனும் முகுந்தனும் பிசிறு நீக்கி இருக்கின்றனர் - கெண்டையைத் தயார்ப்படுத்தியிருக்கின்றனர். தறிமேடையைப் பார்த்தால் தெரிகிறது.

இதற்கெல்லாம் பணத்துக்கு எங்கு போனான்...?

ரேஷன் கடையில் கூட்டம் கட்டி ஏறிக்கொண்டிருந்தது. கலப்படமில்லாத இந்தியா கண் எதிரில் தெரிகிறது. காரும் பங்களாவும் காஷ்மீரும் ஊட்டியும் கூட இந்திய அடக்கம் தான். ஆனால் தூக்கலாய்த் தெரிவது சோற்றுக் கவளமாகத்தானே இருக்கிறது?

உள்ளே எடை போடுவது என்கிற பெயரில் ஒரு அப்பட்டமான பகல் கொள்ளை. அரிசியும் கூட களத்து மேட்டில் காக்கை குருவி கூட பொறுக்கி உண்ணாத ரகத்தில்...

மோகன்ராம் மெள்ள உணர்ச்சிவயப்பட ஆரம்பிக்கிறான். எவ்வளவுதான் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ளப் பார்த்தும் முடியாமல் போகிறான்.

பொடியன் ஒருவன் சர்க்கரை வாங்கும்போது தராசு மின்னல் வேகம் எடுக்கிறது. சரியான சில்லறை தராத ஒரே காரணத்துக்காகவே திருப்பி அனுப்பப்படுகிறாள் கிழவி ஒருத்தி. ஐந்து பைசா பத்து பைசாவையெல்லாம் நாங்கள் காசாகவே நினைப்பதில்லை என்கிற அலட்சியத்தில் பில் போடுபவன்.

"ஏம்ப்பா மோகன்..." - ஒரு தெரிந்தவனிடம் அழைப்பு.

"சாராயம் விக்கறாங்கன்னு சண்டை போட்டியே, இந்த திருட்டுப் பசங்களுக்கு எதிரா எப்ப போடப் போறே?" - கேட்கிறான்.

"ஆமா யாராச்சும் நமக்காக சண்டை போடணும். ஆனா நாம மட்டும் வேடிக்கை பாக்கணும்" - அதே கூட்டத்திடம் இருந்து சரியான பதில் கூட...

"அவங்க என்ன பண்ணுவாங்க... மந்திரி வரைக்கும் கப்பம் கட்டி ஆகணுமில்ல..." கூட்டத்தில் ஒரு மிதவாதி கூட தெரிகிறான். அவனை முறைக்கிறது மோகன்ராமின் பார்வை.

- தணிக்கிற மாதிரி துணிப்பையுடன் யார் அது? பானுவா?

பெண்களுக்கான வரிசையில் வந்து நிற்பவள் எதிர்ச்சாரியில் மோகன்ராமைப் பார்த்து, அதிகாலையில் ஆற்றில் முழுக்குப் போட்டுப் பெறும் பரவசத்தைப் பெறுகிறாள்.

"ஊட்டுக்குள்ளியே சினிமா வந்துருச்சு. எங்கியோ பந்து விளையாட்றாங்க. ராட்டை சுத்திகிட்டே பாக்க முடியுது. வயர் இல்லாம டெலிபோனாம்! கொல்லைக்கு போய்க்கிட்டே கூட பேசலாமாம்! இன்சாட்டு, செல்லுலர்னு தஸ்புஸ்னு என்னென்னவோ எழவு.... ஆனா இந்த அரிசி சர்க்கரையை ஒழுங்கான எடைல பாக்கெட்ல போட்டு விக்க மட்டும் நம்மவங்களால முடிய மாட்டேங்குது" ரசனையோடு சலித்துக் கொள்ளத் தெரிகிறது ஒரு பொது ஜனத்துக்கு.

அந்தக் கேள்வியின் பொருள் மோகன் ராமைப் புரட்டி எடுக்க ஆரம்பிக்கிறது.

மந்திரியைப் பார்த்து மனு கொடுக்கும் ஆசைவசப்படுகிறான். கூடவே அந்த மனுத் தானாலேயே மந்திரியின் ஆபீஸ் வாசலில் கடலைப் பொறி கட்டப்பட்டு நரப்படுவதாகவும் நினைத்துக் கொள்கிறான்.

மனுவெல்லாம் மகா ஓல்டு ஃபேஷன்!

ஒரே வழி அதுதான்.... யோசித்து முடித்த நொடியில் ரேஷன் கடையின் கவுண்ட்டர் அடைக்கப்படுகிறது.

சரக்கு தீர்ந்துடுச்சாம்!

(தொடரும்)


**டும்!டும்!**



''சார் போன பந்தியிலே சாப்பிட்டீங்க போலிருக்கே?''

''ஆமாய்யா! ஞாபக சக்தி உனக்கு அதிகம்னா, ஜீரண சக்தி எனக்கு அதிகம்! கண்டுக்காதே!''

– பென்னை சி. முருகன்




'வாழ்க்கையின் சுவாரஸ்ய
பதில் இருக்கிறது. ஒளிரும் புன்
பட்டுப்பூச்சி, கண்சிமிட்டும் நட்ச
கும் தென்றல் - இதில் ஏதா
நிமிடம் ஆழ்ந்து அனுபவித்தி
மும் சோகமும் விரக்தியும்
விட்டுத்தளளி,

சுப. சொக்கலிங்கம்,
மதுரை.

வாழ்க்கையின் சுவாரஸ்யம், அ
ஒளிரும் புன்னகை, சிறகடிக்கும்
நட்சத்திரங்கள், கைகுலுக்கும்
ஒன்றை அரை நிமிடம் ஆழ்ந்
துக்கமும் சோகமும் விரக்தி
இருக்கிறது. விட்டுத்தள்ளி,
பாருங்கள்! வயது குறை
வியப்பு

ஏ.ஆர். ஷண்முகப்பிரியன்,
கும்பகோணம்.

என். ரவீந்திரன்,
திண்டிவனம்.

'வாழ்க்கையின் சுவாரஸ்யம், அதை அனுபவிப்பதில் இருக்கிறது. ஒளிரும் புன்னகை, சிறகடிக்கும் பட்டுப்பூச்சி, கண் சிமிட்டும் நட்சத்திரங்கள், கைகுலுக்கும் தென்றல் - இதில் ஏதாவது ஒன்றை அரை நிமிடம் ஆழ்ந்து அனுபவித்திருக்கிறீர்களா? துக்கமும் சோகமும் விரக்தியும் வேதனையும் இருக்கவே இருக்கிறது. விட்டுத்தள்ளி, ஓர் அரை நிமிஷம் 'வாழ்ந்து' பாருங்கள்! வயது குறைந்து கொண்டே போவதை வியப்புடன் காண்பீர்கள்!'

…தை அனுபவி…
…, சிறகடிக்…
…ங்கள், கைகு…
ஒன்றை அ…
…றீர்களா? து…
…னையும் இருக்…

'வாழ்க்கையின் சுவாரஸ்யம், அதை
அனுபவிப்பதில் இருக்கிறது. ஒளிரும் புன்னகை
சிறகடிக்கும் பட்டுப்பூச்சி, கண் சிமிட்டும் நட்சத்
திரங்கள், கைகுலுக்கும் தென்றல் – இதில்
ஏதாவது ஒன்றை அரை நிமிடம் ஆழ்ந்து அனு
பவித்திருக்கிறீர்களா? துக்கமும் சோகமும்
விரக்தியும் வேதனையும் இருக்கவே இருக்கிறது
விட்டுத்தள்ளி, ஓர் அரை நிமிஷம் 'வாழ்ந்து'
பாருங்கள்! வயது குறைந்து கொண்டே
… காண்பீர்கள்!'

**தளபதி கோபாலகிருட்டிணன்,**
**சிதம்பரம்.**

…பவிப்பதில் இருக்கிறது
…ப்பூச்சி, கண் சிமிட்டும்
…ல் – இதில் ஏதாவது
…பவித்திருக்கிறீர்களா?
…வேதனையும் இருக்கவே
…அரை நிமிஷம் 'வாழ்ந்து
…கொண்டே போவதை

**கே. நாராயணமூர்த்தி,**
**பாண்டிச்சேரி.**

'வாழ்க்கையின் சுவாரஸ்யம், அதை அனுபவிப்பதில்
…கிறது. ஒளிரும் புன்னகை, சிறகடிக்கும் பட்டுப்பூச்சி, கண்
…டும் நட்சத்திரங்கள், கைகுலுக்கும் தென்றல் – இதில் ஏதாவது
…றை அரை நிமிடம் ஆழ்ந்து அனுபவித்திருக்கிறீர்களா? துக்க…
…சோகமும் விரக்தியும் வேதனையும் இருக்கவே இருக்கிறது.
விட்டுத்தள்ளி, ஓர் அரை நிமிஷம் 'வாழ்ந்து' பாருங்கள்! வயது
…றைந்து கொண்டே போவ… …ன் காண்பீர்கள்!'

**எஸ். சுகன்யா,**
**தஞ்சாவூர் - 4.**

…ன் சுவாரஸ்யம் அதை
…இருக்கிறது. ஒளிரும்
…டிக்கும் பட்டுப்பூச்சி, கண்
…திரங்கள், கைகுலுக்கும்
… ஏதாவது ஒன்றை
…ஆழ்ந்து அனுபவித்
… துக்கமும் சோகமும்
…தனையும் இருக்கவே
…விட்டுத்தள்ளி, ஓர் அரை
…ந்து' பாருங்கள்! வயது
…ண்டே போவதை …

'வாழ்க்கையின் சுவாரஸ்யம்
அதை அனுபவிப்பதில் இருக்கிறது.
ஒளிரும் புன்னகை,
சிறகடிக்கும் பட்டுப்பூச்சி,
கண் சிமிட்டும் நட்சத்திரங்கள்,
கை குலுக்கும் தென்றல் –
இதில் ஏதாவது ஒன்றை அரை நிமிடம்
ஆழ்ந்து அனுபவித்திருக்கிறீர்களா?
துக்கமும், சோகமும், விரக்தியும், வேதனை…
இருக்கவே இருக்கிற…
விட்டுத்த…

**ஆர். சுவாமிநாதன்,**
**திருச்சி - 14.**

வாழ்க்கையின் சுவாரஸ்யம், அதை
அனுபவிப்பதில் இருக்கிறது. ஒளிரும்
புன்னகை. சிறகடிக்கும் பட்டுப்பூச்…
கண் சிமிட்டும் நட்சத்திரங்கள், …
குலுக்கும் தென்றல் – இதில் ஏதா…
ஒன்றை அரை நிமிடம் ஆழ்ந்து …
த்திருக்கிறீர்களா? துக்கமும் சோ…
விரக்தியும் வேதனையும் இரு…
…ளி, ஓர்…
…ங்கள்!…

**ஜி. துளசி,**
**சிதம்பரம்.**

'வாழ்க்கையின் சுவாரஸ்யம், அதை
அனுபவிப்பதில் இருக்கிறது. ஒளிரும்
புன்னகை, சிறகடிக்கும் பட்டுப்பூச்சி, க…
சிமிட்டும் நட்சத்திரங்கள், கைகுலுக்கு…
தென்றல் – இதில் ஏதாவது ஒன்…
அரை நிமிடம் ஆழ்ந்து அனுபவித்தி…
கிறீர்களா? துக்கமும் சோகமும் வி…
யும் வேதனையும் இருக்கவே இரு…

**ஞா.இராசமாணிக்கம்,**
**கோவில்பட்டி.**

# சரியான தீர்ப்பு!

✉ தங்கபாலுவின் செயல் 'டணால் டணால்'தான்! அவருடைய விருப்பம் காங்கிரஸ் கட்சிக்கு "டொனால்ட்" போல் ஆகவேண்டும் என்பது! ஆனால் அவர் "போல்டு"தான் ஆவார் என்பதை போல்டாகச் சொல்லலாம்!
பு.புளியம்பட்டி, அ. கிருஷ்ணகுமார்.

✉ 'டணால் தங்கபாலு' - அப்பப்பா! எப்படிப்பட்ட வார்த்தைகள்! ஆயிரம் பக்கம் எழுதினாலும் விளக்க முடியாததை இரண்டே வார்த்தைகளில் படு பிரமாதமாய்க் காட்டி விட்டீர்கள். காதில் பூவுக்கு பதில் இரட்டை இலை. சூப்பர் ஐடியா!
திருப்பாப்புலியூர், வசந்தி ரவிச்சந்திரன்.

✉ சமூக, பொருளாதார ரீதியில் பலவீனமாக இருப்பவர்களைப் பணத்தால் மயக்கி விலைக்கு வாங்கிவிடலாம் என்ற கயமை எண்ணத்துடன் திரியும் அரசியல்வாதிகளுக்கு, பாண்டிச்சேரி எம்.எல்.ஏ. கந்தசாமி சரியான சவுக்கடி கொடுத்திருக்கிறார்.
கோபாலபுரம், செ. கிருஷ்ணசாமி.

✉ மனித வாழ்க்கையே நம்ம கையில்தான் இருக்கிறது. ஒருவரை ஒருவர் சார்ந்திருப்பதே நல்ல குடும்பம் என உணர்த்தியது 'நம்பிக்கை' சிறுகதை.
குமராட்சி, எம். பிரபு.

வட்ட மேஜை

✉ ஏவி.எம். பொன் விழா பற்றிய கட்டுரையைப் படித்ததும் நேரில் விழாவில் கலந்து கொண்ட திருப்தி ஏற்பட்டது.
சிதம்பரம், ஸ்ரீவித்யா காளிதாஸ்.

✉ சேஷனைப் பற்றி இன்று வரை மிக உயர்வான அபிப்பிராயம் கொண்டிருந்தேன். ஆனால் 'தேசபக்தி டிரஸ்ட்' சம்பந்தப்பட்ட செய்திகள் (சந்திராசாமியிடம் வைர மோதிரம்..) அவர் அப்படி ஒன்றும் பிரமாதமானவர் அல்ல என்று தெரிவித்து விட்டன!
வேலூர் - 6, எல். கோபாலகிருஷ்ணன்.

✉ பிச்சை எடுப்பதற்காக வளைகுடா நாடுகளுக்கு அனுப்பப்படும் ஏழை முஸ்லீம்சிறார்கள் தொடர்பான திடுக்கிடும் தகவல்களைப் படித்தபோது நெஞ்சு கனத்தது. "இந்த ஈனச் செயலுக்கு இந்திய அரசே முழுப் பொறுப்பேற்க வேண்டும்" எனும் ஜவாஹிருல்லாஹ்வின் கூற்றிலும் நியாயம் இருக்கிறது!
கும்பகோணம், கே. என். பாலகிருஷ்ணன்.

✉ வெடிக்காத குண்டுகள் விடுக்கும் எச்சரிக்கை தலையங்கம் அபாரம். வருமுன் காக்கும் புலனாய்வு முயற்சிகள்தான் முக்கியம் என்ற வரிகள் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியவை.
ஈரோடு, டி. சௌந்தர்ராஜன்.

✉ 'ஞானோதயம்' கதையில் காதல், ஹார்மோன் சமாசாரம் என அலட்சியமாகச் சொல்லி விட்டாலும் அதை அழகாகக் கையாண்டுள்ளார் சுஜாதா.
திருச்சி - 8, 'ஸமயன்'.

✉ கற்பனையாயிருந்தபோதிலும் 'கௌடாவின் ஸ்டிரிப் டீஸ்!' வெகு யதார்த்தமாக, நகைச்சுவையுடன் மிளிர்ந்தது. செம்பியனுக்குப் பாராட்டுக்கள்!
நெய்வேலி, எஸ். இந்துமதி.

✉ 'இந்து கோவில்களில் மதநம்பிக்கை உள்ளவர்களை அறங்காவலர்களாக நியமிக்க வேண்டும்' எனும் தீர்ப்பு பற்றி, 'மதநம்பிக்கை மட்டுமே தகுதியாகாது. நேர்மையும் அவசியம்' எனத் தராசு பதிலில் குறிப்பிடப்பட்டது சமுதாயம் தழுவிய சரியான தீர்ப்பு!
பொறையாறு, கானா. கணேசன்.

## பரிசுக் கடிதம்!

✉ வருவாயில் இல்லாடியான உடன்பிறப்பு கவுன்சிலர் மீது தயவுதாட்சண்யமின்றி நடவடிக்கை எடுப்பதுதான் நேர்மையான முதல்வருக்கு அழகு. 'வெறும் எச்சரிக்கை' செய்வதென்றால் அது வியாபாரிகளை அப்போதைக்கு திருப்தி செய்யும் கண்துடைப்பு வேலைதானே?

பத்திரிகைகளை ஊன்றிப் படித்தால், உப்பு சப்பின்றி எச்சரிக்கை விடுத்துக் கொண்டிருப்பது அதிகாரங்கள் படைத்த முதல்வருக்கு பொழுதுபோக்காக இருப்பது தெரியவரும்.

கள்ளச் சாராய வியாபாரிகளுக்கு உடந்தையாக இருக்கும் போலீசாருக்கு எச்சரிக்கை.

பார் வைத்து மது வியாபாரம் செய்யும் வியாபாரிகளுக்கு எச்சரிக்கை.

ரேஷன் கடைகளில் ஊழல் செய்யும் ஊழியர்களுக்கு எச்சரிக்கை.


ஊழலுக்குத் துணைபோகும் ஐ.ஏ.எஸ். அதிகாரிகளுக்கு எச்சரிக்கை.

நிர்வாக ரீதியான விதிமுறைகளின்படி தயவுதாட்சண்யமின்றி நடவடிக்கை எடுக்க முதல்வரை எது தடுக்கிறது?
சென்னை - 13, எஸ். ராமமூர்த்தி.

# ஆஹா வந்திடுச்சு.....!

**"சிறப்புத் தள்ளுபடி விற்பனை"**
**06.04.97 முதல் 12.04.97 வரை**

**ஏழுதினங்கள் மட்டுமே!**
**நா வாங்கிட்டேன்பா.....! நீ போய் வாங்கலே.... இச்சலுகை மேற்கு மாம்பலத்தில் மட்டும் தானாம்....!**



நிறைய டிசைன் வந்திருக்கு ஆனா பார்க்க முடியலே! தேவைக்கு அள்ளிட்டு வந்திட்டேன் லாபம்தானே.....!

நேரம் : காலை 10.00 முதல் இரவு 9.00 மணி வரை.
உணவு இடைவேளை இல்லை!




உயர்ரக மதுரை சுங்குடி புடவைகளின் விற்பனையாளர்கள்.

## RAMACHANDRA SAREES

(மதுரை சுங்குடி புடவைகளின் உலகம்)
H.O. No. 37-B, Arya Gowder Road, Postal Colony Bus Stop,
West Mambalam, Chennai - 33. Ph : 4896532




## ஸ்ரீராமஜெயம்

### ஓம் சாயிராம்

கோயில்கள் நிறைந்த பகுதியாக மாறிவரும் சென்னை நங்கைநல்லூர், தெய்வத் திருவருளால் நாளுக்கு நாள் அன்பர்களை ஈர்த்து வருகிறது. கருணையே உருவமாக கலியுகத்தில் பிரத்யட்ச தெய்வமாக மக்களுக்கு அருள்பாலித்து வரும் ஸ்ரீ சீரடி சாயிநாதனுக்கு அந்தப் புண்ணிய பூமியில் ஆலயம் நிறுவ ஏற்பாடு செய்து வருகிறோம். வேண்டியவர்களுக்கு வேண்டியதைத் தரும் சாயிநாதனின் பணியில் அன்பர்கள் கலந்து கொண்டு அருள்பெற வேண்டுகிறோம்.

நங்கைநல்லூரில் 32 அடி ஆஞ்சநேயர் கோயிலுக்கு அருகாமையில் ரூ. 50 லட்சம் செலவில் இக்கோயில் நிர்மாணிக்கப்படவுள்ளது. பக்தகோடிகள் தங்களாலியன்ற பொருளுதவியளித்து ஸ்ரீ சீரடி சாயிபாபாவின் அருளையும் ஆசியையும் பெற வேண்டுகிறோம்.

**பொருளுதவி அனுப்ப வேண்டிய முகவரி :**
**என். கோபாலன்**
**ஸ்ரீ சீரடி சாயி பக்த சமாஜனம் டிரஸ்ட் (பதிவு),**
**கதவு எண் 1, பிளாட் எண் 3, 8 வது தெரு,**
**ராம் நகர், நங்கைநல்லூர், சென்னை - 600 061.**



• எப்போதும் தப்பாது!

# பாரசூட் காதலர்!

ஏப்ரல் மாதம் 14, 15 தேதிகளில் பெங்களூரில் இருக்கும் நமது ராணுவ தரைப் படையின் பாரசூட் ரெஜிமெண்ட் பக்கம் போக அழைப்பு இருந்தால் கொடுத்து வைத்தவர்கள் என்று அர்த்தம். அந்த தினங்களில் அங்கே ரீ யூனியன்.

அப்படி என்றால்?

பாரசூட் வீரர்களாக இருந்து (பாரட்ரூப்பர்) ஓய்வு பெற்றவர்களும், இப்போது பணியில் இருப்போரும் குடும்பங்களோடு சந்தித்து மகிழும் நிகழ்ச்சி.

தாம்பரம் ராணுவ மைதானத்தில் இந்த பாரசூட் வீரர்கள் தங்கள் சாகசங்களைப் பொதுமக்கள் முன்னிலையில் ஆண்டுதோறும் நடத்துவதும் அது மீடியாவில் பெரிய அளவில் விளம்பரப்படுத்தப்பட்டு நிகழ்ச்சி ஒளிபரப்பப்படுவதும் நமக்கெல்லாம் தெரியும்.

சில சந்தேகங்கள் :

இது ராணுவம் சம்பந்தப்பட்ட ஒரு வீர சாகசப் பயிற்சி. இது ஏன் பொதுமக்கள் முன்னிலையில் நடத்தப்பட வேண்டும்? நம் ராணுவ பலத்தின் ஒரு பகுதியைப் பொது மக்கள் காண வேண்டும் என்பதற்காகத்தான் இந்நிகழ்ச்சி என்றால், பத்திரிகைகளிலும், டி.வி.யிலும் இது வரும்போது எதிரிகள் 'ஓஹோ... அப்படியா?' என்று நம் ராணுவ பலத்தை சூசகமாகப் புரிந்து கொள்ள மாட்டார்களா? ராணுவ ரகசியம் வெளியிடப்படுவது போல் இது ஆகாதா?

சென்னை கோட்டையில் ராணுவ அமைச்சக மக்கள் தொடர்பு அதிகாரி கே. வெற்றிச்செல்வன் அவர்களைச் சந்தித்தபோது 'உங்கள் சந்தேகங்களைப் போக்க சரியான நபர் லெப்டினண்ட் ஜெனரல் ஐ.எஸ். கில் அவர்கள்தான். பாரசூட் சாகசங்களில் அவர் ஒரு அத்தாரிட்டி. அவரைச் சந்தியுங்கள்' என்று டெலிபோன் நெம்பர் கொடுத்தார்.

'வெல்கம் மை ஸன்' என்று லெப்டினன்ட் ஜெனரல் இந்தர்ஜித் சிங் கில் அவர்கள் அன்போடு கைகுலுக்கி வரவேற்ற போது அந்த 75 வயது கரங்களில் இரும்பின் பலம்! ராணுவ மிடுக்கு, தடையில்லா ஆங்கிலம்.

"முதலில் பாரசூட்டின் பூர்வீகத்தைச் சொல்கிறேன். 18-ம் நூற்றாண்டின் இறுதியில்தான் பாரசூட் ஒரு செய்முறை காட்சியாகப் (டெமோ) பயன்படுத்தப்பட்டது. முதல் உலகப் போரின்போது பாரசூட் இல்லை. போர் விமானிக்கு பாரசூட்டின் உதவி கிட்டவில்லை.

"இர்விங் என்பவர்தான் முதலில் பாரசூட்டை நவீன முறையில் வடிவமைத்தவர். முதல் உலகப் போரின் இறுதிக் கட்டத்தில்தான் பாரசூட் மூலம் எதிரியின் களத்தில் வீரர்களை இறக்க முடியும் என்கிற விஷயம் புரிந்தது.

முதல், இரண்டாம் யுத்தங்களுக்கு இடைப்பட்ட காலத்தில், பாரசூட் வீரர்கள் கொண்ட தனிப்பிரிவு அமைந்தது ரஷ்யாவில்தான். இரண்டாம் போரில் பாரசூட் சரியாக முறையாகப் பயன்படுத்தப்பட்டது. இந்தியாவும் பாரசூட் ரெஜிமெண்ட் ஏற்படுத்தியது.

"பாரசூட் வீரர்கள் சர்க்கஸ் வீரர்கள் அல்ல. பாரசூட் ரெஜிமெண்ட் சர்க்கஸ் கம்பெனியும் அல்ல. மேலேயிருந்து குதிப்பது வித்தை காட்டும் நிகழ்ச்சி என்று கருதி விடக்கூடாது. எங்களைப் பொறுத்தவரை போக்குவரத்துக்கு குதிரைகள் போல், வாகனங்கள் போல் பாரசூட்டும் ஒரு வசதி.

"இந்தியாவில் முதல் பாரசூட் பிரிகேட் 1941 அக்டோபரில் பிறந்தது. பாரா பிரிகேட் என்போம். ஆக்ராவில் ஆரம்பிக்கப்பட்டது. தரைப்படையைச் சேர்ந்ததுதான் இப்பிரிவு.


"பாரசூட் பிரிவு வீரர்களுக்கு இங்கே பயிற்சி தரப்பட்டு வெவ்வேறு பெட்டாலியன்களுக்கு அனுப்பப்படுவார்கள். பெங்களூரிலும் பாரசூட் ரெஜிமெண்ட் இருக்கிறது. பத்து வருடங்களுக்கு ஒருமுறை ரீயூனியன் என்று ஒரு நிகழ்ச்சி நடக்கும். ஓய்வு பெற்றவர்களும், இப்போது சர்வீஸில் இருப்பவர்களும் சந்தித்து மகிழும் நிகழ்ச்சி."

"பொது மக்கள் முன்னிலையில் இச்சாகசங்கள் நடப்பதால், எதிரிகள் நம் ராணுவ பலத்தை, ரகசியத்தைத் தெரிந்து கொள்ள ஏதுவாகாதா?"

"ரகசியம் எதுவும் இதில் இல்லை. உலக ராணுவ பத்திரிகைகளில் அனைத்து நாடுகளின் ராணுவ பலம் பற்றிய விவரங்கள் அக்குவேறு ஆணிவேறாகப் பிரசுரிக்கப்படுகின்றன. ரகசியம் எல்லாம் அந்தக் காலம். சரி, நீ வேண்டுமானால் மூடி மூடி வைத்துக் கொள்ளலாம். அதனால் என்ன லாபம்? வெளியே தெரியாமல் போய் விடுமா? தலைக்கு மேலே ஆகாயத்தில் ஐம்பதுக்கு மேல் சாடிலைட்டுகள் சுற்றிக் கொண்டிருக்கின்றன தெரியுமில்லையா? கட்டளையிட்டால் சத்தம் போடாமல் உன் வீட்டு பெட்ரூமைப் படம் எடுத்து அனுப்பிவிடும். இந்த நிலையில் எந்த ரகசியத்தை எப்படி வைப்பது? எனவே இந்த பாராடைவிங் காட்சிகளால் ராணுவத்துக்கு பாதிப்பு ஏதும் இல்லை."

"சில சமயங்களில் விபத்துகள் ஏற்படுகின்றனவே. விலைமதிக்க முடியாத ராணுவ வீரர்கள் இப்படிப்பட்ட காட்சிகளின் போது ஊனப்படுவது உங்களுக்கு உடன்பாடு தானா? இந்த வயதிலும் 1993-ல் நீங்கள் குதித்தபோது உங்களுக்கே எலும்பு முறிவு ஏற்பட்டது."

"அது நான் செய்த ஒரு பேட் லேண்டிங். சின்ன காயம்தான். தேவையில்லை. ஒன்று நிச்சயமாகச் சொல்வேன். பாரசூட்கள் நூறு சதவீதம் உத்தரவாத




• கில்

## ஏன் பிடிக்காது?



வர் தீவிர அ.தி.மு.க.காரருங்க. அவருக்கு முகஸ்துதி பிடிக்காது!"

"ஆச்சரியமா இருக்கே!"

"இதிலே ஆச்சரியம் என்ன? அவருக்கு மு.க.ஸ்துதி எப்படிப் பிடிக்கும்?"

– கே.சி. நாராயணன்

## பேபி! பேபி!!

டெல்லி டெலிஃபோன் எக்ஸ்சேஞ்சிலிருந்து ஒரு பெண் ஆப்பரேட்டர் மார்க்சிஸ்ட் கட்சி அலுவலகத்தின் டெலிஃபோன் இணைப்பைச் சரி பார்க்க ஃபோனில் கூப்பிட்டு, "யார் பேசுவது?" என்று கேட்டார். அங்கிருந்தவர் 'பேபி' என்றார் மெதுவாக. அப்பெண் கோபமாக, "யார் என்பதைச் சொல்லுங்கள்" என்றபோது, மீண்டும் உரக்க 'பேபி' என்றார். இன்னொரு முறை அப்படி அழைத்தால் புகார் செய்வேன் என்று அப்பெண் கத்த, மறுமுனையில் பேசியவர், "அம்மணி! நான் எம்.எ. பேபி பார்லிமெண்டு உறுப்பினர் பேசுகிறேன். உங்களுக்கு என்ன வேண்டும்?" என்றதும் அந்த ஆப்பரேட்டர் விதிர் விதிர்த்துப் போனார்!

- அ. ஷண்முகசுந்தரம்

● எல்லா துன்பங்களும் மரணத்தோடு முடிந்து விடுகின்றன. எல்லா விதமான மகிழ்ச்சியும் கல்யாணத்தோடு முடிந்து விடுகின்றன.

– கே.ஆர். ரவீந்திரன்

மானவை. ஐந்து லட்சத்தில் ஒன்று வேண்டுமானால் சரியான சமயத்தில் குடை விரியாமல் ஃபெயில் ஆகலாம். மற்றபடி விபத்துக்குக் காரணம் ராணுவ வீரன்தானே தவிர பாரசூட்டாக இருக்க முடியாது. தவறான பயிற்சி, சரியில்லாத லாண்டிங் போன்ற ஏதேனும் ஒன்று காரணமாக இருக்கலாம்."

"பாரசூட் மீது இவ்வளவு காதல் கொண்டுள்ள உங்களின் சாகச வாழ்க்கையில் சவாலான சம்பவம் ஏதாவது...?"

"1942 செப்டம்பர், அக்டோபர் மாதங்களில் உலகப் போரின் போது கிரீஸ் நாட்டின் தென்பகுதியில் கிரீட் தீவு என்றழைக்கப்பட்ட பகுதியில் எங்களுக்கு – அதாவது என்னையும் சேர்த்து 12 பேர் – ஒரு கட்டளை இடப்பட்டது. அங்கே பாரசூட்டில் போய் இறங்கி ஒரு குகையில் தங்கி, அங்கேயே ஒளிந்திருந்து அங்கிருந்த கார்கோபோட்டோமாஸ் பாலத்தைத் தகர்த்து அழித்துவிட்டுத் திரும்ப வேண்டும் என்பதுதான் கட்டளை. இந்தப் பாலம் வழியே ரயில்வே லைன் ஏதன்ஸ் வரை நீண்டு போய்க் கொண்டிருந்தது. ஏதென்ஸிலிருந்து ஜெர்மானியர்கள் எகிப்துக்குத் தங்கள் துருப்புகளை சப்ளை செய்ய, அந்த ரயில்வே பாதை உதவியாக இருந்தது. எனவே அதைத் தகர்த்து விட வேண்டும் என்று எங்களை அனுப்பினார்கள். அப்போது எனக்கு இருபது வயது. இளமைத் துடிப்பு. சாதிக்க வேண்டும் என்ற வெறி. துல்லியமாக பாரசூட்டில் குதித்தோம். இலக்கை மிகச் சரியாகத் தாக்கி, பாலத்தைத் தகர்த்து விட்டுத் திரும்பினோம். இப்போது நினைத்தாலும் அந்த த்ரில்லான அனுபவம் என்னை புல்லரிக்க வைக்கும்."

அந்தத் தாக்குதல் நடந்து ஐம்பது ஆண்டுகள் ஆனதைக் குறிக்கும் வகையில் கிரேக்க அரசு 1992-ல் ஸ்ட்ரோம்னி என்ற கிராமத்தில் பொன் விழா கொண்டாடியது. அன்று பாரசூட்டில் குதித்த பன்னிரண்டு பேரில் உயிரோடு இருப்பவர்களை அழைத்து கௌரவித்தது. இவர்கள் அப்போது எந்தக் குகையில் ஒளிந்து கொண்டிருந்தார்களோ அந்தக் குகையில் சலவைக்கல் நினைவுக் கல்வெட்டுகளைப் பதித்தார்கள். லெப். ஜெனரல் இல் அந்த விழாவுக்குப் போயிருந்தார். ராணுவ மொழியில் இதுபோன்ற சந்திப்புக்குத்தான் 'ரீ யூனியன் டின்னர்' என்று பெயர்!

இம்மாதம் பெங்களூரில் ரீ யூனியன் டின்னருக்கான அழைப்பு இல்லுக்கு இல்லாமலா? பாரசூட்டில் போய் இவர் அங்கு குதித்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

- கஸ்தூரி

# ஹிட்லரின் டைரிகள்!



ஜெர்மனியில் பிரபலமான பத்திரிகைகளில் ஒன்று 'ஸ்டெர்ன்' என்பது. பதினைந்து வருடங்களுக்கு முன்னால் ஒருநாள் காலை அந்தப் பத்திரிகை நிர்வாகி, மற்றும் நான்கு பேர் கூடி, பரம ரகசியமான விஷயம் பற்றிப் பேசினார்கள். ஹிட்லரின் கையால் எழுதப் பட்ட மூன்று டைரிகள் பற்றித்தான் பேச்சு! அந்த டைரிகளைக் கண்டு பிடித்தவர் பத்திரிகை நிருபரான கெர்ட் ஹைடமான் என்பவர். அவர் டைரிகள் எப்படி கைக்கு வந்தன என்பதைச் சொல்லவில்லை; அவை கிழக்கு ஜெர்மனியிலிருந்து வந்தவை என்று மட்டும் குறிப்பிட்டார். பேச்சின் முடிவில் பத்திரிகை நிர்வாகி மான்பிரட் பிஷர் அந்த டைரிகளை இருபது லட்ச டாலருக்கு வாங்கிக் கொள்வதாகச் சொல்லி விட்டார்.

வாக்குக் கொடுத்தபின், அந்த டைரிகள் உண்மையானவைதானா என்பதைத் தெரிந்து கொள்ள பிஷர் விரும்பினார். இதற்காக இரண்டு கையெழுத்து நிபுணர்களை நாடினார். ஒருவர் சுவிட்சர்லாந்தில் போலீசுக்குப் புலனாய்வு செய்து ஓய்வு பெற்றவர், மற்றவர் அமெரிக்க நிபுணர். இருவரும் டைரிகளைப் பார்த்தனர்; அதிலிருந்த கையெழுத்தை ஹிட்லரின் மற்ற கையெழுத்துடன் ஒப்பிட்டனர். டைரிகள் ஹிட்லருடையவை என்று சொல்லி விட்டார்கள். இதைப் பதிப்பித்தால் நல்ல லாபம் வரும் என்று பிஷர் நினைத்தது சரிதான். ஆனால், அதுவரை அவர்கள் யாருக்கும் தெரியாத விஷயம் ஒன்று: கையெழுத்தை ஒப்பிட்டுப் பார்க்க வந்த ஹிட்லரின் மற்ற குறிப்புகளும் டைரிகள் வந்த அதே இடத்திலிருந்தே வந்தன என்பதுதான்!

இருபது லட்சம் டாலர் கை மாறியது. அதை வாங்கிக் கொண்ட ஹைடமானுடைய வாழ்க்கைத் தரமும் வெகுவேகமாக முன்னேறியது; புதுப்புது கார்கள், பெரிய மாளிகையில்

**சுவை**


"உங்க கதையை படிச்சுப் பார்க்கச் சொல்லி தினம் சித்ரவதை பண்றீங்களே! நியாயமா?"

"குடும்பம்னா அப்படித்தான்! நான் மட்டும் தினம் உன் சமையலைச் சாப்பிடலையா என்ன?!"


— உ. ராஜாஜி

வாழ்க்கை என்று சுகபோகம். டைரிகள் வெளிவரும் நாள் நெருங்க நெருங்க...

அமெரிக்காவில் அதற்கான விலையும் கூடியது. ஒரு பக்கம் லண்டனில் ரூபர்ட் மர்டாக் (டி.வி மற்றும் மீடியா பிரபலம்) முப்பது லட்சம் டாலர் தருவதற்கு முன்வர, இன்னொரு பக்கம் அமெரிக்காவில் நியூஸ்வீக் அதற்கு மேலே பணம் தருவதாகச் சொல்லவே, டைரிக்கு நல்ல வருமானம் வரும் என்பது நிச்சயமாகியது. இந்த சமயத்தில்தான் ரூபர்ட் மர்டாக் அந்த டைரிகளைப் பார்க்கப் போனார். போனவர் தன்னுடன் இங்கிலாந்து நாட்டு சரித்திர நிபுணர் ஹ்யூ டிரவர் - ரோப்பர் என்பவரையும் அழைத்துப் போனார். டிரவர் - ரோப்பர் ஹிட்லரைப் பற்றி நிறைய ஆராய்ச்சி செய்தவர். டைரிகள் நிஜமாகவே ஹிட்லருடையவை என அவர் உறுதி செய்தால் நம்பலாம். டிரவர்-ரோப்பருக்கு டைரிகள் பற்றி நிறைய சந்தேகங்கள் வந்தன. இருந்தாலும், பத்திரிகையாளர்களின் உந்துதலை ஏற்று, டைரிகள் உண்மையானவை என்று சொல்லிவிட்டார்!



இதற்குள்ளாக இன்னொரு பரிசோதனை நடந்தது. மேற்கு ஜெர்மனி போலீஸ் புலனாய்வு நிபுணர்கள், டைரிகளை 'எடை' போட்டனர். அவர்கள் ஹிட்லரின் கையெழுத்தைப் பற்றிக் கவலைப்படாமல், எந்தமாதிரியான தாள்கள் அந்த டைரிகளுக்குப் பயன்படுத்தப்பட்டன என்பதைக் கூர்மையாகக் கவனித்தார்கள். அல்ட்ரா வயலட் விளக்கில் பார்த்தபோது, ஆறு தாள்களில் ஒரு ரசாயனப் பொருள் அவர்கள் கவனத்தைக் கவர்ந்தது. அது 'பிளாங்கோஃபோர்' என்ற தாள்களை வெண்மையாக்கும் பொருள். இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு கண்டுபிடிக்கப்பட்ட ஒரு பொருள்! இது போன்ற தாள்களை ஹிட்லர் எப்படி உபயோகித்து இருக்க முடியும்? மேலும், டைரியை எழுதப் பயன்படுத்தப்பட்ட நான்கு விதமான மைகளும் ஜெர்மனியில் ஹிட்லர் காலத்தில் அதிகமாகப் புழக்கத்தில் இல்லை. டைரிகள் மிகச் சமீபத்தில் எழுதப்பட்டவை என்று நிரூபணமாகியது!



இதற்கெல்லாம் யார் காரணம் என்று தேடியபோது, கெர்ட் ஹைடமான் மேல் உடனே சந்தேகம் வந்து அவரை விசாரித்தார்கள். ஹைடமான் விஷயத்தை கக்கி விட்டார்! அவருடைய கூட்டாளி கான்ராட் கூசாவ் என்பவன், போலி குறிப்புகள் தயாரிப்பதில் திறமை வாய்ந்தவன் என்று தெரிந்தது. பிரபலமான ஓவியங்களை காப்பி அடிப்பதிலிருந்து ஹிட்லரின் டைரிகளைத் தயாரிப்பது வரை கூசாவ் கூசாமல் தன் புத்திக் கூர்மையைக் காட்டியிருந்தான் என்று தெரிந்தது. ஹைடமான், கூசாவ் இருவருக்குமே சிறைவாசம்!

ஒரு கோடி டாலருக்கும் மேலாக நஷ்டமடைந்தது மட்டுமல்ல... 'ஸ்டெர்ன்' பத்திரிகை நிறுவனத்துக்கு அன்றுவரை இருந்த பெயரும் புகழும் பெரிதாக பாதிக்கப்பட்டன!


— வாஷிங்டன் ஸ்ரீதர்

**ஓட்டம்**

"நீங்க எடுத்த படத்தை தன்னோட கதைன்னு சொல்லி கேஸ் போட்டாரே... அவரை எங்கே காணோம்?"

"படத்துல எங்கே கதை இருக்குன்னு காட்டச் சொல்லி கோர்ட்டுல நீதிபதி கேட்டதும் ஓடிட்டாரு."

— அம்பை தேவா



**23**

**வ**ள்ளி, அந்தக் கடைசிக் கருப்பு நாளை மீண்டும் நினைத்துக் கொண்டாள். அவளுக்கும் அவள் கணவனுக்கும் நேர்ந்த அந்தப் பிணக்கின் கடைசி வெடிப்பு அது.

அர்த்தநாரி, இதை எதிர்பார்க்கவில்லை. வள்ளியின் விலகல், நாளடைவில் சரிப்பட்டு விடும் என்றே அவன் நினைத்துக் கொண்டிருந்தான். அவள், அவனிடம் இருந்து முரண்படுகிறபோதெல்லாம், விவரம் தெரியாதவள் என்றே தப்புக் கணக்கு போட்டான். அன்றைய இரவு. அவன் எதிர்பாராத ஒரு வள்ளியை அவனால் பார்க்க நேர்ந்தது.

வழக்கம் போல, இரவு பத்து மணிக்கு மேல்தான் அர்த்தநாரி வீடு திரும்பினான். எப்போதும் இரவு, மோர்சாதம் மட்டுமே அவன் சாப்பிடுவான். அன்றும் மோர் சாதம் மட்டும் சாப்பிட்டபின், சுருட்டைப் பொருத்திக் கொண்டு பால்கனியில் வந்து அமர்ந்தான். ஒரு நாற்காலியை எடுத்து அவன் அருகில் போட்டுக் கொண்டு வள்ளியும் உட்கார்ந்தாள்.

"உங்களிடம் பேச வேண்டி இருக்கிறது" என்றாள் வள்ளி.

"உம்" என்றான் அவன். அவன் வாயிலிருந்து புகை வழிந்தது.

"நான் நேராகவே விஷயத்துக்கு வர்றேன். உங்க காரியங்கள் எனக்குப் பிடிக்கலை."

"என்ன காரியங்கள் பிடிக்கலை?"

"நீங்க லஞ்சம் வாங்கறது. அந்தப் பணத்துல நீங்க வாங்கிப் போடற பொருட்களோட நான் புழங்க வேண்டி இருக்கிறதும், லஞ்சப் பணத்துல, நீங்க வாங்கித் தர்ற அல்ல, லஞ்சம் கொடுக்கிறவன் கொடுக்கிற புடைவையை நான் உடுத்தறதும் எனக்குப் பிடிக்கலை."

அவன் சிரித்தான். மரங்கள் அசைகிறபோது எழும் மரமர சப்தம் போல, அவன் சிரிக்கும் ஓசை இருந்தது.

"இதை இவ்வளவு 'சீரியசா' எதுக்கு எடுத்துக்கணும், வள்ளி. லஞ்சம், யார் வாங்கலை? என் சீனியர் ஆபீசர்லே இருந்து, என் பியூன் வரைக்கும், அவன் அவன் லெவலுக்கு வாங்கத்தானே வேண்டி இருக்கு? கொஞ்சம் யோசிச்சு பாரு. ஒரு சங்கிலி மாதிரி, அடுக்கு அடுக்கா, இது எல்லா இடத்திலும் பரவி இருக்கு. நான் விரும்பினாலும் விரும்பலைன்னாலும், அதோடு என்னை நான் பொருத்திக்க வேண்டி இருக்கு. இல்லைன்னா, நான் 'மிஸ்பிட்' ஆயிடுவேன். எனக்கும் என் மேலதிகாரிக்கும் உறவு வில்லங்கமாயிடும். என் உத்தியோக வாழ்க்கையே பிரச்னை ஆயிடும்."

"இது உங்களுக்கு மாத்திரம் வருகிற சோதனையா, என்ன? உங்களை மாதிரி சபேசனும் கூட, ஒரு ஆபீசர்தானே? அவர் மட்டும், லஞ்சம் வாங்காமே இருக்கிறாரே?"

"அதனாலதான், சபேசன் ஆணி அடிச்ச மாதிரி ஆறு வருஷமா, ஒரே 'சீட்டிலே', பிரமோஷனே இல்லாமல் இருக்கான்னா, அது தான் காரணம். அவனையே பாரேன். மூணு நாளைக்கு ஒரே சட்டையைப் போடுற இன்ஜினியர் எவனாவது இருப்பானா? அவன் வீட்டையே கவனியேன். நல்ல சோபா செட் இருக்கா? நகைகள் இருக்கா? டெக் இருக்கா? திடீர்னு உடம்புக்கு ஏதாச்சும் வந்துடுத்துன்னா, 'அப்போலோவிலே அட்மிட் ஆறதுக்குப் பணம் வேண்டாமா? அப்புறம், வள்ளி, நீ பேசறதை என்னாலே புரிஞ்சுக்க முடியல்லை. இப்போ யார் வாங்கலை? துப்பாக்கி அளவுல இருந்த லஞ்சம், பீரங்கி அளவுக்கு வளர்ந்து நிக்குது. பெரிய பெரிய ஆட்கள் எல்லாம் வாங்கறப்போ, நான் 'பச்சா' தெரியுமா? அதோட, என்ன பெரிய விஷயம் இது? கொஞ்சம் அட்ஜஸ்மென்ட். இரண்டு வார்த்தையை மாத்தி எழுத வேண்டி வரும், அதிகாரிகளோட சம்மதத்துல. நமக்கு என்ன போச்சு. தோ பாரு... பொண்டாட்டியா லட்சணமா, நான் கொண்டு வந்து கொடுக்கிறதை

**பிரபஞ்சன்**

வாங்கிப் பெட்டியில வைவி. அப்புறம், இது மாதிரி பேசிக்கிட்டு இருக்காதே..."

இரவு, வரட்டி மாதிரி, கெட்டி தட்டிப் போய் விட்டிருந்தது. காற்று கூட இல்லாமல், மரங்கள் எழுதிய சித்திரமாகச் சலனமற்று இருந்தது. வள்ளி சொன்னாள்:

"என்னாலே அது முடியாது. நீங்க கொண்டு வந்து தர்ற பாவங்களை வாங்கி, பெட்டியிலே வச்சுப் பூட்ட என்னாலே முடியாது. அப்படிச் செய்யறது நீங்க செய்யிற தப்புகளுக்கு, நான் துணைபோகிற மாதிரி. முறையற்ற பணத்துல என்னாலே சமைக்க முடியாது. உடுத்தவும் முடியாது. எனக்குப் பயமா இருக்கு. அருவருப்பா இருக்கு."

அர்த்தநாரிக்கும் சங்கடமாகத்தான் இருந்தது.

"ஏன்தான் இப்படி இருக்கியோ? எல்லாரையும் போல இரேன். வள்ளி, திருடன் மனைவி கூட, சந்தோஷமா குடும்பம் நடத்தறாளே."

"அவள் நடத்தலாம். ஏன்னா, திருடன், திருடனா மட்டுமே வாழறான். நீங்க, இன்ஜினியர்னு அறியப் படறீங்களே."

அவன் கருட்டைத் தூக்கி எறிந்தான்.

"என்னதான் உன் முடிவு வள்ளி?"

"எனக்கு, உங்களைப் பற்றி யோசிக்க வேண்டி இருக்கு."

"எதைப் பற்றி யோசனை?"

"நாம் இப்படியே தொடர்ந்து வாழ முடியுமான்னு."

இது அவனுக்கு அதிர்ச்சி தந்தது.

"அப்படீன்னா, என்னைப் பிரியப் போறேங்கறியா?"

"ஆமாம். உங்களுக்கும் இதுதான் நல்லது. நீங்களும் யோசிச்சு ஒரு முடிவை எடுக்கலாம்."

"எதைப் பற்றி?"

"உங்க வாழ்க்கைப் போக்கை மாத்திக்கப் போறீங்களா, அல்லது என்னை இழந்துடப் போறீங்களான்னு...."

"நீயே முடிவு எடுத்துட்டியா?"

"இல்லை. நான் உங்களோட இருக்கத்தான் இப்பவும் நினைக்கிறேன். நீங்க, லஞ்சத்தோடு இருக்கிறவரைக்கும், நான் உங்களோட இருக்க முடியாது."

"எங்கே போறே?"


"ஏதாவது பெண்கள் விடுதியிலே இருப்பேன்."

"சாப்பாட்டுக்குப் பணம்?"

"நான் சம்பாதிக்கிறேன்."

"ஓகோ. அந்த தைரியமா? எல்லாம் அந்த பேரென்ன - சண்முகம் கொடுத்த தைரியம் தானே?"

"யாரும் எனக்கும் எதுவும் கொடுக்க வேணாம். எதையும் வாங்கிக்கிற நிலையில் நான் இல்லை. இலவசமா, என் சம்மதம் இல்லாத பொருளை, அவன் கொடுத்தாலும், காண்டிராக்டர் கொடுத்தாலும், அல்லது



சண்முகம் கொடுத்தாலும், என்னை அது இழிவுபடுத்தறதாத்தான் அர்த்தம்."

"புதுசா பேசறயே... இதையெல்லாம் எப்போ கத்துக்கிட்டே?"

"புதுசாக் கத்துக்கிடலை. என்கிட்டே இருந்ததுதான். இப்போதான் சொல்ல சந்தர்ப்பம் வாய்ச்சது."

வாயடைத்துப் போனான் அர்த்தநாரி.

"இப்படி நடந்துக்கிறது, ஒரு குடும்பப்

பெண்ணுக்கு அழகுன்னு நினைக்கிறியா?"

"சரின்னு நினைக்கிறேங்க. ஒரு குடும்பத் தலைவர், தப்பான வழியில..."

"உஸ்... என்னை நீ விமர்சிக்க வேண்டியது இல்லை. என்ன பண்ணப் போறியோ, என்ன முடிவு எடுத்து இருக்கையோ, அதைச் செயல் படுத்து."

அவன், தன் அறைக்குள் சென்று, கதவைச் சாத்திக் கொண்டான்.

இரவு முழுக்க பால்கனியிலேயே அமர்ந்திருந்தாள், அவள்.

தெருவில், ஜனநடமாட்டம் சுத்தமாகக் குறைந்திருந்தது. சினிமா முடிந்த தியேட்டர் மாதிரி, தெரு, வழித்துக் கழுவிய பாத்திரம் போல் சுத்தமாக இருந்தது. சினிமா முடிந்தது... எனக்கும் அவருக்குமான உறவும் கூட இப் படிப்பட்டதுதானா? படிக்க வேண்டும், பெரிய வேலைக்குப் போக வேண்டும் என்று கனவு கண்டவள் அவள். இந்த முடிவு, இவ்வளவு சீக்கிரம் நேரும் என்று கருதியவள் இல்லைதான்.

மரங்களில் இருந்த 'சில் வண்டுகள்' ரீங்காரம் செய்து கொண்டிருந்தன. இலைகள் எப்போதேனும் சலசலத்துக் கொண்டிருந்தன. தனக்குள் உறைந்து போய் அமர்ந்திருந்தாள் வள்ளி.

"சண்முகம் கொடுத்த தைரியம்."

கட்டு விட்டது, வார்த்தைகள். மிகச் சுலபமாக, பெண்ணை ஒடுக்கப் பயன்படுத்தும் வார்த்தைகள். ராமசீதா செய்ததுதானே? காலம் காலமாக ஆண்கள் செய்து விடுபவைதானே? என்றாலும் மனசுக்குள் தீக்கங்கு புகைந்து கொண்டிருந்தது. இரவுக்கு என்று ஒரு வாசனை இருக்கிறது என்று, அவள் உணரத் தொடங்கும் விதமாக, கதம்பமாக வாசனைகள் வந்து கொண்டிருந்தன.

தழைகளின் வாசனை. பூக்களின் வாசனை. மண்ணும் பனியும் சேர்கையில் எழும் வாசனை.

மனிதர்களுக்கு என்ன வாசனை? சோப் பும், பவுடரும், ஷாம்பும், ஸ்பிரேயும் தருகிற வாசனையா? மனிதச் சுபாவம் ஏற்படுத்தும் வாசனையா?

அவள் நிதானமாக எழுந்தாள். படி இறங்கி, பிந்து வீட்டுக்கு வந்தாள். கதவு பூட்டப்பட்டி ருந்தது. தட்டினாள். முதலில் விளக்கு எரிந்தது. கதவு திறந்து பிந்து எட்டிப் பார்த்தாள்.

"வள்ளியா.... வா. என்ன இந்த நேரத்துல?"

உள்ளே நுழைந்த வள்ளிக்கு, நாற்காலியில் அமர்ந்ததும் அழமட்டுமே தோன்றியது. முகத்தை மூடிக் கொண்டு அழுதாள். பிந்து, அழுது முடியட்டும் என்று அமைதியாகக் காத்திருந்தாள். வள்ளி சமாதானம் ஆனபின் கேட்டாள்.

"சொல். என்ன பிரச்னை?"

நடந்ததைச் சொன்னாள்.

"நான் செய்தது சரிதானே, பிந்துக்கா?"

"சரி, ரொம்பச் சரி. உனக்குத் தோணினது, ரொம்ப உயர்ந்த நினைப்பு."

"நாளைக்கே, விடுதிக்குப் போயிடலாம்னு இருக்கேன்."

"செய். ஆனா..."

"என்னக்கா."

"சண்முகம் பற்றின தெளிவுக்கு வந்துட்டே, இல்லையா?"

"நிச்சயம். சண்முகம், எனக்கு முதலாளி மட்டுமே. மற்றபடி எதுவும் இல்லை."

"அது தப்பு இல்லை. அல்லது சரி என்று எல் லாம் நான் சொல் லலை. உன்



## ஆம்லெட்



''என்னோட கச்சேரியைக் காரசாரமா விமர்சனம் பண்ணியிருக்கீங்களே, உங்களால ஒரு கச்சேரி பண்ண முடியுமா?''

''என்னால் முட்டை கூட இட முடியாது தான்; ஆனால் ஆம்லெட் போடறதைப் பற்றி கோழியை விட எனக்கு நன்றாய்த் தெரியுமே!''

– சு. சரவணன்

## ரிட்



''முன்னாள் அமைச்சர் ரிட் பெட்டிசன் போட்டிருக்கிறாராமே! எதற்கு?''

''நீதி மன்ற உத்தரவுப்படி அவர் வீட்டு வாசல்ல ''தண்டோரா'' போடுவதற்குப் பதில் அந்தஸ்து கருதி, பெரிய வித்வானுடைய தனித் தவில் கச்சேரி நடத்தணுமாம்!''

– நாஞ்சில் சு. நாகராஜன்

முடிவு, உன் சிந்தனையா, நீ மட்டுமே யோசிச்சு எடுத்த முடிவாக இருக்கணும்னு நான் சொன்னேன்."

"எனக்குக் கொஞ்சம் மயக்கம் ஏற்பட்டது வாஸ்தவம்தான். இப்போ, தெளிவடைஞ்சுட்டேன். நிச்சயம், அவன் இதில் இல்லை."

"சாப்பிட்டியா...?"

"இல்லை."

"ஏன்?"

"மறந்துட்டேன்."

பிந்து, தேனீரும் பிஸ்கட்டும் கொண்டு தந்தாள்.

"போதுமா, சமைக்கட்டுமா?"

"வேணாம்கா. இது போதும்."

வள்ளி சாப்பிட்டு முடித்தாள்.

"வள்ளி. இனி, என்ன மாதிரி பிரச்னைகள் வரும்னு சொல்றேன். கேள். உன் வீட்டுக்காரன், நீ கோவிச்சுக்கிட்டு போயிட்டேன்னு செய்தியைப் பரப்புவான். காரணம், உன் ஒழுக்கம் சரி இல்லைம்பான். உனக்கும், சண்முகத்துக்கும் கள்ளத் தொடர்பு இருக்குன்னு சொல்லுவான். அவனோட நீ ஓடிப் போயிட்டேன்னு கதை கட்டுவான். நீ எங்கே தங்கி இருக்கையோ, அங்கே வந்து கலாட்டா பண்ணுவான். அல்லது, அந்த விடுதி ஓனர்கிட்டே சொல்லி உன்னைக் காலி பண்ணச் சொல்லுவான். சண்முகத்துக்குப் பிரச்னை ஏற்படுத்த முயல்வான்..."

"எனக்கும் புரியுது, பிந்து. இதை நானும் எதிர்பார்த்துகிட்டுதான் இருக்கேன்."

"மனம் தளர்ந்துடாதே."

"ஒரு கட்டத்துல, மனம் மாறி வந்தா, நீ ஏத்துக்குவே, இல்லையா."

"ஆமாம். நிச்சயமா ஏற்றுக்குவேன்."

"இந்த உறுதி இருந்தா போதும். நீ வாழறதுக்கும், போராடறதுக்கும் இது உறுதி சேர்க்கும்."

"என்னை இப்படிக் கேவலப்படுத்திட்டு அப்புறம், என்னோட சேர்ந்து வாழ அவர் விரும்புவாரா?"

"கஷ்டம். அதுக்கு நீ தயாராகணும்."

"இருக்கேன்."

''வள்ளி. இப்படி வைச்சுக்கலாம். வாழ்க்கை, உனக்குக் கொடுத்திருக்கிறது, ஒரு கப் டீ! இதை நீ அருந்தணும். சிந்தக்கூடாது. வீணாக்கக் கூடாது. இதை எப்படி, ஆற வைச்சா, சூடாவா, இப்பவோ அப்பவோ, நீ குடிக்கலாம். அது உன் சுதந்திரம். உன் வாழ்க்கையிலே, நீ நிறைய ஆண்களை எதிர்பட வாய்ப்பு அனேகம். பிடிச்சவனோட கைகோத்துக்கோ. இல்லை, தனியாத்தான் இருக்கணும்னா, இருந்துக்கோ. அதுவும், உன் விருப்பம்."

தலையசைத்து, பிந்து சொல்வதைக் கேட்டுக் கொண்டிருந்தாள், அவள்.

பிந்து, அவள் தோளைப் பற்றிக் கொண்டு சொன்னான்.

"ஒரு விஷயம்."

"சொல்லுங்கக்கா."

"இனிமேதான் நீ வாழப் போறே."

வள்ளியின் புருவங்கள் உயர்ந்தன.

"ஆமாம். வாழறதுன்னா, ஒரு கூரைக்குள்ளே, அவனுக்காகச் சமைச்சு, அவன் துணியைத் தோய்ச்சுப் போட்டு, அவனோட படுத்துக்கிட்டு, அவன் கண்ணாடியா, நீ அவன்கிட்டே முகம் பார்த்துக்கிட்டு, அவனுக்காக மணியைத் திருப்பி வைச்சுக்கிட்டு, அவன் வருகையை எதிர்பார்த்துக்கிட்டு, அவனைப் பற்றியே யோசிச்சுகிட்டு.... இது அல்ல வாழ்க்கை...."

வள்ளிக்கு பிரமிப்பாய் இருந்தது.

"வேற எதுக்கா?"

"உனக்கா, நீ சாப்பிடறது. உனக்கா நீ உடுத்திக்கிறது. உனக்கா, நீ பாட்டு கேட்கிறது. உனக்கா, நீ வேலை செய்யறது. உனக்கா, நீ தூங்கறது. உனக்கா நீ யோசிக்கிறது."

"ஆனா, பெரியவங்க..."

"அதை விடு. பெரியவங்க சொல்ற மாதிரி, உன் சுயத்தை நீ அழிச்சுக்கிட்டு, உன்னை மாத்திக்கிட்டியா? அவன் அலைவரிசையில, உன்னால சேர முடிஞ்சதா?"

"இல்லை."

"அதை மீறுகிற தெம்பு இருக்கு. மற்றதைப் பற்றி மட்டும் என்ன கவலை?"

"எனக்குக் குழந்தை இருந்தா?"

"இருந்தா, என்ன? அதுவும் கஷ்டப்படும். அது ஒரு பிரச்னையா? நீ உன்னை உருவாக்கிக்கவே இந்த பாடுபடறே? உனக்கு என்னத்துக்கு குழந்தை? ஊருல குழந்தைகள் இல்லையா? நிறைய செடி வளர். தோட்டம் போடு. எதையாவது வளர்க்கணும்னா, செடி வளர்த்துடு. நகம் வளர்த்துக்கோ..."

வள்ளி சிரித்தாள்.

"என்னாலே சிரிக்கவும் முடியும்னு நான் நினைக்கலை."


பிந்து, அலமாரியைத் திறந்து மீண்டான்.

"இந்தா. இதுல, ஐயாயிரம் இருக்கு. நல்லவேளை, வேற செலவுக்கு எடுத்தாந்தேன். உனக்குப் பயன்படட்டும்."

வள்ளி, நன்றியுடன் பிந்துவின் கைகளைப் பற்றிக் கொண்டாள்.

(தொடரும்)

## கோலி



"என்ன மிஸ்டர், பந்தை ஒரு அளவுக்கு மேலே தேய்க்காதீங்கன்னு சொன்னா கேட்காமல் இப்படி கோலி குண்டு சைஸுக்குக் குறைச்சுட்டீங்களே!"

– பாஸு

## சிக்கனம்




"கார்டு விலை பதினைந்து காசுல இருந்து இருபத்தைந்து பைசாவாக உயர்ந்தாலும் உயர்ந்தது..."

"அதுக்காக...?"

"ஒரே கார்டுல எழுபத்தைந்து ஜோக் எழுதி அனுப்பறாங்க!"

– வந்தவாசி பா. ஜெயக்குமார்

## கெட்டி!





"சே, அந்தாளு சரியான கஞ்சனா இருப்பான் போலிருக்கு."


"என்னாச்சு சார்?"

"500 ரூபாய் லஞ்சம் கேட்டா 499.50 கொடுத்துட்டு, 'கவர் 50 பைசா சார்'னு கணக்கு சொல்லிட்டுப் போறான்!"

– சீர்காழி வி. ரேவதி


ஸ்மார்ட் செம ஸ்மார்ட்!
கருத்து: ஜாலி
படம்: செல்வம்
இது வரைக்கும், உங்க டியூஷன் பசங்களுக்கெல்லாம் கேள்விகளை 'லீக்' பண்ணி, நல்லா பரீட்சை எழுத வெச்சுட்டீங்க! இப்ப பப்ளிக் எக்ஸாம்ல என்ன பண்ணுவீங்க சார்?
நாளைக்கு ஸ்கூலுக்கு மினிஸ்டர் வராரு!
எங்களையெல்லாம் அவரை பூ தூவி வரவேற்க வெயில்ல நிறுத்தி வெச்சீங்கன்னா, ஹியூமன் ரைட்ஸ் கமிஷனுக்கு புகார் பண்ணுவேன்னு ஹெச்.எம். கிட்ட சொல்லிடுங்க சார்!
இன்னும் ஒரு மாசத்துக்கு டெய்லி ஐஸ்க்ரீம் வாங்கித் தரியா, இல்லை 'வெள்ளைப் படை' போலீசிடம் அடி வாங்கியதை உங்கப்பா கிட்ட சொல்லிடவா...?


எனக்கு எண்ணூறு ரூபாய்க்கு டிரஸ் எடுத்து தரமாட்டே. ஆனா, முழுசா எண்பதாயிரத்தை ஏதோ பைனான்ஸ் கம்பெனில போட்டு, நஷ்டப் படுவே! உன்னைப் புரிஞ்சுக் கவே முடிய லையே!
வாசல்ல யாரு?
மூணு கிலோ சோப்பு பவுடர் வாங்கினா, ஊதுபத்தி இனாம்னு ஒரு லேடி வந்திருந்தாங்க. நானே அபசி சமாளிச்சு அனுப்பிடறேன், நீ வர வேணாம்.
உங்க அம்மாவுக்கு நல்ல படியா டெலிவரி ஆகணுமேன்னு கவலையா யிருக்கு
கவலையே படாதே பாட்டி! அந்த லேடி டாக்டர் கைராசிக்காரங்க! தினம் நாலு சிசேரியன் பண்றாங்க...
அப்பா! நானும் பார்க்கிறேன். உன் ஸ்கூட்டர் ஒரு நாள் கூட முதல் உதையில ஸ்டார்ட் ஆக மாட்டேங்குதே! ஏன்?



# தாஜ்மகால்.

# இங்குதான், **உங்கள்** வருங்கால **ரகசியம்** ஒளிந்திருக்கிறது.

இந்தியப் பாரம்பரியத்தின் சின்னமாய் விளங்கும் தாஜ்மகால். அன்புக்கு மட்டுமல்ல காலம் கடந்து நிற்கும் நம் கலாச்சாரத்திற்கும் சான்றாய் ஆக்ராவில் யமுனை ஆற்றங்கரையில் உயர்ந்து நிற்கிறது. இதைப் போல், இந்தியப் பாரம்பரியத்தின்சான்றாய் விளங்கும் சின்னங்கள் எத்தனையோ! இந்த வரலாற்றுச் சின்னங்கள் தான் உங்கள் வெற்றிச் சின்னங்கள்.




* அறிமுகப்படுத்துவோர் பரிசு தற்போதைய சந்தாதாரருக்கு மட்டுமே.

## எப்படி என்றறிய ஆவலாயிருக்கிறதா?

தமிழ்ப் புத்தாண்டையும், இந்திய நாட்டின் 50ம் விடுதலையாண்டையும் கொண்டாட ஸ்ரீராம் சிட்ஸ் எண்ணியுள்ளது.

இந்த தமிழ்ப் புத்தாண்டில் ஸ்ரீராம் சிட்ஸின் சந்தாதாரர் என்கிற முறையில் உங்களுக்கு ஒரு பரிசு காத்திருக்கிறது. அது தவிர அடையாள பரிசுக் கூப்பன் ஒன்றையும் பெற்றிருப்பீர்கள். உங்கள் உறவினரையோ, நண்பரையோ, சக அலுவலரையோ ஸ்ரீராம் சிட்ஸின் புதிய சந்தாதாரராக அறிமுகப்படுத்தும்போது அந்த அடையாளக் கூப்பனை எடுத்து வாருங்கள். அறிமுகம் செய்த பின், பரிசுக் கூப்பன் அடங்கிய உறை ஒன்றை கிளை மேலாளரிடம் பெற்று கோடிட்ட பகுதியில் கத்தரியுங்கள். தாஜ்மகால், மகாபலிபுர கோயில் போன்ற பாரம்பரியச் சின்னத்தின் பெயர் ஒன்றையோ அல்லது 1000 என்ற எண்ணையோ காண்பீர்கள். அப்பெயருக்கு இணையான அறிமுகப்படுத்துவோர் பரிசினை, கிளை மேலாளரிடம் பெற்றிடுங்கள். SS பௌல் முதல் தங்க நெக்லஸ் வரை பரவசமூட்டும் பரிசுகளை* ]விருக்கிறீர்கள். அது மட்டுமல்ல! நீங்கள் அறிமுகப்படுத்துப ுண்பருக்கும் ஓர் அழகான சந்தாதாரர் பரிசு காத்திருக்கிறது.

நேரடியாய் சேரும் சந்தாதாரர்களுக்கும் பரிசு உண்டு.

பரிசுகளைப் பெற்று, எதிர்காலம் பற்றிய உறுதியான கனவுகளோடு வெற்றி நடை போடுங்கள்!

# ஸ்ரீராம் சிட்ஸ்

ஸ்ரீராம் சிட்ஸ் & இன்வெஸ்ட்மெண்ட்ஸ் லிமிடெட்.
ஸ்ரீராம் சிட்ஸ் தமிழ்நாடு லிமிடெட்.
'சுப்ரமணியன் பில்டிங்', 1, கிளப் ஹவுஸ் ரோடு, சென்னை-600 002.
போன் : 8520700, 8522651, 8523932, 8525536, 8520797.

இழப்பற்ற, அதிக லாபம் தரும், என்றும் ஏற்புடைய முதலீடு.

| | சீட்டு தொகை* | | சந்தாதாரர் பரிசுகள் |
|---|---|---|---|
| 1. | 250 X 40 | 10,000 | SS பைகோலை பாட் |
| 2. | 500 X 30 | 15,000 | SS CB நேக்லுர |
| 3. | 625 X 40 | 25,000 | கும்பகோணம் SS டிபான்ஸி கன்டெயினர்* |
| 4. | 500 X 60 | 30,000 | செல்லோ ஸ்டோர் கிப்ரெஷ் (3) |
| 5. | 1,000 X 50 | 50,000 | SS CB மூடியுடன் கூடிய பருப்புச் சட்டி |
| 6. | 2,500 X 30 | 75,000 | ப்ரேஸ்டீஜ் SS CB ப்ரஷர் பேன் |
| 7. | 2,500 X 40 | 1,00,000 | காஸி SS CB ஸ்கில்லெட்-200ml |
| 8. | 5,000 X 30 | 1,50,000 | ப்ரெஸ்டீஜ் சாட் பேன் (மூடியில்லாமல்)-200ml |
| 9. | 5,000 X 40 | 2,00,000 | ஹாக்கின்ஸ் நான் ஸ்டிக் கோட்டிங் தவா |
| 10. | 10,000 X 30 | 3,00,000 | ஜெமினி கிப்ட்செட் |
| 11. | 20,000 X 25 | 5,00,000 | ஸ்ரீராம் தங்க காசு |

* முன் அனுமதி பெறப்பட்டது

* நுழைவுக் கட்டணம் தனி

DHARAM 38997


கல்கி
அடுத்த இதழ் -
தமிழ்ப் புத்தாண்டுச் சிறப்பிதழ்....
ரா.கி. ரங்கராஜன்
கைவண்ணத்தில்
11:29
மூலம் : டானியல் ஸ்டீல்
உணர்ச்சிமயமான புதிய தொடர்கதை!
வார்த்தைச் சித்தர்
வலம்புரி ஜான்
வைர வரிகளில்
பைபிள் கதைகள்!


பிரபல எழுத்தாளர்கள்
வழங்கும்
வைட்டமின்
கதைகள்
— வாரம் ஒரு நட்சத்திர சிறுகதை!
அதிக
வண்ணங்களுடன்
அசத்தலாக
வருகிறது!
அசத்தும்
அழகு
ஸ்பெஷல்!
வாசகர்களுக்குப் புதிய போட்டி!
பரிசு ரூ. 50,000!

● சக்தி சரவணன்,
மோகனூர்.

? சுழற்சி முறையில் முதல்வர் பதவி மக்களுக்குப் பயன் தருமா?

! சம்பந்தப்பட்டவர்களுக்கு நிச்சயம் பயன்தரும்!


● அ. அருண் பிரகாஷ்,
பு. புளியம்பட்டி.



• மூவரில்...



• ...யாருக்கு...



• ...வெற்றி...?

# உ.பி.யில் வென்றது யார்...?

? காப்பி விலை உயர்ந்து கொண்டே போகிறதே...? தராசு இப்போது காப்பி குடிப்பதுண்டா?

! இந்த விஷயத்தில் நமது பலவீனம்தானே காப்பி உற்பத்தியாளர்கள், விற்பனையாளர்களின் பலம்!

● பி. ஜெயப்பிரகாஷ், சர்க்கார்பதி.

? 'கலைஞர் காட்டிய பாதையில் கண்ணை மூடிக் கொண்டு சென்றாலும் இலக்கை அடைய முடியும்' என அமைச்சர் பொன்முடி கூறியுள்ளது பற்றி?

! ஜெ கோஷ்டியின் ஜால்ரா ஓசை கேட்கிறது. கலைஞர் ஜாக்கிரதையாக இருப்பது நல்லது.

● ஜி. ராஜேந்திரன், வேலப்பநாயக்கவலசு.

? ஒரு பத்திரிகையின் வெற்றி – தோல்வி, நற்பெயர் – களங்கம்... இவற்றில் யாருக்குப் பங்கு அதிகம்...? பதிப்பாளருக்கா? ஆசிரியருக்கா?

! நற்பெயர் அல்லது களங்கத்துக்கு ஆசிரியர் பொறுப்பாகிறார். வெற்றி – தோல்வியில், நிறுவனத்தில் பணியாற்றும் அனைவருக்குமே பொறுப்பு உண்டு.

● ப. இராம் முருகன், சிவகங்கை.

? நியூயார்க்கில் தாக்கரேவுக்கு ரசிகர் மன்றம் அமைக்கிறார்களாமே?

! 'ஜெ' பெயரில் தெரு அமைத்த கதையோ என்னவோ!

● எஸ்.வி. பக்தவத்சலம், பெரியநொளம்பூர்.

? உ.பி.யில் பி.ஜே.பி. – பி.எஸ்.பி. உடன்பாட்டில் அமைந்துள்ள புதிய ஆட்சியைப் பற்றி...?

! உருப்படாது!

● ப. சங்கர், திருப்பூர். ❐

? உள்ளாட்சி அமைப்புத் தேர்தல்கள் முடிந்த பின்னரும் நாட்டின் நிலைமையில் எந்தவித மாற்றமும் தெரியாததற்கு என்ன காரணம்...?

! 29 மாவட்ட பஞ்சாயத்துகளுக்கே என்ன அதிகாரங்கள் என்பது இன்னும் தீர்மானமாகவில்லை என்கிறபோது, அதற்குக் கீழேயுள்ள உள்ளாட்சி அமைப்புகள் என்ன சாதிக்க முடியும்?! அதிகாரங்களைப் பரவலாக்க முதல்வர் என்ன செய்கிறார் என்பதைப் பொறுத்தே நிலைமை சீராகும்.

● ஆர். ராஜதுரை, சீர்காழி.

? தமிழகத்திலுள்ள பத்திரிகையாளர்கள், தங்கள் சக பத்திரிகையாளர்களுடன் நட்புறவு கொள்ளாமல், எதிரியாக பாவித்து, எழுத்து மூலம் மறைமுகமாகத் தாக்குகிறார்களே?

! எல்லாவற்றிலும் நல்லதையே பாருங்கள் என்றார் கன்ஃபூஷியஸ். நீங்கள் குமுதத்தில் வந்த விகடன் ஆசிரியரின் 'பறவைப் பிரியம்' பற்றிய கட்டுரையையும் தமிழன் எக்ஸ்பிரஸில் வந்த ரா. கி. ரங்கராஜனின் பேட்டியையும் படிக்கவில்லையா...?

● டி. என். இமாஜான், நாகூர்.

? கொசு, மூட்டைப்பூச்சி, ஜோக் எழுத்தாளர் – கடிப்பதில் யார் சிறந்தவர்?

! கேள்வி கேட்பதிலும் கடிக்க முடியும் என்று



• பிற...



• ...பத்திரிகைகளில்

நிரூபித்து விட்டீர்களே!


● எஸ்.ஏ.என். செந்தில்குமார், சூலூர்.

*? தமிழகத்தில் விவசாய மின்-சப்ளை நான்கு மணி நேரம் குறைக்கப்பட்டுள்ளதே?*

! இலவசமாகப் பெறுபவர்கள் நுகர்வோர் ஆக முடியாது. அதனால் விவசாயிகள் கேள்வி கேட்கும் உரிமையை இழந்து விடுகிறார்கள். வேறு வழியில்லை... மின் இலாகா 'மனமுவந்து' அளிப்பதைத்தான் அவர்கள் ஏற்க வேண்டும்.

● ப. ராஜா, செங்கல்பட்டு – 1.

*? பத்திரிகைகளின் தரம் குறைந்து வருவதைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?*



• கண்மூடித் தனம்!



• ஜெ.பாதையில்...!

! ஒரு விஷயம் மட்டும் குறையாது. கவலை வேண்டாம்... ...விலைதான்! யாராலும் குறைக்க முடியாது.

● அ. கிருஷ்ணகுமார், பு. புளியம்பட்டி.

*? கன்னிமரா நூலகத்தில் குளிர்சாதன வசதி செய்யப் போகிறார்களாமே?*

! வாசகர்கள் இன்னும் சுகமாகத் தூங்குவார்கள்.

● எம். வெங்கடாசலம், சேலம் – 1.

*? உத்திர பிரதேசத்தில் வெற்றி பெற்றது முலாயம் சிங்கா? கன்ஷிராமா? அத்வானியா?*

! சந்தர்ப்பவாதம்!

● கே.ஆர். வேலுச்சாமி, அன்னூர்.

*? வெயிலுக்கு இதமான பானம் எது...?*

! கொஞ்சமே கொஞ்சம் வெல்லத்தை வெந்நீரில் கரைத்து, வடிகட்டி, சுக்குத்தூள், எலுமிச்சை சாறு சேர்த்து குளிரூட்டி... அதாங்க பானகம்! சௌகரியப்பட்டால் ஏலப்பொடியும் சேர்க்கலாம்... கரைத்து, கலக்கும் பொறுமையெல்லாம் இல்லாவிட்டால் இருக்கவே இருக்கிறது இளநீர்! விலை தான் வருஷா வருஷம் தென்னை மர உசரத்துக்கு ஏறுது!

● எஸ். கே. சரவணன், மாயூரம்.

*? ஜாதி என்னும் எரிமலையை அணைக்கவே முடியாதா?*

! எரிமலையாவது ஒரு காலகட்டத்தில் தானாக அடங்கிப் போய்விடுமாம்... ஆனால் ஜாதிப் பிரச்னை...! சமீபத்தில் பீஹார் தலைநகருக்கு வெகு அருகே பத்து தலித்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள்! அந்த மாநிலத்தில் உயர் வகுப்புப் பண்ணைக்காரர்கள் அடியாள் படை வைத்து இப்படிப்பட்ட கொடூரங்களை நிகழ்த்துவதாகச் செய்தி. ஒடுக்கப்பட்டவர்கள் சுயகௌரவமும் சுயச்சார்பும் உடையவர்களாக மாறும் வரை இத்தகைய கொந்தளிப்புகள் இருக்கும். அதற்கு ஒருங்கிணைந்த கல்வி – பொருளாதார சீர்திருத்தங்கள் நடைமுறையாக வேண்டும். ஆனால் ஜாதி என்பது சுலபமாக வோட்டு பெற்றுத் தரும் மந்திரச் சொல்லாக இருக்கிறதே! அதை இழந்து விட அரசியல்வாதிகள் தயாராயில்லை.

● கே. சங்கர், திருச்சி – 8.

*? பெண்களின் அதிநவீன மாற்றம் பற்றி...?*

! தோற்றத்திலும் நடையுடை பாவனையிலும் உள்ள மாற்றங்களைத்தானே சொல்கிறீர்கள்? வளர்ந்து வரும் சமுதாயத்தில் அது ஒன்றும் ஆச்சர்யமில்லை. ஆண்களிடமும் அந்த நவீனத்தைப் பார்க்க முடிகிறது. மனத்தளவில் பெண்கள் முன்னேறியிருக்கிறார்களா? அச்சமின்றி, சுயமாகச் சிந்தித்து முடிவெடுக்கிறார்களா? அந்த உரிமை அவர்களுக்கு இருக்கிறதா..? அதற்கான தகுதியை அவர்கள் வளர்த்துக் கொண்டிருக்கிறார்களா...? ஆராய்ந்து மார்க் போட ஆரம்பித்தால் பெரும்பாலான பெண்கள் 'பாஸ்' ஆவது சந்தேகம்தான்.

❑ ரூ. 25 பரிசு பெறுபவர் :
ப. சங்கர்,
சன்சன்ஸ் நிட்வேர்,
11, சூசையாபுரம் விரிவு,
திருப்பூர் - 641 601.



• படத்தில் ஒரு காட்சி



• ஆண்டனி

# காதல் நோயாளி

அந்தக் கதை ஓர் இலங்கை எழுத்தாளருடையது. மைக்கேல் ஆண்டாட்ஸ் என்கிற அந்த எழுத்தாளர், அக்கதையை எழுதியபோது, நிச்சயம் பெரிய எதிர்பார்ப்புகள் ஏதும் இருந்திருக்க முடியாது. ஆனால் அந்த நாவலுக்கு, எழுத்துலகில் மிகப் புனிதமாகக் கருதப்படும் 'புக்கர்' பரிசு கிடைத்தது. காரணம் அந்நாவல் கையாளுகிற விஷயம்.

இரண்டாம் உலகப் போர் ஆரம்பித்த சமயம், இத்தாலியில் ஒரு மருத்துவமனையில் ட்ரீட்மெண்ட்டுக்காக வந்து சேரும் ஓர் ஆசாமியிடமிருந்து கதை தொடங்குகிறது. அவனது ஃப்ளாஷ்பேக் காதல் கதைதான் சமாசாரம். சாதாக் காதல் அல்ல, முறைசாராக் காதல்!

அகழ்வாராய்ச்சி செய்யும் நிபுணனான அவனது நண்பன் ஒருவனின் மனைவிக்கும் அவனுக்கும் உலகப் புகழ்பெற்ற அந்த மூன்றெழுத்து நோய் வந்து விட, அடுக்கடுக்கான அதிர்ச்சித் திருப்பங்களுக்குப் பிறகு மகத்தான காதல் தோல்வி!

கிட்டத்தட்ட மனநோயாளி ஆகி, மருத்துவமனையில் விழுகிறவனை அந்த ஆஸ்பத்திரியில் வேலைபார்க்கிற ஒரு நர்ஸ் மெள்ள மெள்ள மீட்டுக் கொண்டு வருவதுதான் கதை.

இந்த நாவலைப் படித்துவிட்டு, 'அட... சினிமா வாக்கலாமே' என்று நினைத்தார் ஆண்டனி மங்கெல்லா என்கிற இத்தாலி நாட்டு இயக்குநர்.

மெனக்கெட்டு உட்கார்ந்து திரைக் கதை சமாசாரங்களை எழுதி முடித்து விட்டு, தயாரிப்பாளர்களை அணுக, பேரதிர்ச்சி.

ஒருத்தராவது அதைப் படமாக்க முன்வரவில்லை. அமானுஷ்யமான விஷயங்களை ஆராய்ச்சி செய்யும் தொழில், கதாநாயகனுக்கு. காதல் தோல்வி (அதுவும் அடல்ட்ரி வேறு) ஹாஸ்பிடல் சூழல்... மிக மெதுவாகப் போகிற திரைக்கதை...

"அடப்போப்பா, இதையெல்லாம் ஒரு கதைன்னு பெரிசா எடுத்தாந்துட்டே. வேலையைப் பாரு!" என்று அந்த இயக்குநர் சந்தித்த தயாரிப்பாளர்கள் அத்தனை பேரும் அவரைத் திருப்பி அனுப்பி விட்டார்கள்.

ஆனால் ஆண்டனி சோர்வடையவில்லை. தன் படையெடுப்பை நிறுத்திக் கொள்ளவுமில்லை.

ஒருவழியாக, நீண்ட முயற்சிக்குப்பின் படம் உருவாகும் வாய்ப்பு கைகூடியது. ரால்ஃப் ஃபீனிஸ், கிரிஸ்டின் ஸ்காட்தாமஸ் இருவரையும் பிரதான வேடங்களில் போட்டுப் படத்தை ஆரம்பித்தார். நர்ஸ் வேஷத்துக்குப் பிரெஞ்சு நடிகை ஜூலியட்.

அப்போதும் தயாரிப்பாளர்களுக்கு அவநம்பிக்கைதான். 'இது எங்க உருப்படப் போகுது? நயாபைசா கலெக்ஷன் தேறாது!'

பூகம்பங்கள் பொய்ப்பாவது என்பது நடக்கிற விஷயம்தான். ஆனால் முற்றிலும் எதிர்பாராத அளவுக்கு உலகப் புகழும் பெயரும் பணமும் கொட்டோ கொட்டென்று அந்தப் படத்துக்குக் கொட்டித் தீர்த்தது.

'The English Patient' என்ற அந்தப் படம், இந்த வருடம் ஒன்பது ஆஸ்கார் அவார்டுகளை வாங்கிக் குவித்தது! ஹாலிவுட்காரர்கள் ஏக்கத்துடன் பார்த்திருக்க, சிறந்த படம், சிறந்த இயக்கம், சிறந்த துணை நடிகை, சிறந்த இசை, சிறந்த ஒளிப்பதிவு, சிறந்த எடிட்டிங்... அத்தனை பரிசுகளும் இந்த பிரிட்டிஷ் படத்துக்கு!

"நான் சிந்திய ஒவ்வொரு துளி வியர்வையும் உபயோகமானதாகி விட்டது குறித்து விவரிக்க என்னிடம் வார்த்தைகள் இல்லை" என்று மகிழ்வில் புல்லரிக்க பேட்டி கொடுத்தார் ஆண்டனி.

உங்கள் ஊர் வெள்ளித் திரையில் இந்த பேஷண்ட் வந்தால் போய்ப் பார்க்கத் தவறாதீர்கள்!


- ஆர்.பி.ஆர்.

பரதன் அச்சகத்தில் அச்சிட்டு, பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர் : கி. ராஜேந்திரன்.
ஆசிரியர் : சீதா ரவி.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி : ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; சந்தா, விளம்பரம் : 2345622; ஃபேக்ஸ் : 2345621.
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 156/-; வெளிநாடு - விமானத் தபால் ரூ. 1050/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 78/-; வெளிநாடு - விமானத் தபால் : ரூ. 525/-.

# பொன்னைப் போல் கோதுமை
# உங்கள் பொன்னான வாழ்வுக்கு !

சக்தி!

சத்து!



சலுகை!

சுவை!

**வாங்கத் தூண்டும் விலை**

ஒரு கிலோ
மைதா - ரூ.6.50

ஒரு கிலோ
ரவை - ரூ.6.60

ஒரு கிலோ
ஆட்டா மாவு - ரூ.5.50

• எவ்வயதினருக்கும் எந்தப் பருவத்திற்கும் ஏற்றவை கோதுமைப் பண்டங்கள் மற்றும் கோதுமைப் பொருட்களான மைதா, ரவை ஆட்டா மாவு ஆகியவை.




***கோதுமை மற்றும் கோதுமைப் பொருட்களை அரசு பொது விநியோக அங்காடிகளில் குறைந்த விலைக்கு வாங்கலாம். விரும்பும் உணவு வகை செய்யலாம்.**

தமிழ் நாடு அரசு
உணவுப் பொருள் வழங்கல் மற்றும்
நுகர்வோர் பாதுகாப்புத் துறை

TNWPP

தமிழ்நாடு கோதுமை உருளை மாவு ஆலைகள் சங்கம்
129 அ பிரிவு முதல் மாடி, சிவாலாயா கட்டிடம்
119, எத்திராஜ் சாலை, சென்னை - 105.
தொலைபேசி: 8265295, 8225248, 8225236.
தொலை நகல் (FAX): 8234569

அன்றாடம் கோதுமை உண்ணுங்கள்; ஆரோக்கிய வாழ்வை உறுதி செய்யுங்கள்



'அருணாச்சலம்'
– அசத்தல் ட்ரெய்லர்!